இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர்

**பாராளுமன்ற தொடர் இலக்கம் 71**

# அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் இரண்டாவது அறிக்கை
(2021 திசெம்பர் )

**பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் தவிசாளர்**

**கௌரவ அஜித் ராஜபக்ஷ அவர்களால்**

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி
சமர்ப்பிக்கப்பட்டது

**அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பணியாட்டொகுதி**

- திரு. சுதத் பெரேரா-குழுவின் செயலாளர்
- திரு. சாந்த பர்னாந்து – பிரதான உத்தியோகத்தர்
- திருமதி சந்திமா சுபசிங்க- பிரதி பிரதான உத்தியோகத்தர்
- திருமதி சியாமா அல்விஸ் - பிரதி பிரதான உத்தியோகத்தர்
- திருமதி ஓசிலா வீரகோன்- பிரதி பிரதான உத்தியோகத்தர்
- செல்வி கோசலா பிரியதர்ஷனீ- உதவி பிரதான உத்தியோகத்தர்
- திரு. நாமல் பர்னாந்து- உதவி பிரதான உத்தியோகத்தர்
- செல்வி இசுரி பிரேமசந்திர- பாராளுமன்ற உத்தியோகத்தர்
- திருமதி ருக்மணி தேவி – சிரேட்ட மொழி பெயர்ப்பாளர்
- திருமதி சதுரிக்கா பிரியதர்ஷனீ- சுருக்கெழுத்தாளர்

**அமைச்சின் செயலாளர்கள்**

- திருமதி கே.டி.ஒல்கா-வலுசக்தி அமைச்சு
- திரு.அநுராத விஜேகோன்-இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
- டாக்டர் திரு.எஸ்.எச்.முணசிங்க- சுகாதார அமைச்சு
- திரு.டபி.ஏ.சூலானந்த பெரேரா-கைத்தொழில் அமைச்சு
- ஜெனரால் தயா ரத்நாயக்க- கைத்தொழில் அமைச்சு
- திரு. எம்.பீ.டி.யூ.கே.மாப்பா பதிரண-தொழில் அமைச்சு
- திருமதி எம்.பத்ராணி ஜயவர்தன-வர்த்தக அமைச்சு
- திரு.ரவீந்திர ஹேவாவிதாரண-பெருந்தோட்ட அமைச்சு
- திரு.என்.பீ.எம்.ரணதுங்க -போக்குவரத்து அமைச்சு
- திரு.சிரிநிமல் பெரேரா-நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
- திரு.ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க -காணி அமைச்சு
- திரு.ஜே.ஜே.ரத்னசிரி-அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- (ஓய்வுபெற்ற) ஜெனரால் கமல் குணரத்ன -பாதுகாப்பு அமைச்சு
- திருமதி ஆர்.எம்.ஐ.ரத்நாயக்க -கடற்றொழில் அமைச்சு
- பேராசிரியர் திரு.கே.கபில சீ.கே.பெரேரா-கல்வி அமைச்சு
- திரு. ஜயந்த த சில்வா- தொழில்நுட்பவியல் அமைச்சு
- திரு.எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே- நீதி அமைச்சு

மாதாந்த அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கூட்டக் குறிப்புகள் பின்வருமாறு

| | **அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர்** | **திகதி** |
|---|---|---|
| 01. | மின்சக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2020.11.25 |
| 02. | இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2020.11.26 |
| 03. | சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2020.11.28 |
| 04. | கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2020.12.03 |
| 05. | தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2020.12.04 |
| 06. | வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு. | 2021.03.10 |
| 07. | பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.03.23 |
| 08. | போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.03.23 |
| 09. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.03.24 |
| 10. | காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.03.24 |
| 11. | அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.04.07 |
| 12. | பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.04.08 |
| 13. | கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.08.05 |
| 14. | கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.09.10 |

இதுவரை அங்கீகாரமளிக்கப்படாத காரணத்தினால் மாதாந்த அறிக்கையில் சேர்த்துகொள்ளப்படாத கூட்டக் குறிப்புகள் பின்வருமாறு

| | **அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர்** | **திகதி** |
|---|---|---|
| 01. | அமைச்சுகளின் கீழ் உள்வாங்கப்படாத அரச நிறுவனங்களால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட குழு | 2021.10.05 |
| 02. | தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.09 |
| 03. | காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.09 |
| 04. | பொது மக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.10 |
| 05. | கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.16 |
| 06. | பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.22 |
| 07. | இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.23 |
| 08. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.24 |
| 09. | கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.24 |
| 10. | தொழில்நுட்பவியல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.24 |
| 11. | வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.25 |
| 12. | சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.11.27 |
| 13. | அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.12.02 |
| 14. | வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.12.03 |
| 15. | போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.12.03 |
| 16. | கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.12.06 |
| 17. | பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.12.07 |
| 18. | நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2021.12.08 |

**வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**முதலாவது கூட்டம் – 2020 நவம்பர் 25**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ உதய கம்மன்பில (தவிசாளர்)
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ குணதிலக ராஜபக்ஷ

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ நிரோஷன் பெரேரா
கௌரவ சாங்க பண்டாரா
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ உதயன கிரிந்திகொட
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ வசந்த யாப்பாபண்டார
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

## 1. ஏனைய அலுவல்கள்

### 1.1 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 1.1.1 இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையக் கம்பெனியில் 180 சேவை நாட்களை நிறைவுசெய்த பணியாளர்களை நிரந்தரமாக்குதல்.

சகல ஆட்சேர்ப்புகளையும் இடைநிறுத்தம் செய்யும் சுற்றறிக்கை ஒன்றுக்கமைய இது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இந்த நியமனங்களை வழங்க முடியுமெனவும் இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையக் கம்பெனியின் பொது முகாமையாளர் (மனித வளம்) குழுவில் தெரியப்படுத்தினார்.

தேவையான நடவடிக்கையை மேற்கொண்டு, அடுத்து நடைபெறவுள்ள கூட்டத்தில் தெரியப்படுத்துவதாக கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது.

#### 1.1.2 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் கடமையிலிருக்கும் முகாமைத்துவ உதவியாளர்கள் சிலரையும் சாரதி ஒருவரையும் நிரந்தரமாக்குதல்.

இவ்விடயம் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கையை மேற்கொண்டு, அடுத்து நடைபெறவுள்ள கூட்டத்தில் தெரியப்படுத்துவதாக கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது.

#### 1.1.3 காங்கேசன்துறையை எரிபொருள் தரையிறக்குவதற்கு ஏற்றதாக அபிவிருத்தி செய்தல்

இவ்விடயம் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள திட்டவமைப்பின்படி, காங்கேசன்துறையில் நேரடியாக எரிபொருளைத் தரையிறக்க முடியுமென கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் குழுவில் தெரியப்படுத்தினார்.

மேலும், அமைச்சரவைத் தீர்மானத்திற்குப் புறம்பாக கைத்தொழில் அமைச்சின் கைத்தொழில் பேட்டை ஒன்றுக்குத் தேவையான காணியொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளதெனவும் மேலும் குறிப்பிட்டார்.

இது பற்றிய ஆவணங்களைப் பரிசீலிக்க வேண்டுமெனவும், அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்காக கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களால் தெரிவிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமெனவும் கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.1.4 கொலன்னாவ எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்தல்

நிர்மாணிக்கப்படவுள்ள 09 எண்ணெய்க் குதங்களில் 06 குதங்கள் பழைய கட்டடங்களை அகற்றிப் பெறப்படுகின்ற இடத்தில் நிர்மாணிக்கப்படவிருப்பதோடு, இன்றளவில் பழைய கட்டடங்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது. மேலும், புதிதாக நிர்மாணிக்கப்படும் குதங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த எண்ணெய்க் குதங்களுக்கான கணினி தகவல் முறைமையை (SAP) அவசியமான தகவல்களை எச்சந்தர்ப்பத்திலும் பார்வையிடக் கூடியதாகத் தயாரிக்க வேண்டுமெனவும் கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது.

மேலும், வாகனக் கண்காணிப்பு முறைமை (tracking system) ஒன்றின் முக்கியத்துவம் பற்றி கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.
கௌரவ உதயன கிரிந்திகொட

## 1.2 கௌரவ உதயன கிரிந்திகொட அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.2.1 எரிபொருள் கொண்டுசெல்வதற்கு புகையிரதத்தைப் பயன்படுத்தல்

எரிபொருள் கொண்டு செல்வதற்கு அண்மைக்காலத்தில் அதிகமாக பவுசர் பயன்படுத்தப்படுவதால் வாகன நெருக்கடி ஏற்படுவதால் நகரங்களுக்கிடையே எரிபொருள் கொண்டு செல்வதற்கு புகையிரதத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் சபையில் யோசனை தெரிவித்தார்.

பவுசர் மூலம் எரிபொருள் கொண்டு செல்லப்படுவதால் போக்குவரத்து நெருக்கடி, சுற்றாடல் மாசடைதல் மற்றும் ஆகுசெலவும் அதிகரித்துள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

புகையிரதம் மூலம் பொருட்கள் கொண்டுசெல்வதனை அதிகரிப்பதற்காக அதிக கொள்ளளவினைக் கொண்ட புகையிரத என்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டுமெனவும் புகையிரதத் திணைக்களத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

## 1.3 கௌரவ ஜானக வக்கும்புர அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.3.1 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இரவு 10 மணிக்கு மூடிவிடுதல்

இரத்தினபுரியிலிருந்து இங்கிரிய வீதி வழியாக கொழும்பு நோக்கி வரும்போது, அநேகமான சந்தர்ப்பங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை

எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்ட ஒரு தொலைவுக்கென எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றேனும் திறந்துவைத்தல் பொருத்தமானதெனவும் கௌரவ ஜானக வக்கும்புர அவர்களினால் முன்மொழியப்பட்டது.

ஒப்பந்தத்தின்படி 24 மணி நேரமும் திறந்துவைக்க வேண்டிய சில பிரதேசங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இவ்வாறு மூடப்படுவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரியப்படுத்தப்பட்டது.

முன்கூட்டியே மூடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் தகவல்களை வழங்குமாறு கௌரவ தவிசாளரால் அறிவிக்கப்பட்டது. இத்தகைய நேரங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறந்துவைத்தல் குறித்து ஆராய வேண்டுமெனவும், 24 மணிநேரமும் திறந்துவைக்க முடியாவிடின் பிரதான வீதிகளின் ஒருசில இடங்களில் 24 மணிநேரமும் திறந்திருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## 1.4 கௌரவ நிரோஷன் பெரேரா அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.4.1 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சில நேரங்களில் எரிபொருள் இல்லாமை

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சில நேரங்களில் எரிபொருள் தீர்ந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுவதால், கையிருப்பினை முகாமைத்துவம் செய்யும் வழிமுறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டுமென கௌரவ நிரோஷன் பெரேரா அவர்களினால் முன்மொழியப்பட்டது.
பேணிவர வேண்டிய ஆகக்குறைந்த கையிருப்புக்கான ஒழுங்குவிதிகளை வெளியிட வேண்டுமெனவும், தொடர்ச்சியாக சேவையினை வழங்கும்பொருட்டு எரிபொருள் நிரப்பு நிலையம் ஒவ்வொன்றிலும் தாங்கிகளின் கொள்ளளவு மற்றும் ஆகக்குறைந்த கையிருப்பு மட்டத்தைக் கவனத்திற்கொண்டு உரிய காலத்தில் இருப்புகளுக்கான தருவித்தல் கட்டளைகளை அனுப்ப வேண்டுமெனவும் கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது.

இதற்கென மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்துதல் பொருத்தமானதென கௌரவ நிரோஷன் பெரேரா அவர்களினால் குழுவில் முன்மொழியப்பட்டது.

ஆகக்குறைந்த கையிருப்புக் குறித்து ஏலவே ஓர் உடன்பாடு இருப்பதாகவும், காலை 7 மணிக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்திலுள்ள எரிபொருள் அளவினைத் தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரியப்படுத்தப்பட்டது.

ஏற்கெனவே பின்பற்றிய பண வைப்பிலிடலுக்கமைய எரிபொருள் வழங்கப்பட்ட வழிமுறையை மாற்றி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு 30 நாட்கள் கொண்ட ஒரு கடன் காலம் வழங்கப்பட்டுள்ளதால் பணம் அல்லது எரிபொருள் பிரச்சினைகள் ஏற்படாதென அவர் தெரிவித்தார். ஏதேனும் பிரச்சினை காணப்படின் அது குறித்து மீள ஆராயப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## 1.5 கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.5.1 மாற்று எரிசக்தி மூலங்களை நோக்கி நகர்தல்

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெரும்பாலும் நட்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனம் என்பதால் மாற்று எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவது முக்கியமானதென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மாற்று எரிசக்தி மூலமாக உயிர்வாயு உற்பத்தி, வாகனங்களுக்கான எரிபொருளுக்காக எதனோல் கலத்தல் குறித்தும் ஆய்வு செய்வதாக கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது.

குடிமனை சார்ந்து உயிர் எரிபொருளைத் தயாரித்துக்கொள்ளும் இயலுமை காணப்படுகிறதா என கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்கள் வினவினார்.

குடிமனை சார்ந்து உயிர் எரிபொருள் உற்பத்தி செய்வதற்காக, அலகொன்றை உற்பத்தி செய்வது குறித்து பொதுத் திறைசேரிக்கு பிரேரணை ஒன்றை முன்மொழிந்துள்ளதாகவும், அடுத்த ஆண்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அலகுகளை வீட்டுக் கூறுகளுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் கௌரவ தவிசாளரால் குழுவில் அறிவிக்கப்பட்டது.

### 1.5.2 எரிபொருளுக்கான கடனை முகாமைத்துவம் செய்தல் பற்றி வினவுதல்

சுமார் 550 பில்லியன் ரூபா ஆன கடன் தொகையை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்கள் வினவினார்.

பாரியதொரு கடன் தொகையை முகாமைத்துவம் செய்வதற்காகப் பின்பற்ற எதிர்பார்க்கும் திட்டங்கள் குறித்து கௌரவ தவிசாளரால் விபரிக்கப்பட்டது.

கடனை முழுமையாகச் செலுத்தித் தீர்ப்பதற்கான நீண்ட காலத் தீர்வாக, எமது நாட்டில் எண்ணெய் வளம் மற்றும் எரிவாயு உள்ளனவா என்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாகவும், மன்னார் கடல் படுக்கையில் எண்ணெய் வளம் மற்றும் எரிவாயு இயற்கையாகவே உள்ளதென அகழ்வாராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரியப்படுத்தினார்.

இன்றளவில் துறைசார் சிறப்பறிவுடைய வெளிநாடுகளில் பணிபுரிந்த நபர்களை பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்துள்ளதாகவும், எண்ணெய் வளம் மற்றும் எரிவாயு பற்றிய கொள்கைகள் வகுக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

முதலீட்டுப் பாதுகாப்புக் கருதி புதிய சட்டமொன்று கொண்டுவரப்படும் எனவும், பின்னர் அதற்குரிய ஏல நடவடிக்கைக்கான திட்டம் தயாரிக்கப்படுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

இதன்போது, எமது நாட்டுக்குக் கிடைக்கும் வருமான வாய்ப்புகள் குறித்து கௌரவ உதயன கிரிந்திகொட குழுவில் வினவினார்.

எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்படுகையில் அரசாங்கத்திற்கு வருமானத்தை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வழிமுறை குறித்த நீண்டதொரு விபரிப்பை கௌரவ தவிசாளர் குழுவில் முன்வைத்தார்.

இலங்கையில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லையா என கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்கள் வினவினார்.

அகழ்வுப் பணிகளைக் கைவிடாதவாறு முன்னெடுக்கத் திட்டங்கள் வகுக்கப்படுமென கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

ஏற்கனவே நாட்டிலிருந்து 10.5 மில்லியன் டொலர் ஆன தொகையைப் பெற்று அகழ்வுப் பணிகளை மேற்கொண்ட கம்பெனி, அகழ்வு நடவடிக்கை குறித்த தரவுகளையும் நாட்டுக்கு வழங்கவில்லையா என கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்கள் குழுவில் வினவினார்.

அது ஒரு பொய்யான தகவல் எனவும், குறித்த கம்பெனி எமது நாட்டுக்குக் கொடுப்பனவுகளைச் செலுத்தியுள்ளது எனவும் நாட்டில் எல்லாத் தரவுகளும் உள்ளன எனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.6 கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.6.1 மன்னார் பிரதேசத்தில் உயிர் வாயு உற்பத்தி

மன்னார் பிரதேசத்தில் தமது வீட்டுக் கழிப்பறையைச் சார்ந்ததாக உயிர் வாயுவை உற்பத்தி செய்து தமது வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் ஓர் இடம் காணப்படுவதாக கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

குறித்த நபரை அமைச்சுக்கு அறிமுகம் செய்து வைக்குமாறு கௌரவ தவிசாளரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன், குறித்த ஆக்கத்தினை கவனத்தில்கொண்டு மிகவும் வெற்றிகரமான ஆக்கம் ஒன்றை நோக்கிச் செல்ல முடியுமென தவிசாளரால் அறிவிக்கப்பட்டது.

### 1.6.2 "*கோவிட்-19*" காரணமாக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் காணப்படுகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பற்றி வினவுதல்.

*கோவிட்-19* காரணமாக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் காணப்படுகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா என கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களால் வினவப்பட்டது.

03 நாள் கடன் அடிப்படை மற்றும் 50% வங்கிப் பிணையொன்றுக்கு உட்பட்டதாக எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குழுவில் தெரிவித்தார்.

### 1.6.3 எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் பெயரை மாற்றுதல்

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை வேறு நபரொருவர் கொள்வனவு செய்துள்ளதாகவும், அதன் பெயரை மாற்றுவதற்கு அவசியமான எல்லா ஆவணங்களையும் இற்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளதாகவும் இதுவரை அதன் பெயர் மாற்றப்படவில்லை எனவும் கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் குழுவில் தெரியப்படுத்தினார்.

எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

## 1.6. கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.6.1 ஐ.ஓ.சீ. கம்பெனிக்கு வழங்கியுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை மீண்டும் எமது நாட்டு வர்த்தகர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை குறித்து வினவுதல்

அவர்கள் வசமுள்ள 204 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான 20 வருட ஒப்பந்தத்தின்படி, அவற்றை மீண்டும் எம் வசப்படுத்த முடியாதெனவும், எவ்வாறாயினும், ஒழுங்குறுத்தும் அதிகாரம் அமைச்சருக்கு இருப்பதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

சந்தையில் தற்போது நூற்றுக்கு 92 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளதோடு, ஐ.ஓ.சீ. இன் சந்தை 8 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**2.** குழுவானது பி.ப 3.15 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

**இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதலாவது கூட்டம் – 2020 நவெம்பர் 26**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ கேகை விகானகமகே (இராஜாங்க அமைச்சர்)(தவிசாளர்)
கௌரவ ஹர்ஷண ராஜகருணா
கௌரவ மிலான் ஜயதிலக்க
கௌரவ அஜித் ராஜபக்ஷ

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ கே. காதர் மஸ்தான்
கௌரவ சிவஞானம் சிறீதரன்
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ வருண லியனகே
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ லலித் எல்லாவல
கௌரவ உதயன கிரிந்திகொட
கௌரவ குலசிங்கம் திலீபன்
கௌரவ எச். நந்தசேன
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ நிமல் பியதிஸ்ஸ
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ வசந்த யாப்பாபண்டார
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ மதுர விதானகே
கௌரவ மர்ஜான் பளீல்

**1. கௌரவ உறுப்பினர்களின் முன்மொழிவுகள்**

**1.1 கௌரவ உதயன கிரிந்திகொட அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**1.1.1 பாடசாலை விளையாட்டுப் பயிற்றுனர்களுக்கு கொடுப்பனவு வழங்கல்**

நிலவும் கோவிட் தொற்றுக் காரணமாக, நாளாந்தக் கொடுப்பனவு பெறுகின்ற பாடசாலை விளையாட்டுப் பயிற்றுனர்களுக்கு கொடுப்பனவு கிடைக்காததால் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

பாடசாலை ஒவ்வொன்றிலும் இருக்கின்ற ஆலோசகர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, அவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

விளையாட்டு ஆலோசகர்கள் கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

### 1.1.2 விளையாட்டு ஆலோசகர்களின் கல்வி மட்டத்தை விருத்தி செய்தல்

விளையாட்டு ஆலோசகர்களின் கல்வி விருத்திக்கென பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தால் *ஸ்போட்ஸ் சயன்ஸ்* (Sports Science) என்ற பெயரில் நடத்தப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியினை மீண்டும் தொடங்கி, அதனை ஒரு பட்டமளிப்புக் கற்கை நெறியாக விருத்திசெய்ய வேண்டுமென கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான கலந்துரையாடல் நடைபெற்று வருவதாகவும், மூன்று தேசியப் பல்கலைக்கழகங்களில் விளையாட்டுக் கல்விக்கான பட்டங்கள் வழங்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.1.3 கண்டி தர்மராஜ கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல் பற்றிய முன்மொழிவு

கண்டி தர்மராஜ கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்கும்போது விளையாட்டரங்கத்தை அமைத்தலும் முக்கியமானதென கௌரவ உறுப்பினரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

## 1.2 கௌரவ லலித் எல்லாவல அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள் பண்டாரகம விளையாட்டு மைதானம் பற்றிய விடயங்கள்

களுத்துறை மாவட்டத்தில் இருந்த ஒரேயொரு 400 மீற்றர் ஓடுபாதையை கிரிக்கெட் விளையாட்டு மைதானமாக மாற்றியுள்ளதானது அங்குள்ள சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியென கௌரவ உறுப்பினரால் குழுவில் தெரிவிக்கப்பட்டது. மேலும், அதையொட்டி நடைப்பயிற்சிப் பாதை ஒன்றை அமைக்க வாய்ப்பு இருந்தது என்பதும் கௌரவ உறுப்பினரால் தெரியப்படுத்தப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சபையின் வேண்டுகோளுக்கு அமைய 400 மீற்றர் ஓடுபாதையைக் கொண்டுள்ள இந்த விளையாட்டு மைதானத்தில் ஏனைய விளையாட்டுகளுக்கான இட வசதியுடன் கிரிக்கெட் ஆடுகளத்தை அமைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமையதிபதியினால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

## 1.3 கௌரவ ஜயந்த சமரவீர அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.3.1 பாணந்துறை விளையாட்டு மைதானம் பற்றிய சிக்கல்

சுமார் 09 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பாணந்துறை விளையாட்டு மைதானத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி வேறு வியாபார நடவடிக்கைக்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினரால் குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், இதனை அபிவிருத்தி செய்து சுகததாச விளையாட்டு மைதானத்திற்கான பதிலீட்டு விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

இவ்விடயத்தில் இடையீடு செய்வதற்கான அமைச்சின் விருப்பத்தினை ஏற்கெனவே மாவட்டச் செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டதன் பின்னர், இதுகுறித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடி குறித்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்யும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியுடிமென அவரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## 1.4 கௌரவ அமரகீர்த்தி அதுகோரள அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.4.1 பொலனறுவை பிரதேசத்து விளையாட்டு மைதானங்கள் பற்றிய சிக்கல்கள்

சுமார் 250 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொலனறுவை தேசிய விளையாட்டு மைதானத்தின் உணவகம் பயன்படுத்தப்படாமலேயே அழிந்துபோகும் நிலை உள்ளதாக கௌரவ உறுப்பினரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

பொலனறுவை நகரை அண்டி காணப்படுகின்ற, இலங்கை மகாவலி அதிகாரசபைக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் சொந்தமான விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு வேலைத்திட்டம் அவசியமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்த விளையாட்டு மைதானத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பூரணப்படுத்துவதற்கு கௌரவ அமைச்சரால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

## 1.5 கௌரவ சுதத் மஞ்சுல அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.5.1 ருவன்வெல்ல பொது விளையாட்டு மைதான அபிவிருத்தி

சப்ரகமுவ மாகாணத்தில் ருவன்வெல்ல பொது விளையாட்டு மைதானத்திற்காக செயற்கை ஓடுபாதை (Synthetic Track) ஒன்றையும் நீச்சல் தடாகத்தையும் அமைத்துத்தருமாறும் அத்துடன் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறும் கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக விளையாட்டு அபிவிருத்தி அலுவலர் ஒருவர் இல்லாத காரணத்தால், அலுவலர் ஒருவரை இணைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

### 1.5.2 ருவன்வெல்ல ராஜசிங்ஹ மத்திய மகா வித்தியாலயத்தை விளையாட்டுப் பாடசாலையாக அபிவிருத்தி செய்தல்.

விடுதி வசதிகொண்ட ருவன்வெல்ல ராஜசிங்ஹ மத்திய மகா வித்தியாலயத்தை விளையாட்டுப் பாடசாலையாக அபிவிருத்தி செய்யுமாறு கௌரவ உறுப்பினரால் குழுவிடம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

### 1.5.3 இளம் தொழில்முயற்சியாளர்களுக்காக கிராமிய மட்டத்தில் உருவாக்கப்படும் கருத்திட்டம்.

வர்த்தக அமைச்சினால் நடைமுறைப்படுத்தவுள்ள கிராமிய மட்ட இளம் தொழில்முயற்சியாளர்களுக்கான "கியூ ஷொப்" (Q Shop) கருத்திட்டத்தில் செயலாற்ற விளையாட்டில் ஈடுபாடு கொண்ட ஒருவரை அமர்த்துவது பொருத்தமானதென கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

## 1.6 கௌரவ வருண லியனகே அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.6.1 இரத்தினபுரி விளையாட்டு மைதான அபிவிருத்தி

இரத்தினபுரி மாகாண சபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில் ஒருசில விளையாட்டுகளுக்கான திடல்கள் அமைக்கப்பட்டுள்ளபோதும் செயற்கை ஓடுபாதை அமைக்கப்படவில்லையென கௌரவ உறுப்பினரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது. அதனால் சப்ரகமுவ மாகாண விளையாட்டு விழாவை நடத்த முடியாதுள்ளதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மண்சரிவு காரணமாக பணிகள் முடங்கியபோதும், தற்போது விளையாட்டு மைதானம் பயன்படுத்தப்படுவதாக பணிப்பாளர் தலைமை அதிபதியினால் தெரியப்படுத்தப்பட்டது. நீச்சல் தடாகத்தின் வேலைகளை நிறைவுசெய்து மிக விரைவில் ஒப்படைப்பதாகவும் அவர் தெரிவித்தார். கிடைத்துள்ள வேண்டுகோளுக்கு அமைய இதனை வழங்க நேர்ந்தால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் வழங்குவதாக பணிப்பாளர் தலைமை அதிபதியினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மண்சரிவுக்கு உள்ளான பகுதியில் மதிலொன்றை நிர்மாணிக்கும் பணி தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தலைமை அதிபதியினால் தெரிவிக்கப்பட்டது.

### 1.6.2 விளையாட்டு ஆலோசகர்கள் பற்றிய முன்மொழிவு

பாடசாலை விளையாட்டு ஆலோசகர்களின் பூரண சேவைக் காலத்தினுள் பயிற்றுவிப்புகள் இடம்பெறாமை அவதானிக்கப்பட்டுள்ளதால், அதனை ஒழுங்குமுறைபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கௌரவ உறுப்பினரால் குழுவில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

விளையாட்டுகளுடன் தொடர்பில்லாத நபர்கள் விளையாட்டு ஆலோசகர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதால் பாடசாலை மாணவர்கள் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதாக கௌரவ மிலான் ஜயதிலக்கவினால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.
அத்தகைய விளையாட்டு ஆலோசகர்கள் சிற்சில அளவுகோல்களுக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தேசிய மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்தியவர்கள் எனவும் கௌரவ உறுப்பினரால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

## 1.7 கௌரவ மிலான் ஜயதிலக்க அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.7.1 கம்பஹா மாவட்டத்தில் பாடசாலை விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல்

கம்பஹா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு செயற்கை ஓடுபாதையை பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தின் அபிவிருத்தியானது கலந்துரையாடல் மட்டத்தில் இருப்பதோடு, கம்பஹா மாவட்டத்திற்கு பிரத்தியேகமான ஓர் அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்த உள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.
பிரதேச செயலாளர் பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒரு விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

### 1.7.2 உத்தேச புதிய விளையாட்டுப் பாடசாலைகள்

புதிதாக உருவாக்கவுள்ள விளையாட்டுப் பாடசாலைகள் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

கல்வி அமைச்சுடன் இணைந்து விளையாட்டுப் பாடசாலைகளைத் தெரிவு செய்வதாகவும், இந்த ஆண்டில் குறித்த பாடசாலைகளுக்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

### 1.7.3 கம்பஹா மாவட்டத்தின் நெதுந்வல பிரதேசத்திலுள்ள இளைஞர் படையணி வளாகத்தை ரக்னாலங்கா கம்பெனிக்கு ஒப்படைத்தல் பற்றிய பிரச்சினை

இளைஞர் யுவதிகள் பயிற்சி பெறும் இந்த வளாகத்தை ரக்னாலங்கா கம்பெனிக்கு ஒப்படைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், அந்தக் கம்பெனிக்கு மாற்று இடமொன்றை வழங்குதல் பொருத்தமானது எனவும் கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

தெஹிஓவிற்ற, கனங்கம பிரதேசத்தில் மூடப்பட்ட ஒரு பாடசாலையை இளைஞர் படையணி வளாகமாக மாற்றியுள்ளபோதும், தற்போது வரை பயன்தரும் எதுவும் நடக்கவில்லையென உறுப்பினரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

இளைஞர் படையணிகள் இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் நிர்வகிக்கப்படுவதில்லையென இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

இவ்விடயத்தை ஆராய்ந்து குழுவுக்குத் தெரியப்படுத்துவதாக அமைச்சின் செயலாளரால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.7.4 நடைப்பயிச்சிப் பாதை நிகழ்ச்சித் திட்டம் செயற்படுகின்ற விதம் பற்றி வினவுதல்.

நடைப்பயிச்சிப் பாதை நிகழ்ச்சித் திட்டம் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பதை தெளிவுபடுத்துமாறு கௌரவ உறுப்பினரால் குழுவில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.
இவ்விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் உறுப்பினரை விழிப்புணர்வு செய்வதாக கௌரவ தேனுக விதானகமகேயினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

## 1.8 கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.8.1 கிராமிய இளைஞர்களை விளையாட்டில் ஈடுபாடுகொள்ளச் செய்தல்

கிராமிய இளைஞர்களை விளையாட்டில் ஈடுபாடுகொள்ளச் செய்யும் வகையில் கரப்பந்து விளையாட்டுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குமாறு கௌரவ உறுப்பினரால் குழுவில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

### 1.8.2 பிரதேச செயலாளர் பிரிவு ஒன்றுக்கு விளையாட்டு வசதிகள் கொண்ட ஒரு பாடசாலையை உருவாக்குதல்.

ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு குறைந்தபட்சம் ஒரு விளையாட்டுப் பாடசாலையை விருத்திசெய்யுமாறு கௌரவ உறுப்பினரால் குழுவில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.
தேசிய மற்றும் போட்டிநிலைப் பாடசாலைகள் விளையாட்டுப் பாடசாலைகளாக மாறியுள்ளன எனவும், 08ஆம் தரத்திற்காக விளையாட்டு வீரர்களைக்கொண்ட புதிய வகுப்பொன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.

பிரசித்தப் பாடசாலைகளுக்குச் சென்றுள்ள மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுவது சந்தேகத்திற்குரிய விடயமாக இருப்பதாக கௌரவ வருண லியனகேயினால் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் தவறான வழிகளில் 08ஆம் தரத்திற்குப் பிரவேசிப்பதைத் தடுக்க வேண்டும் எனவும், இந்த வாய்ப்பினை விளையாட்டு வீரர்களுக்கு மாத்திரம் வழங்க வேண்டும் எனவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

## 1.9 கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.9.1 பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியம் தொடர்பாக கவனம் செலுத்தல்

மாணவர்களின் ஆரோக்கியம் நலிவடைந்துள்ளதால் 10,000 மீற்றர் ஓட்டம் போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், எனவே பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

### 1.9.2 கராத்தே போன்ற விளையாட்டுகளில் திறமையுள்ள பிள்ளைகளைக் கண்டறிதல்

கராத்தே போன்ற விளையாட்டுகளில் திறமையுள்ள பிள்ளைகளைக் கண்டறிந்து அவர்களுக்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினரால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.9.3 அத்தனகல்ல வத்துபிட்டிவல இளைஞர் படையணி நிலையத்தைச் சுற்றி மதில் அமைத்தல்

வத்துபிட்டிவல இளைஞர் படையணி நிலையத்தை தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றியுள்ளதற்கு பிரதேசவாசிகள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருப்பதால் அதனைச் சுற்றி மதில் அமைப்பதில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

### 1.9.4 கம்பஹாவில் இரண்டு தேசியப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

வேயன்கொட பண்டாரநாயக்க வித்தியாலயம் மற்றும் ஹொரகொல்ல சங்கபோதி வித்தியாலயம் ஆகிய இரண்டு தேசிய பாடசாலைகளில் விளையாட்டுக்கான வசதிகள் குறைவாக உள்ளதால் இப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்யுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.
இதையொட்டி எழுத்திலான முன்மொழிவொன்றைச் சமர்ப்பிக்குமாறு கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

### 1.9.5 பிரதேசத்தில் விடுதிகளில் வசிக்கும் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு விளையாட்டு மைதானமொன்றைப் பெறல்.

பிரதேசத்தில் விடுதிகளில் தங்கியிருக்கும் ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர்கள் விளையாடுவதற்காக மாத்தலான கனிஷ்ட பாடசாலைக்குச் சொந்தமான பாரிய விளையாட்டு மைதானத்தை கட்டணமொன்றை அறவிட்டுக்கொண்டு வழங்க முடியுமாயின் அது பாடசாலையைப் பராமரிப்பதற்கும் பயனுள்ளதாக அமையுமென கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

### 1.9.6 வத்துபிட்டிவல விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள்

வத்துபிட்டிவல விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

இந்த விளையாட்டு மைதானத்தின் பணிகள் கண்காணிக்கப்பட்டதுடன் நீச்சல் தடாகம், விளையாட்டு மைதானத்தையும் விளையாட்டு அரங்கத்தையும் ஒரு மாத காலத்தினுள் பணிகளை நிறைவுசெய்தளிக்க ஒப்பந்தக்காரர் இணங்கியதாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரால் குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. உள்ளக அரங்கின் பணிகளை நிறைவுசெய்ய 03 மாதங்கள் அவசியமெனத் தெரிவிக்கப்பட்டதாகவும் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் விளையாட்டு மைதானத்திற்கு வருவதற்கு கௌரவ அமைச்சரால் உத்தேச பேருந்து சேவையொன்றை ஆரம்பிப்பதன் மூலம் அந்தச் சிரமத்தையும் தவிர்க்க முடியுமென அவரால் தெரிவிக்கப்பட்டது.

#### 1.9.7 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த யுவன் யுவதிகளுக்கான வேலைத்திட்டமொன்றை அறிமுகம் செய்தல்

இளைஞர் கழகங்களைச் சேர்ந்த இளம் பிள்ளைகளுக்கு வேலைத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல் முக்கியமானதென கௌரவ உறுப்பினரால் சபையில் முன்மொழியப்பட்டது.

#### 1.9.8 இளைஞர்களின் திருமண முறிவு ஊடாக ஏற்படுகின்ற சமூக சீர்கேடு

இளைஞர்களின் திருமண முறிவு ஊடாக ஏற்படுகின்ற சமூக சீர்கேட்டினைத் தவிர்ப்பதற்காக ஏதேனும் நடவடிக்கையை பின்பற்ற வேண்டுமென கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

#### 1.9.9 பாரம்பரிய கைத்தொழில்களைக் கட்டியெழுப்புதல்

பாராம்பரிய கைத்தொழிலாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்ய வேண்டுமெனவும், கடன் வசதிகளை வழங்க வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

இவ்விடயம் தொடர்பான முன்மொழிவொன்றைச் சமர்ப்பிக்குமாறு கௌரவ இராஜாங்க அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

### 1.10 கௌரவ லலித் எல்லாவல அவ்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 1.10.1 பிரதேசத்திலுள்ள இளைஞர்கள் அதிகளவில் போதைப்பொருளுக்கு அடிமையாதல்

பண்டாரகம பிரதேசத்தில் போதைப்பொருளுக்கு அடிமையான நபர்கள் அதிகம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும், இதற்குத் தீர்வாக விளையாட்டு மைதானமொன்றை அமைக்க வேண்டுமென முன்மொழிவதாகவும் கௌரவ உறுப்பினரால் குழுவில் முன்மொழியப்பட்டது.

இவ்விடயம் சம்பந்தமான முன்மொழிவொன்றைச் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

**2.** குழுவானது பி.ப. 1.00 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

## சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
## முதலாவது கூட்டம் – 2020 நவம்பர் 28

**சமூகமளித்த குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி (தவிசாளர்)
கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண
கௌரவ அப்துல் ஹலீம்
கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த
கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

**சமூகமளித்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ பிரசன்ன ரணதுங்க
கௌரவ எம்.யூ.எம்.அலி சப்ரி
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ தயாசிறி ஜயசேகர
கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ விஜித பேருகொட
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ டி.பீ.ஹேரத்
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ சாந்த பண்டார
கௌரவ காதர் மஸ்தான்
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ எம்.ஏ. சுமந்திரன்
கௌரவ வேலு குமார்
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ திஸகுட்டி ஆரச்சி
கௌரவ ஜகத் குமார
கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி
கௌரவ கருணாதாச கொடிதுவக்கு
கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்
கௌரவ சாமர சம்பத் தசநாயக்
கௌரவ சுதர்சன தெனிபிட்டிய
கௌரவ எச்.நந்தசேன
கௌரவ முதிதா பிரசாந்தி
கௌரவ சுதத் மஞ்சுள
கௌரவ எஸ். எம். முஸ்ஸாரப்
கௌரவ வசந்த யாப்பா பண்டா
கௌரவ பீ.வை.ஜீ.ரத்னசேக்கர
கௌரவ அஜித் ராஜபக்ஷ
கௌரவ குணதிலக்க ராஜபக்ச
கௌரவ மதுர விதானகே
கௌரவ வீரசுமன வீரசிங்க
கௌரவஎம்.எம். சமன்பிரிய ஹேரத்
கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க
கௌரவ ரன்ஜித் பண்டார
கௌரவ மொஹமட் முசாமில்
கௌரவ மர்ஜான் பலீல்

## 1. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்

## 1.1 கௌரவ ஜானக வக்கும்புர அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.1.1 அயகம வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்தியர், நோயாளியை வைத்தியசாலையில் சேர்த்துக்கொள்வதற்கு மறுப்பு தெரிவித்தல்

அயகம பிரதேச மக்களின் கோறிக்கைக்கு அமைய குறித்த வைத்தியசாலைக்கு வேறு வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றிய எழுத்துமூல கோறிக்கையொன்றை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

**1.2 கொழும்பு மாவட்டத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு இந்திக்க ஜாகொட வின் நடவடிக்கைகள்- கௌரவ மதுர விதானகே**

குறித்த விடயம் பற்றிய ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குழுவில் அறிவித்தார்.

**1.3 கௌரவ குணதிலக்க ராஜபக்ஸ அவரிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**1.3.1 கண்டி பொது வைத்தியசாலைக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்**

குறித்த வைத்தியசாலைக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலம் அப்பிரதேச மக்களால் கைப்பற்றப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் வைத்தியசாலையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.3.2 கண்டி- ஹாரிஸ்பத்துவ, அக்குரண, புலுகொடதென்ன பிரதேசங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தல்.**

அப் பிரதேசத்தில் செய்யப்படும் பீசீஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.4 கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**1.4.1 கொவிட் நோய் (COVID) தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சுகாதார ஆலோசனைகள் சரியான முறையில் பின்பற்றப்படவேண்டியதன் முக்கியத்துவம்-**

நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பும் , ஊக்கமும் அத்தியாவசியமானதென அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று பற்றி கலந்தாலோசிப்பதற்காக குழுவொன்றை நியமிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் ஊடாக தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ளலாம் என கௌரவ தவிசாளரினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**1.5 கௌரவ (கலாநிதி) ஹர்ச த சில்வா அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**1.5.1 பாராளுமன்ற உணவகத்தில் உணவுகளை பகிர்வது தொடர்பில் உணவக பிரிவின் ஊழியர் ஒருவரை கடமையில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம்**

மேற்குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதன் தற்கால தேவை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர், ஆலோசனைக் குழுவின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

அவ் விடயம் தொடர்பிலான சுகாதார வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ தவிசாளர், மேலதிக செயலாளருக்கு (பொது மக்கள் சுகாதார சேவைகள்) ஆலோசனை வழங்கினார்.

## 1.6 கௌரவ ஜகத் குமார அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.6.1 சன நெருக்கடியான கிராமத்தில் தாபிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தை வேறு இடத்தில் தாபிப்பதன் அவசியம்

குறித்த தனிமைப்படுத்தல் நிலையம் தொடர்பில் மக்கள் எதிர்ப்பு தெரிவித்துவருவதால் அதனை வேறு இடத்தில் தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றிய நடபடிமுறைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

## 1.7 கௌரவ பிரசன்ன ரணதுங்க அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.7.1 மினுவாங்கொடை வைத்தியசாலைக்கு புதிய பிணியாளர் வண்டியொன்றைப் பெற்றுக்கொள்ளல்

மினுவாங்கொடை வைத்தியசாலைக்கு புதிய பிணியாளர் வண்டியொன்றைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.7.2 கம்பஹா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலை மட்டத்திற்கு தரமுயர்த்தல்

திறைசேரியினால் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்துக்கு அமைய மாகாண சபைகளுக்குச் சொந்தமான வைத்தியசாலைகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.8 கௌரவ வீரசுமண வீரசிங்க அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.8.1 கொவிட் தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக கிராமிய மட்டத்தில் பொறிமுறையொன்றை தயாரித்தல்

பிராந்திய மட்டத்திலான குழுக்களை நியமிப்பதன் ஊடாக இந் நிலையினை கண்காணிக்க முடியுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.9 கௌரவ மதுர விதானகே அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.9.1 உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் கொவிட் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதன் அவசியம் .

உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் கொவிட் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதன் அவசியத்தை கௌரவ உறுப்பினர் குழுவில் வலியுறுத்தினார்.

### 1.9.2 பொது மக்கள் சுகாதார பரிசோதகர் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்தல்

அது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

## 1.10 கௌரவ விதுர விக்கிரமநாயக்க அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.10.1 பிராந்திய கொவிட் குழுக்களை கூட்டுவதன் அவசியம்

பிராந்திய கொவிட் குழுக் கூட்டங்கள் கூடுவதனை கட்டாயப்படுத்துவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.11 கௌரவ லசந்த அலகியவன்ன அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.11.1 கிராமிய மட்டத்திலான கொவிட் தனிமைப்படுத்தும் பொறிமுறையில் பல பிரிவுகள் இணைவதால் ஏற்படும் செயற்பாட்டு ரீதியான சிக்கல்கள்

கிராமிய மட்டத்திலான கொவிட் தனிமைப்படுத்தும் பொறிமுறையில் இலங்கை பொலிசு, பிரதேச செயலாளர், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் (MOH) மற்றும் பொது மக்கள் சுகாதார பரிசோதகர் (PHI) ஆகியோரின் தகவல் பரிமாற்றத்தின்போது முரண்பாடுகள் எழுவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தர்.

## 1.12 கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.12.1 மன்னார் மாவட்ட ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவையும் அவசர சிகிச்சைப் பிரிவையும் புனரமைத்தல்

மன்னார் மாவட்ட ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவும் அவசர சிகிச்சைப் பிரிவும் நுறு வருடங்களுக்கு மேல் பழையவையெனவும் அவற்றுக்கு பதிலாக புதிய கட்டிடங்களை கட்டியெழுப்புமாறும் அவ் வைத்தியசாலைக்கான சீ.டி. ஸ்கேன் இயந்திரமொன்றைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.12.2 வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த செட்டிக்குளம் ஆரம்ப வைத்தியசாலைக்கு கனிஷ்ட வைத்திய உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்

குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் மேலதிக செயலாளருக்கு (பொது மக்கள் சுகாதார சேவைகள்) ஆலோசனை வழங்கினர்.

## 1.13 கௌரவ முஜிபர் ரஹ்மான் அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.13.1 வட கொழும்பு மற்றும் மத்திய கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் பீசீஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

பீசீஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் அப் பிரதேசத்தில் தொடர் மாடிவீடுகளில் வசிப்பவர்களுக்கு Rapid Antigen பரிசோதனைகளை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

நாடலாவியரீதியில் தினமும் 11,000 Rapid Antigen பரிசோதனைகள் செய்யப்படுவதாகவும் அவற்றுள் அதிகமானவை கொழும்பை அண்டிய பிரதேசங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் செய்யப்படுவதுடன் உடனடி Rapid Antigen பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதி தொற்றுநோய் நிபுணத்துவர் குறிப்பிட்டார்.

#### 1.13.2 கொழும்புக்கு அண்டிய பிரதேசங்களில் இறக்கும் முதியவர்களின் பீசீஆர் பரிசோதனை அறிக்கைகளை விரைவில் வழங்குவதற்கான பொறிமுறையொன்றை அமைத்தல்

அச் செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்வதற்கான பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இஸ்லாமியர்களின் பூதவுடல்களில் பீசீஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான சிறியளவிலான ஆய்வுகூடமொன்று திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

### 1.14 கௌரவ (டாக்டர்) ஜீ. ரத்னசேக்கர அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

#### 1.14.1 தம்பதெனிய தனிமைப்படுத்தல் நிலையத்திலும் நாரம்மல, அம்பன்பொல ஆகிய வைத்தியசாலைகளிலும் மலசல வடிகாலமைப்புத் தொகுதி பெருகுவதால் எழுந்துள்ள பிரச்சினைகள்

குறிப்பிட்ட பிரச்சினைக்கு விரைவில் தீர்வளிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.15 கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வாஅவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

#### 1.15.1 சுவசெரிய பிணியாளர் வண்டிச் சேவை

சுவசெரிய பிணியாளர் வண்டிச் சேவை தொடர்பில் 2021 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைப்பு வலையமைப்பொன்றின் (Substantive network) கீழ் 48 நிலையங்களைத் தாபிப்தற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந் நட்வடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 1.16 கௌரவ எஸ் சிறீதரன் அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

#### 1.16.1 தீவுகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கான வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

வடக்கில் நெடுந்தீவு, அனலதீவு, நைனாதீவு, எழுவதீவு, ஆகிய தீவுகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக நிரந்தர வைத்தியர்கள், தாதிகள் மற்றும் அலுவலர்கள் பற்றாக்குறை நிலவிவருவதாகவும் பிணியாளர் வண்டிச் சேவைக்கான படகுகள் இல்லையெனவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

வைத்தியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

#### 1.16.2 கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவொன்றைத் தாபித்தல்

கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவொன்று இல்லையெனவும் அங்கு அதனை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

#### 1.16.3 வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகளின் பிரச்சினைகள்

வடமாகாண சுகாதார சேவையைச் சேர்ந்த சாரதிகளை நிரந்தர சுகாதார சேவைக்கு உள்ளீடு செய்யுமாறு அவர்களால் கோரப்பட்டுள்ளதாகவும் அவ்விடயம் தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றி வட மாகாண ஆளுநருடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தர்.

**1.17 கௌரவ சமன்பிரிய ஹேரத் அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்**

**1.17.1 குளியாபிட்டிய வைத்தியசாலையில் கொரோனா நோயாளர் பிரிவிற்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல்**

அது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.18 கௌரவ (டாகடர்) திலக் ராஜபக்ஸ அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்**

**1.18.1 அம்பாறை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள திரிபோசாவை கொண்டுசெல்வதற்கு பிராந்திய மாவட்ட வைத்தியசாலைகளுக்கான லொரிகளை பயன்படுத்தல்**

குறித்த விடயம் தொடர்பிலான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைளை மேற்கொள்வதாக மேலதிக செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.18.2 "புதிய நாட்டுக்கு புதிய மருந்துகள்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுதேச மருந்து உற்பத்தியின்போது ஏற்பட்டுள்ள நிதிசார்ந்த நட்டம்**

குறித்த மருந்து உற்பத்தியின்போது ஏற்பட்டுள்ள நிதிசார்ந்த்த நட்டம் பற்றி விளக்கமளிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

சுதேச மருந்து உற்பத்திப் பொறிமுறையின்போது எச் சந்தர்ப்பத்திலும் நிதி சார்ந்த நட்டம் எற்பட்டில்லையெனவும் இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குழுவில் தெரிவித்தார்.

**1.19 கௌரவ மதுர விதானகே அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**1.19.1 இந்தியாவிலிருந்து காலாவதியான மருந்துகளை இலங்கைக்குக் கொண்டு வந்த "ஹார்கோட்ஸ் பாமா" (Harcourts Pharma) கம்பனி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து அடுத்த கூட்டத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர், இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினர்.

"ஹார்கோட்ஸ் பாமா" (Harcourts Pharma) கம்பனி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை அடுத்த ஆலோசனைக் குழுவிற்கு முன்வைப்பதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

**1.20 கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**1.20.1 உள்நாட்டு மருந்து உற்பத்தி தொடர்பிலான வதந்திகளை நிறுத்துவதற்காக ஊடக நிறுவனங்களின் ஊடாக பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்**

மருந்து உற்பத்திகள் தொடர்பிலான பொய்யான வதந்திகளை தவிர்ப்பதற்காக ஊடக மூலம் மக்களை விழிப்பூட்டுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டர்.

## 1.21 கௌரவ விதுர விக்கிரமநாயக்க அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.21.1 பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் உள்ள ஹொரண ஒசுசல வை திறந்துவைத்தல்

குறித்த விடயம் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டிடமொன்று கோரப்பட்டுள்ளதாகவும் அது கிடைத்த பின் ஒசுசலவை திறந்துவைப்பதாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.21.2 ரைகம வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்

அவ்விடயம் தொடர்பில் கவனமெடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தர்.

### 1.21.3 கலுத்துறை வைத்தியசாலைக்கான பீசீஆர் இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்

பொட்லைன் (Bodyline) நிறுவனம் கலுத்துறை வைத்தியசாலைக்கான பீசீஆர் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதால் மீதி நிதியை சுகாதார அமைச்சினால் வழங்குவது பற்றி கௌரவ உறுப்பினர் வினவினர்.

தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்க முடியுமென அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

## 1.22 கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிட்டிய அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.22.1 பண்டாரவெல வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயத்துதல்

பண்டாரவெல வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலையின் ஈஎன்ரீ பிரிவிற்கான வசதிகள், சீடி ஸ்கேன் இயந்திரமொன்று , டிஜிட்டல் எக்ரே இயந்திரம் ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறும் அத்துடன் இரசாயன கூடம் மற்றும் இரத்த வங்கி தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மருத்துவர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கும் கௌரவ உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஏனைய வசதிகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்துவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.23 கௌரவ கன்சன விஜேசேக்கர அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.23.1 மாத்தறை மற்றும் அம்பாந்தோட்ட வைத்தியசாலைகளுக்கு பீசீஆர் ஆய்வுகூடங்களைப் பெற்றுக்கொள்ளுதல்

குறித்த வைத்தியசாலைகளுக்கு பீசீஆர் ஆய்வுகூடங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

மத்தல விமான நிலையத்திற்குன பீசீஆர் ஆய்வுகூடமொன்றை வழங்கவுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டர்.
அவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.23.2 ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளுதல்

ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்களை மீள சேவைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அவர்களுக்கான சம்பளத்தை கடற்றொழில் அமைச்சினால் வழங்க முடியுமெனவும் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் பேலியகொட மீன் சந்தை ஆகிவை தொடர்பில் அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

### 1.23.3 கோட்டை, புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்களை திறந்துவைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல்

மொத்த விற்பனை நிலையங்களை திறந்துவைத்து மொத்தமாக உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அனுமதியளிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 1.24 கௌரவ லசந்த அலகியவன்ன அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.24.1 சுங்கத்தில் இறந்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை பரிசீலனை செய்யப்படும் இடத்தில் உள்ள சுகாதார பாதுகாப்பு நிலை

சுங்கத்தில் இறந்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை பரிசீலனை செய்யப்படும் இடத்தில் உள்ள சுகாதார பாதுகாப்பு நிலை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென கௌரவ அமைச்சர் குழுவில் தெரிவித்தர்.

### 1.24.2 இறக்குமதி செய்யப்படும் உணவுகளின் தரத்தை ஆராய்வதற்காக அமைச்சுகளுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல்

தரமற்ற உணவுகள் வெகுவாக இறக்குமதி செய்யப்பட்டு வருவதால் வர்த்த அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றிய ஒருங்கிணைப்புடன் அது பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கௌரவ அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

### 1.24.3 தேசிய மருந்துகள் ஒழுங்குருத்துகை அதிகார சபை சட்டத்தினை திருத்தும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுதல்

தேசிய மருந்துகள் ஒழுங்குருத்துகை அதிகார சபை சட்டத்தினை திருத்தும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுவதுடன் வாசனை திரவியங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டமும் திருத்தப்பட வெண்டுமென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குருத்துகை அதிகார சபை சட்டத்தில் வாசனை திரவியங்கள் ஒழுங்குறுத்துகை சட்ட ஏற்பாடுகளை சேர்ப்பதுடன் அத் திருத்தங்களை ஒரு மாதகாலத்திற்குள் பூர்த்தி செய்து அதற்கான அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர், இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 1.24.4 கொரோனா தொற்று காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த காலத்தில் தொடர்ந்து பணிபுரிந்துவந்த அரச ஊழியர்களைப் பாராட்டுதல்-

கொரோனா தொற்று காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த காலத்தில் தொடர்ந்து பணிபுரிந்துவந்த அரச ஊழியர்கள் பாராட்டப்பட வேண்டுமென கௌரவ அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

**1.24.5 கிராமிய மருந்தகங்களில் பணிபுரிந்துவரும் மருந்தாளர்களின் ஊடாக கிராம மக்களுக்கான கிளினிக் மருந்துகளை வழங்கல்**

கிராம மக்களுக்கான மாதாந்த மருத்துவ கிளினிக் மருந்துகளை கிராமிய மருந்தகங்களில் பணிபுரிந்துவரும் மருந்தாளர்களின் ஊடாக அந் நிலையங்களிலேயே வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

## 1.25 கௌரவ எம். உதயகுமார் அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

**1.25.1 புத்தளம் பொது வைத்தியசாலையில் நிலவிவரும் வைத்திய உபகரணங்களுக்கான பற்றாக்குறை**

புத்தளம் பொது வைத்தியசாலையில் நிலவிவரும் பணியாட்றொகுதி பற்றாக்குறை மற்றும் வைத்திய உபகரணங்களுக்கான பற்றாக்குறை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.25.2 வைத்தியர்களுக்கான பற்றாக்குறை**

காரைதீவு மற்றும் வன்னதீவு மருந்தகங்களில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவிவருவதாகவும் அப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

புதிதாக வைத்தியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும்போது அப் பிரதேசத்திற்கும் வைத்தியர்களை ஒருங்கிணைப்பதாகவும் குறித்த வைத்தியசாலையை பார்வையிட வருவதாகவும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

## 1.26 கௌரவ ஜயந்த சமரவீர அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

**1.26.1 கலுத்துறை-நாகொட வைத்தியசாலைக்கு பீசீஆர் இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்**

கலுத்துறை – நாகொட வைத்தியசாலைக்கு பீசீஆர் இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளில் ஒரு பகுதி கிடைத்துள்ளதாகவும் மீதியை அமைச்சின் ஊடாக பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கௌரவ உறுப்பினர் வினவினார்.

மீதி நிதியை பெற்றுக்கொடுக்க முடியுமென அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

**1.26.2 கலுத்துறை-நாகொட பொது வைத்தியசாலைக்கு ஸ்கேனர் (Scanner) இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்**

குறித்த வைத்தியசாலையில் தற்போது பாவனையில் உள்ள ஸ்கேனர் இயந்திரம் செயலிழந்த நிலையில் இருப்பதால் கொழும்பு பொது வைத்தியசாலைக்கு புதிதாக கொண்டுவரப்படும் இயந்திரமொன்றை பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.26.3 பானதுறை வைத்தியசாலையை புதிய வைத்தியசாலையாக மாற்றப்படும் கருத்திட்டம் செயற்படாமை**

குறித்த விடயம் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

வெளிநாட்டு நிதி உதவிகளின் கீழ் செயற்படும் கருத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

குறித்த விடயம் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை அடுத்த ஆலோசனைக் குழுவிற்கு முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 1.26.4 உணவு சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருவதன் அவசியம்

உணவு மற்றும் பானவகைகளின் தரத்தினை பரிசோதனை செய்வதற்காக உணவு சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவன் முக்கியத்துவத்தினை கௌரவ உறுப்பினர் குழுவில் வலியுறுத்தினார்.

அது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கௌரவ தவிசாளர் இணக்கம் தெரிவித்தர்.

## 1.27 கௌரவ கௌரவ வசந்த யாப்பா பண்டார அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.27.1 கண்டி பொது வைத்தியசாலைக்கு பீசீஆர் பரிசோதனை இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

கண்டி பொது வைத்தியசாலைக்கு பீசீஆர் பரிசோதனை இயந்திரமொன்றைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த வைத்தியசாலைக்குத் தேவையான ரொபோடிக் ஆர்ம் (Robotic Arm) உபகரணமொன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 1.27.2 கடுகன்னாவ மாவட்ட வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தல்

கடுகன்னாவ மாவட்ட வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.27.3 கண்டி பொது வைத்தியசாலையில் நிலவிவரும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

கண்டி பொது வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் அதிகமாகவிருப்பதாகவும் அவற்றை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 1.28 கௌரவ அமரகீர்த்தி அதுகோரால அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.28.1 பொலநறுவை பொது வைத்தியசாலைக்க பீசீஆர் இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

குறித்த தேவையை மிகவிரைவில் நிறைவேற்றுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.28.2 பொலநறுவை பொது வைத்தியசாலையில் நிலவிவரும் ஊழியர் பதவி வெற்றியடங்களை நிரப்புதல்

பொலநறுவை பொது வைத்தியசாலையில் நிலவிவரும் ஊழியர் பதவி வெற்றியடங்களை நிரப்புமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.28.3 மெதிரிகிரிய வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக தரமுயத்தல்**

குறித்த வைத்தியசாலையை பொது வைத்தியசாலையான மாற்றுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.28.4 பணிகள் பூர்த்திசெய்யப்பட்ட நிலையிலுள்ள சிறுநீரக வைத்தியசாலையை திறந்துவைத்தல்**

அதனை விரைவில் திறந்துவைக்கவுள்ளதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.28.5 பக்கவாத பிரிவு, ஈஎன்ரீ(ENT)பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் நிர்மாண பணிகளை விரைவில் பூர்த்தி செய்தல்**

குறித்த பிரிவுகளின் நிர்மாணப் பணிகளை விரைவில் பூர்த்தி செய்து அவற்றை மக்கள் மயப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.28.6 மெதிரிகிரிய, ஹிகுரக்கொட, பக்கமூன ஆகிய இரத்த சுத்திகரிப்பு (Dialysis) பிரிவுகளை ஆரம்பித்தல்**

குறிப்பிடப்பட்ட இடங்களில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோதிலும் அவை இதுவரை செயற்படுத்தப்பட்டில்லையென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அப் பிரிவுகளை விரைவில் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினர்.

**1.29 கௌரவ எஸ்.எம்.எம்.முசாரப் அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்**

**1.29.1 அம்பாறை- பொத்துவில் வைத்தியசாலையை நிரல் அமைச்சின் கீழ் கொண்டுவருதல்**

மேற்குறிட்ட வசதிகள் குறைந்த நிலையில் இயங்கிவரும் பொத்துவில் வைத்தியசாலையை நிரல் அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களைப் வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

**1.29.2 அம்பாறை- பொத்துவில் பிரதேசத்திற்கு அரச மருந்தகம் (ஒசுசல) ஒன்றின் தேவை**

அரச மருந்தகமான்றை(ஒசுசல) ஒன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.30 கௌரவ சுதத் மஞ்சுள அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்**

**1.30.1 கேகாலை- அங்குருவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வைத்தியருக்கு கொவிட் நோய்த் தொற்று ஏற்படல்**

குறிப்ட்ட வைத்தியர் முகப் பாதுகாப்புக் கவசம் எதுவுமின்றி நான்கு நாட்களுக்குள் 400-500 எண்ணிக்கையான நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளதாகவும் தற்போது அவருக்கும் அவரது மனைவிக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

சம்பந்தப்பட்டவர்களை வீடுகளில் தனிமைப்படுத்துவதுடன் பீசீஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்துமாறு கௌரவ தவிசாளர், பிரதி தொற்று நோய்கள் நிபுணத்துவருக்கு ஆலோசனை வழங்கினார்.

முக பாதுகாப்புக் கவசம் அணியாது நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல் தொடர்பில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டுமென வழக்கு தொடரப்பட வேண்டுமென கௌரவ மதுர விதானகே அவர்கள் குழுவில் குறிப்பிட்டார்கள்.
குறிப்பிட்ட வைத்தியர் குணமடைந்த பின் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.30.2 கரவநெல்ல ஆதார வைத்தியசாலையின் குறைகளை நிவர்த்தி செய்து மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தல்

ஊழியர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் ஈஎன்ரீ பிரிவு, இருதய நோய்ப் பிரிவு ஆகிவற்றை தாபிப்பதுடன் துவையான உபகரணங்களையும் வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 1.31 கௌரவ எம். நந்தசேன அவர்களினால் முன்வைக்கப்பபட்டுள்ள பிரேரணைகள்

### 1.31.1 மதவாச்சி ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல்-

மதவாச்சி- கெபிதிகொல்லேவ மற்றும் பதவிய ஆதார வைத்தியசாலைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டில்லையெனவும் மதவாச்சி ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகளையேனும் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 1.32 கௌரவ (டாக்டர்) கயாசான் நவநந்த அவரிகளினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.32.1 எம்பிலிபிட்டிய ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக மாற்றுதல்

மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதென திறைசேரியினால் சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 1.32.2 எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் நிலவிவரும் மருந்துகள் பற்றாக்குறை

குறித்த வைத்தியசாலையில் சில அத்தியாவசிய உயிர்க்காப்பு மருந்துகளுக்கான (Life Saving Drugs) பற்றாக்குறை நிலவிவருவதாகவும் அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றிய ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினர்

### 1.32.3 சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் பற்றாக்குறை

சத்திரசிகிச்சைக்கான உபகரணங்கள் பற்றாக்குறை நிலவிவருவதாகவும் அதற்கான வழங்கல் நடபடிமுறைகள் மேற்கொள்ளப்பட்டில்லையெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

அது பற்றிய ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினர்.

#### 1.32.4 வதிவிடப் பயிற்சி வைத்தியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படல்

வதிவிட பயிற்சி வைத்தியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுவதில் 03 வருட காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அந் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கௌரவ தவிசாளர், பிரதிப் பணிப்பாளர் நாயகம்(மருத்துவ சேவைகள்) இற்கு ஆலோசனை வழங்கினார்.

#### 1.32.5 மொணராகலை வைத்தியசாலைக்கான வசதிகளை வழங்கல்

மொணராகலை வைத்தியசாலையில் மனநோயாளர்கள் மற்றும் புற்று நோயாளர்களுக்கான வாட்டுகள் இல்லையென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

#### 1.32.6 வைத்தியசாலைக்குச் சொந்தமான நிலத்தில் 22 ஏக்கர் நிலம் வேறு தரப்பினரால் கைப்பற்றப்படல்

கைப்பற்றப்பட்ட நிலத்தை வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பில் பெற்றுக்கொள்ள வேண்டுமென கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

#### 1.32.7 வெல்லவாய வைத்தியசாலையின் சிறுநீர சிகிச்சைப் பிரிவின் பணிகள் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் வைத்தியசாலைக்கான மலசல வடிகாலமைப்புத் தொகுதியொன்று தாபிக்கப்படாமை

இது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் பணிப்புரை விடுத்தார்.

குறித்த விடயம் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கௌரவ தவிசாளரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

### 1.33 கௌரவ தயாசிறி ஜயசேக்கர அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 1.33.1 கல்கமுவ பொது வைத்தியசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்தல்- கௌரவ தயாசிறி ஜயசேக்கர

ஊழியர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்வதன் ஊடாக வைத்தியசாலையை இயங்கும் நிலைக்கு கொண்டுவருமாறு கௌரவ அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுமாறு கௌரவ தவிசாளர், சுகாதார29 சைகள் பணிப்பாளர் நாயகத்திற்க ஆலோசனை வழங்கினர்.

### 2. கிராமிய வைத்தியர்கள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறைகள்

கிராமிய பிரதேசங்களைச் சேர்ந்த வைத்தியர்கள் மேலதிக கல்வி மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டபின் மீண்டும் சேவைக்கு திரும்புவது பற்றிய ஒப்பந்தமொன்றை செய்துகொள்வதன் அவசியம் பற்றி கௌரவ தவிசாளர் குழுவில் எடுத்துரைத்தர்.

**3.** குழு பி.ப.2.00 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது..

---

**கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**முதலாவது கூட்டம்- 2020 திசெம்பர் 03**

**சமூகமளித்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ விமல் வீரவங்ச (தவிசாளர்)
கௌரவ தயாசிறி ஜயசேகர ( இராஜாங்க அமைச்சர்)
கௌரவ லொஹான் ரத்வத்த (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ பிரசன்ன ரணவீர(இராஜாங்க அமைச்சர்)
கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

**சமூகமளித்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ அங்கஜன் இராமநாதன்
கௌரவ அசோக்க பிரியந்த
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ கயாஷான் நவனந்த
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ சாணக்கியா ராஜபக்கிரன் இராசமாணிக்கம்
கௌரவ தவராஜா கலை அரசன்

**1. அமைச்சின் அலுவல்கள் பற்றிய கருத்தாய்வு**

**1.1 கௌரவ அசங்க நவரத்ன அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்**

**1.1.1 குருணாகல் மாவட்டத்திலுள்ள மட்பாண்ட கைத்தொழில் கிராமங்களை மேம்படுத்தல்**

குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மட்பாண்ட உற்பத்தியாளர்கள் அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலில் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாகவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றி கௌரவ அமைச்சர் அவர்களின் தலையில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவுசெய்துகொண்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு ஆகக் கூடியது மூன்று கியூப் கழிமண் கொண்டு செல்வதற்கு ஆங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ பிரசன்ன ரணவீர(இராஜாங்க அமைச்சர்) குறிப்பிட்டார்.

அத்துடன் மட்பாண்ட கைத்தொழிலாளர்களை தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.1.2 பிராந்திய மட்டத்தில் புதிய கைத்தொழில்களை ஆரம்பித்தல் பற்றிய பிரேரணைகள்**

கைத்தொழில் அமைச்சினால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த, புதிய கைத்தொழில் பிரேரணைகள் தொடர்பிலான அமைச்சின் முன்னெடுப்புகள் பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் வினவினார்.

கௌரவ உறுப்பினர்களுக்குச் சொந்தமான பிரதேசங்களில் உள்ள மூலப்பொருட்கள், இயற்கைவளங்கள் உட்பட்ட வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கக்கூடிய கைத்தொழிற் கருத்திட்டங்கள் பற்றிய பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான பயிற்சியும் தொழில்நுட்ப உதவிகளும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் வழங்கப்படுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.1.3 குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஹெரலியாவல மற்றும் தன்கஸ்பிட்டிய கைத்தொழில் பேட்டைகள்

அக் கைத்தொழில் பேட்டையில் காணிகளைப் பெற்றுக்கொண்டுள்ள சில தொழில் முயற்சியாளர்கள் கைத்தொழில்களை ஆரம்பிக்காமை பிரச்சினையாக அமைந்துள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் பற்றி மாகாண ஆளுநருடன் கலந்தாலோசிப்பதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 1.1.4 குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பிங்கிரிய மற்றும் வேவுட பிரதேசங்களில் அமைந்துள்ள பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பித்தல்

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் ஏற்கனவே இயங்கிவந்த பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

பிங்கிரிய தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பித்தல் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டுவருவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

வேவுட தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி சம்பந்தப்பட்ட தலைவர்களுடன் கலந்லோசித்து தீர்மானிப்பதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 1.1.5. பீங்கான் கூட்டுத்தாபத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைகளை தயாரிக்கப்படும் ஓடுகளை அரச வீடமைப்பு திட்டங்கள் தொடர்பில் பயன்படுத்தல்.

பீங்கான் கூட்டுத்தாபத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைகளை தயாரிக்கப்படும் ஓடுகளை அரச வீடமைப்பு திட்டங்கள் தொடர்பில் பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

தற்போது அவ்வாறு பயன்படுத்தப்பட்டுவருவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.2 கௌாவ சாணக்கியா ாாஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.2.1 மட்டக்களப்பு மாவட்ட கைத்தறி நெசவுக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைத்தறி நெசவுக் கைத்தொழில் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதால் அப்பிரதேசத்து உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறிப்பிட்ட உற்பத்திகள் பற்றிய விபரங்களை மாகாண பணிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு தேவையான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ தயாசிரி ஜயசேக்கர குறிப்பிட்டார்.

### 1.2.2 மட்டக்களப்பு மாவட்டத்தில் பொரதீவுபத்து பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மண்டூர் பிரசேத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தல்

இப் பிரதேசத்தில் பல தசாப்தங்களுக்கு முன் பிரசித்திபெற்ற ஓட்டுத் தொழிற்சாலையொன்று இருந்ததாகவும் அப்பிரதேசத்தில் ஓட்டுத் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதன் ஊடாக அங்குள்ள இயற்கை வளமான கழிமண்ணைக் கொண்டு உற்பத்திகளை ஆரம்பிப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

### 1.2.3 வாழைச்சேவை கடதாசி தொழிற்சாலை அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ள இயற்கை வளங்களை மூலப்பொருட்களாக பயன்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்

இப் பிரதேசத்தில் உள்ள இயற்கை வளங்களை மூலப்பொருட்களாக பயன்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் கடதாசி கைத்தொழில்சார்ந்த ஏனைய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 1.2.4 அப் பிரதேசத்து மண்ணை மூலப்பொருளாகக் கொண்ட கைத்தொழில்களை ஆரம்பித்தல்

அப் பிரதேசத்தில் உள்ள இயற்கை வளமான மண்ணை மூலப்பொருளாகக் கொண்டு வேறு அமைச்சுகளின் உதவியுடன் கைத்தொழில்சாலைகளை ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் தொடர்பில் சுற்றாடல் அமைச்சுக்கு பங்களிப்பு வழங்க முடியுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.3 கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.3.1 அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கிரிந்தை பிரதேசத்திலுள்ள மணல் படிவம்

குறிப்பிட்ட மணல் படிவம் பற்றிய ஆராய்ச்சிகள் ஒரு தனியார் கம்பனியினால் நடாத்தப்பட்டுவந்ததாகவும் அது தொடர்பில் அப்பிரதேசத்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் மணல் படிவத்தின் அகழ்வு நடவடிக்கைகள் இலங்கை கனியமணல் கூட்டுத்தாபனத்தின் (LML) கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 1.3.2 அம்பாந்தோட்ட மாவட்ட, திஸ்ஸமகாராம நகரத்தில் அமைந்துள்ள புடவைக் கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி

திஸ்ஸமகாராம நகரத்திலுள்ள புடவைக் கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் தனியார் வர்த்தக நிலையமொன்று செயற்படுத்தப்பட்டுவருவதாகவும் அக் காணியை அரசின் விளைத்திறனுடைய தேவைக்கு பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றி மாவட்ட அபிவிருத்திக் குழுவில் கலந்தாலோசிக்குமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ தயாசிறி ஜயசேக்கர குஆலோசனை வழங்கினார்.

### 1.3.3 அம்பாந்தோட்ட மாவட்டத்தைச் சேர்ந்த பெலிகல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள தங்க ஆபரண தயாரிப்பு தொடர்பான கிராமங்கள்

அம்பாந்தோட்ட மாவட்டத்தைச் சேர்ந்த பெலிகல்ல பிரதேசத்திலுள்ள 04 கிராம சேவை பிரிவுகளில் அதிகமான தங்க ஆபரண சிற்பிகள் வாழ்ந்துவருவதாகவும் அவர்களுக்கு அமைச்சினால் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் பற்றி அமைச்சில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள புத்தாக்குனருக்கு குறைந்த வட்டியுடன் பத்து இலட்சம் ரூபா வழங்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ லொஹான் ரத்வத்தே குழுவில் தெரிவித்தார்.

குறித்த விடயம் பற்றி அமைச்சுடன் தொடர்புகொண்டு, அதனை புத்தாக்குனர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறும் அவர் ஆலோசனை வழங்கினார்.

### 1.3.4. அம்பாந்தோட்ட மாவட்டத்து கழிமண் கைத்தொழில்

அம்பாந்தோட்ட மாவட்டத்தைச் சேர்ந்த கழிமண் கைத்தொழிலாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தையும் தேவையான உபகரணங்களையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக சர்வதேச சந்தைக்குப் பொருத்தமான பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

புதிய தொழில்நுட்பத்தையும் உபகரணங்களையும் வழங்கும் திட்டத்தின் கீழ் அவற்றை வழங்க முடியுமென இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர குழுவில் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் அவர்கள் முன்வைத்த பிரச்சினைகளுடன் தொடர்புடைய விபரங்களைப் பெற்றுக்கொண்டு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ லொஹான் ரத்வத்தே, இராஜாங்க யெயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 1.4 கௌரவ அசோக்க பிரியந்த அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 1.4.1 நெசவுக் கைத்தொழில் திணைக்களம் இயங்கிவந்த நாத்தண்டிய நகரத்தில் அமைந்துள்ள காணியையும் கட்டிடத்தையும் பயன்படுத்தல்

நாத்தண்டிய நகரத்தில் உள்ள இக் காணியையும் கட்டிடத்தையும் பயனுறுதிமிக்க கருத்திட்டமொன்றுக்கு பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார். மேற்குறித்த விடயம் பற்றி மாகாண நெசவுக் கைத்தொழில் பணிப்பாளருடன் கலந்தாலோசிப்பதாக இராஜாங்க அமைச்சர், கௌரவ தயாசிறி ஜயசேக்கர குறிப்பிட்டார்.

குறித்த கட்டிடத்தையும் காணியையும் மாகாண சபையின் இணக்கத்துடன் பயனுறுதியடையதாக பயன்படுத்துவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.5 கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.5.1 பரந்தன் இரசாயனப் பொருட்கள் தொழிற்சாலை

பரந்தன் இரசாயப் பொருட்கள் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதற்கான அரசின் எதிர்கால திட்டங்கள் பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் வினவினார்.

217 ஏக்கர் பரப்பளவுடைய குறிப்பிட்ட இடத்தை இரசாயக் கைத்தொழில் வலயமாக அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தனியார்த்துறையினதும்

உதவியுடன் இரசாயப் பொருட்கள் சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 1.5.2 யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆனையிரவு உப்பளம்

ஆனையிரவு உப்பளத்தை அபிவிருத்தி செய்வதற்கான எதிர்கால திட்டங்கள் பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் வினவினார்.

தற்போது "மாந்தை சோல்ட் கம்பனி" யுடன் இணைந்த இந் நிறுவனத்தை தேசிய உப்பு கம்பனி என செயற்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 1.5.3 யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதற்கான அரசின் எதிர்கால திட்டங்கள் பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் வினவினார்.

தனியார்த்துறையின் ஒருங்கிணைப்புடன் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கான சில புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை ஆராய்ந்த பின் மிகப் பொருத்தமான யோசனையின் கீழ் உற்பத்திகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 1.5.4 யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அச்சுவேலி கைத்தொழில் அபிவிருத்திப் பேட்டையின் நீர் பற்றாக்குறை மற்றும் துப்பரவு ஏற்பாட்டு தொடர்பான பிரச்சினைகள்

அச்சுவேலி கைத்தொழில் அபிவிருத்திப் பேட்டையின் நீர் பற்றாக்குறை மற்றும் துப்பரவு ஏற்பாட்டு தொடர்பான பிரச்சினைகள் நிலவிவருவதாகவும் அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தருமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுகொண்டார்.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் கலந்தாலோசித்து, இரண்டாம் கட்டத்தின் கீழ் அந் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 1.5.5 அச்சுவேலி கைத்தொழில் அபிவிருத்திப் பேட்டையின் கைத்தொழில்கள் மற்றும் மின்சார பாவனை தொடர்பில் சலுகைகளை வழங்கல்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் மின்சார கட்டண பட்டியல்கள் தொடர்பில் கைத்தொழிலாளர்களுக்கு 50% சலுகை வழங்கப்பட்டதாகவும் எதிர்காலத்திலும் அச் சலுகைகளைப் பெற்றுக்கொடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அவ்விடயம் தொடர்பில் இவ்வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டில்லையென கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 1.5.6 அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைச் சேர்ந்த கடதாசி உற்பத்தித் தொழிற்சாலை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உள்ள மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கடதாசி உற்பத்தி நிறுவனத்தினால் (Nobel Paper Factory) உற்பத்தி செய்யப்படும் கடதாசிக்கு பதிலாக வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட கடதாசி இறக்குமதி செய்யப்பட்டதால் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில தெரிவித்தார்.

மேற்குறித்த பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட கைத்தொழிலாளர்களை அமைச்சுடன் ஒருங்கிணைக்குமாறு கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினருக்கு அறிவித்தார்.

### 1.5.7 யாழ்ப்பாணம் -அச்சுவேலி கைத்தொழில் அபிவிருத்திப் பேட்டையில் ஔடத உற்பத்தி தொழிற்சாலையொன்றை ஆரம்பித்தல்

மேற்குறித்த இடத்தில் புதிய மருந்து உற்பத்தித் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதால் கைத்தொழில் பேட்டையில் உள்ள நீர் பிரச்சினைக்கு தீர்வளிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றி இராஜாங்க அமைச்சர் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருடன் கலந்தாலோசிப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

## 1.6 கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 1.6.1. ஹிரியால தொகுதியில் உள்ள புடவை நெசவாலைகள்

ஹிரியால தேர்தல் தொகுதியில் உள்ள புடவை நெசவாலைகளை மீண்டும் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.6.2. ஹிரியால தேர்தல் தொகுதியில் உள்ள கழிமண் உற்பத்திக் கிராமங்கள்

ஹிரியால தேர்தல் தொகுதியில் உள்ள கழிமண் உற்பத்திக் கிராமங்கள் தொடர்பில் விசேட கருத்திட்டமொன்றை ஆரம்பித்து அவர்களுக்கு சலுகைகளை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றிய கள பரிசோதனைகளை மேற்கொண்டபின் கௌரவ உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பதாக, இராஸாங்க அமைச்சர் கௌரவ தயாசிறி ஜயசேக்கர குறிப்பிட்டார்.

2. ஒத்திவைப்பு- குழு பி.ப.3.00 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

## தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
## முதலாவது கூட்டம் – 2020 திசெம்பர் 04

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ நிமல் சிறிபால த சில்வா (தவிசாளர்)
கௌரவ ஜகத் புஷ்பகுமார
கௌரவ வடிவேல் சுரேஷ்

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ றோஹண திஸாநாயக்க
கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்
கௌரவ சாந்த பண்டார
கௌரவ கே. காதர் மஸ்தான்
கௌரவ அ. அரவிந்த் குமார்
கௌரவ சமிந்த விஜேசிறி
கௌரவ ஹேஷா விதானகே
கௌரவ உதயன கிரிந்திகொட
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ வசந்த யாப்பாபண்டார
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ மதுர விதானகே
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

## 1. கௌரவ உறுப்பினர்களின் முன்மொழிவுகள்.

### 1.1 கௌரவ ஹேஷா விதானகே அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 1.1.1 தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவரை அதிகரித்தல்

உற்பத்தியுடன் தொடர்புடைய முறையில் இச்சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்துடன் இது தொடர்பாக தற்போதுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்களின் சம்பளம் கட்டுப்படுத்தப்படல் அல்லது அவுட் க்ரோ (outgrow) முறையில் சம்பளம் வழங்குவது தொடர்பாக வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொழிற் சங்கங்கள், முதலாளிமார் சம்மேளனத்துடன் கலந்துரையாட உத்தேசித்துள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய தோட்டக் கம்பெனிகள் அவ்வப்போது தோட்டங்களை கைவிடல், வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்குதல் காரணமாக சம்பளம் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் காணப்படுவதாக கௌரவ வடிவேல் சுரேஸ் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

### 1.2 கௌரவ வடிவேல் சுரேஸ் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 1.2.1 தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளமை மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1000 சம்பளம் வழங்கப்படுதல்

அரச தோட்டங்கள், 1992 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிவரும் பிராந்திய தோட்டக் கம்பெனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் சில நிறுவனங்களினால் இடைக்கிடை தோட்டங்கள் கைவிடப்பட்டமையும், அத்தோட்டங்கள் கீழ்க் குத்தகை ஒப்பந்தங்கள் மூலம் வேறு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டமையும் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதுடன், சில சந்தர்ப்பங்களில் மனித உரிமைகளும் மீறப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காலப்பகுதியில் தோட்ட உரிமையாளர்களுக்கு அது தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் குறைந்துள்ளமையினால் அவர்களுக்கு இந்த ரூ. 1000 சம்பளத்தை வழங்க முடியுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

### 1.3 கௌரவ ஜகத் புஸ்பகுமார அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

#### 1.3.1 அரசாங்கம் தோட்ட முகாமைத்துவத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய முன்மொழிவுகள்

அரசாங்கம் தோட்ட முகாமைத்துவத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஆரம்ப ஒப்பந்தங்கள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் கண்டறிவதற்காக தொழில் அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு மற்றும் திறைசேரியுடன் கூட்டுக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டும் என கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 1.3.2 பகுதியளவு அரச நிறுவனங்களுக்கு ஆட்சேர்த்தல், நியமித்தல், இடமாற்றல் மற்றும் பதவி உயர்வு வழங்கப்படுதல்

அரசியல் ரீதியான மாற்றங்கள் மற்றும் அழுத்தங்களின் அடிப்படையில் இ.போ.ச. போன்ற பகுதியளவு அரச நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கௌரவ உறுப்பினர் முன்மொழிந்தார்.

இது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

### 1.3.3. வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டம்

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்றுள்ள முறைக்கேடுகள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு உள்ளக குழுவொன்றை அமைத்ததாகவும் அதன் முதலாவது அறிக்கையை கௌரவ இராஜாங்க அமைச்சருக்கு ஒப்படைத்துள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர், கமல் ரத்வத்தே அவர்களினால் தெரிவிக்கப்பட்டது. இதன் இரண்டாவது பகுதியையும் ஒப்படைப்பதற்கு தயார் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### 1.3.4. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக தொழிலாளர்களை அனுப்பும் போது முகவர் நிறுவனங்களினால் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு செலுத்தப்படும் தரகுப் பணம்

வெளிநாட்டுக்குச் செல்லும் போது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களிடம் கட்டணம் அறவிடும் முறை, வெளிநாட்டிற்கு செல்லும் நபரிடம் அறவிடப்படும் கட்டணம், தொழில் முகவர் நிறுவனங்கள் ஊடாக வெளிநாட்டுக்கு செல்லும் போது அறவிடப்படும் கட்டணம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெறும் கட்டணம் தொடர்பாக மேலதிக பொது முகாமையாளர், டி.டி.பி. சேனாநாயக்க அவர்களினால் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதன் மூலம் ஒருவருக்காக ரூ. 1,000,000 முகவர் நிறுவனத்திற்கு கிடைக்கப் பெறுவதாக தெரிய வந்ததுடன் வீட்டுப்பணிப் பெண்களுக்கு அதன் நன்மை மீள கிடைக்கப் பெறும் முறை உள்ளதா என கௌரவ தவிசாளரினால் வினவப்பட்டது.

பணியகத்தின் அலுவலர்களின் நேர்மை தொடர்பாக அவதானத்துடன் செயற்படுவதாகவும் விமான நிலைய கடமைகள் உரிய முறையில் இடம்பெறாததன் காரணமாக இராணுவத்தினரை ஈடுபடுத்தும் தேவை குறித்து விசேட கவனத்தை செலுத்துவதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

## 1.4 கௌரவ மதுர விதானகே அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

### 1.4.1 அரச ஆதனங்களை தனியார்மயப்படுத்துவதன் மூலம் ஏற்பட்டுள்ள முறைக்கேடுகள் தொடர்பான விசாரணை மற்றும் பாதிக்கப்படும் தொழிலாளர்களின்முறைப்பாடுகளின் மீது கவனம் செலுத்துவதற்கு முறையியலொன்றைத் தயாரித்தல்.

இவ்விடயங்கள் தொடர்பாக விசேட கவனத்தை செலுத்துமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**1.4.2 தோட்ட மக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அண்மைக்காலத்தில் அரச சேவைக்கு ஆட்சேர்த்துக் கொண்ட பட்டதாரிகளை ஈடுபடுத்தல்.**

இவ்விடயங்கள் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்துமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**1.5 கௌரவ (டாக்டர்) வி. இராதாகிருஷ்ணன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.**

**1.5.1 தோட்டக் கலாச்சாரத்தை மாற்றிமைத்தல்**

இதுவரை காலமும் காணப்பட்ட தோட்டக் கலாச்சாரத்தை மாற்றியமைத்து, தோட்ட அதிகாரிகள் தோட்ட மக்களை தேவையற்ற முறையில் நிர்வகிப்பதனைத் தடுத்து, நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று தோட்டங்களையும் கிராம அலுவலர்கள் போன்ற அரச அலுவலர்களின் நேரடி நிர்வாகத்திற்கு உட்படுத்துவதன் தேவை தொடர்பாக கௌரவ உறுப்பினரால் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

**1.5.2 நுவரெலியா மற்றும் ஹட்டன் தொழில் அலுவலக கட்டிடங்கள்**

தொழில் அலுவலகத்தை பொருத்தமான இடத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் தொழில் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.
ஹட்டன் தொழில் அலுவலகத்தை அமைக்கும் பணிகள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் நிறைவடையும் என கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

**1.6 கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.**

**1.6.1 கோவிட் தொற்று நோய் காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்த தொழிலாளர்களை மீளவும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள்**

இலங்கைக்கு மீள வருவதற்கு எதிர்பார்த்திருந்த வெளி நாட்டில் பணிபுரியும் 46000 பேரில் 16000 பேரை இதுவரை நாட்டுக்கு அழைத்து வந்துள்ளதாகவும் தனிமைப்படுத்துவதில் உள்ள சிரமங்கள், பி.சீ.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதில் உள்ள சிரமங்கள், வான் வழி போக்குவரத்தில் உள்ள மட்டுப்பாடுகள் போன்ற விடயங்கள் இச்செயன்முறையில் செல்வாக்குச் செலுத்துவதாக கௌரவ தலைவரினால் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் சில மாதங்களுக்குள் சகல தொழிலாளர்களையும் அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.

விசேட அல்லது அவசர தேவைப்பாட்டிற்கு அமைவாக அழைத்து வருவதற்கு முன்னுரிமை வழங்குவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

**1.6.2 தெனியாய தோட்ட தொழிலாளர்களுக்காக மொறவக்க தொழில் அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் சேவை**

இப்பிரதேசத்தின் தொழில் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் சேவை அதிருப்தியளிப்பதாகவும் அவ்வலுவலகத்தினை தனியாருக்குச் சொந்தமான இடத்தில் நடத்திச் செல்லல் மற்றும் தமிழ் மொழியில் உரையாடக் கூடிய ஒரு அலுவலரேனும் அவ்வலுவலகத்தில் பணி புரியாமை போன்ற விடயங்கள் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

இத்தொழில் அலுவலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை அமைப்பதற்கு 2021ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் போது முன்னுரிமை வழங்குவதற்கும், தமிழ் மொழியில் உரையாடக்கூடிய தொழில் ஆணையாளர் ஒருவரை அவ்வலுவலகத்திற்கு

இடமாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2. பி.ப. 3.00 மணிக்கு திகதி நிர்ணயிக்கப்படாமல் குழு ஒத்தி வைக்கப்பட்டது.

---

**வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**இரண்டாவது கூட்டம்- 2021 மார்ச் 10**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன(தவிசாளர்)
கௌரவ லசந்த அலகியவன்ன (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ றோஹண திஸாநாயக்க
கௌரவ நலின் பிரனாந்து

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ அனுப பஸ்குவல்

1. அமைச்சுசார் ஆலோசனைக் குழு முறையினை மிகவும் பயனுறுதியும் வினைத்திறனும் வாய்ந்த வகையில் பேணி வருவதற்கான தேவைப்பாடு தொடர்பாக கௌரவ தவிசாளர் வலியுறுத்தியதுடன் இப்பணியை மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் திரு. டிக்கிரி கே. ஜயதிலக அவர்களினால் ஒரு சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டது.

ஒரு நீண்ட காலத் தேவையாக காணப்படும் தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரிப்பதற்கு புலமைசாலிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இக் குழுவினால் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறை தொடர்பாக ஆராய்வதற்கு புலமைசாலிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன மற்றும் கௌரவ றோஹண திஸாநாயக்க ஆகியோரும் இது தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

2. **ஆண்டறிக்கைகளை ஆராய்தல்**

குழுவுக்கு பாராளுமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பின்வரும் ஆண்டறிக்கைகளை பரிசீலனைக்கு உட்படுத்திய பின்னர் இந்த ஆண்டறிக்கைகள் மீதான இணக்கத்தை குழு வெளிப்படுத்தியதுடன் இது தொடர்பான குழு அறிக்கையை வர்த்தக அமைச்சரும் குழுவின் தவிசாளருமாகிய கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன அவர்கள் 2021 மார்ச் மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**2.1** 2017 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஆண்டறிக்கை
**2.2** 2016ஆம் ஆண்டுக்கான லங்கா சதொச நிறுவனத்தின் ஆண்டறிக்கை
**2.3** 2017 ஆம் ஆண்டுக்கான லங்கா சதொச நிறுவனத்தின் ஆண்டறிக்கை
**2.4** 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை

**2.5** 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கை
**2.6** 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கை
**2.7** 2018 ஆம் ஆண்டுக்கான மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்
**2.8** 2019 ஆம் ஆண்டுக்கான மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்
**2.9** 2015ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்
**2.10** 2016ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்

**3. 2020.12.01 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின், கூட்ட குறிப்புகளிலிருந்து எழும் விடயங்கள்**

**3.1 வடமாகாண கூட்டுறவு பயிற்சி நிலையத்தை மீளப் பெற்றுக்கொள்ளுதல் - கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள்**
(2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.6.2)

குழு இவ்விடயத்தை பரிசீலனைக்கு உட்படுத்தியது.

**3.2 வென்னப்புவ கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் பதவி தொடர்பான பிரச்சினை - கௌரவ நிரோஷன் பெரேரா அவர்கள்**
(2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.7)

குழு இவ்விடயத்தை பரிசீலனைக்கு உட்படுத்தியது.

**3.3 ருவன்வெல்ல கூட்டுறவுச் சங்கத்தை மீளக் கட்டியெழுப்புதல் - கௌரவ சுதத் மஞ்சுல அவர்கள்** (2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.8)

குழு இவ்விடயத்தை பரிசீலனைக்கு உட்படுத்தியது.

**3.4 ஹிங்குரக்கொட வர்த்தக கட்டிடத் தொகுதி மற்றும் அரிசி ஆலையை முன்னேற்றுதல் - கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள அவர்கள்**
2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.9)

குழு இவ்விடயத்தை பரிசீலனைக்கு உட்படுத்தியது

**4. அமைச்சுசார் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்**

**4.1 கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**4.1.1 மாத்தளை அலுவிஹார பிரதேசத்தில் அமைந்திருந்த சதொச விற்பனை நிலையத்தை மூடி விடுதல் தொடர்பாக**

இந்த விற்பனை நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதெனவும் அதனை உக்குவெல பிரதேசத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் சதொச தலைவர் தெரிவித்தார்.

நிதி முறைகேடுகள் காரணமாக நட்டமடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள லங்கா சதொச நிறுவனத்தை மீண்டும் இலாபம் ஈட்டும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு பல

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சதொச நிறுவனம் தொடர்பாக தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

நிதி முறைகேடுகளை இல்லாதொழிக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக லங்கா சதொச களஞ்சியசாலைகள் மற்றும் கிளைகளை கணினிமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 4.2 கௌரவ நலின் பிரனாந்து அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.2.1 லங்கா சதொச விற்பனை நிலையங்களுக்காக கட்டிடங்களைத் தெரிவுசெய்தல்

லங்கா சதொச விற்பனை நிலையங்களை நிறுவும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கௌரவ உறுப்பினர் ஒரு நீண்ட விளக்கத்தை முன்வைத்தார்.

சம காலத்திற்குப் பொருத்தமான வகையில் சதொச விற்பனைக் கிளை வலையமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் சிறிய விற்பனை நிலையங்களுக்குப் பதிலாக பெரிய அளவிலான விற்பனைக் கிளைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான ஆயினும் பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள காணிகளை லங்கா சதொச விற்பனைக் கிளை கட்டிடங்களை அமைப்பதற்கு பயன்படுத்த முடியுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

மெகா சதொச எனும் பெயரிலான புதிய எண்ணக்கருவிற்கு அமைவாக குறைந்த செலவில் பிரதான நகரங்களில் அமைந்துள்ள லங்கா சதொச விற்பனை நிலையங்களை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

## 4.3 கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.3.1 பொலனறுவை பக்கமூன நகரத்தில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையம்

பொலனறுவை பக்கமூன நகரில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையம் இயங்கும் கட்டிடத்தின் உரிமையாளர் இக் கட்டிடத்தை மீள ஒப்படைக்குமாறு கோரியுள்ளதால் கூட்டுறவு திணைக்களத்திற்குச் சொந்தமான தற்போது பயன்படுத்தப்படாத கட்டிடத்தை இவ்விடயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள இயலுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.
கதுறுவெல நகரில் காணப்பட்ட விற்பனை நிலையம் பொருத்தமற்றதொரு இடத்தில் அமைந்திருந்ததால் அதனை மூடிவிட நேர்ந்ததெனவும் அந்நிலையத்தை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கிளையொன்றை பொலனறுவை பிரதேசத்திற்கு வழங்குமாறும் கௌரவ உறுப்பினர் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

## 5. குழு பி.ப 3.00 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

**பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**இரண்டாவது அமர்வு – 2021 மார்ச் 23**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண (தவிசாளர்)
கௌரவ அருந்திக்க பர்னாந்து (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ ஜானக வக்கும்புர (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ கனக ஹேரத் (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ உதயன கிரிந்திகொட
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ ரொசான் ரணசிங்க
கௌரவ சிசிர ஜயகொடி
கௌரவ ரோஹண திஸாநாயக்க
கௌரவ சாந்த பண்டார
கௌரவ சிவஞானம் சிறீதரன்
கௌரவ வேலு குமார்
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ கபில அதுகோரல
கௌரவ சம்பத் அதுகோரல
கௌரவ எம். உதயகுமார்
கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி
கௌரவ குலசிங்கம் திலீபன்
கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்
கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்
கௌரவ அஜித் ராஜபக்
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
கௌரவ மதுர விதானகே
கௌரவ சமன்பிறிய ஹேரத்
கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

**1. ஆண்டறிக்கைகளைப் பரிசீலனை செய்தல்**

பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, பாராளுமன்றத்தினால் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்வரும் ஆண்டறிக்கைகளைப் பரிசீலனை செய்த பின்னர் அவற்றுடன் இணக்கியதோடு அது தொடர்பான குழுவின் அறிக்கையை, குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) ரமேஷ் பத்திரண அவர்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானித்தது.

1.1 2018 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பெனியின் ஆண்டறிக்கை
1.2 2018 ஆம் ஆண்டுக்கான தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கை
1.3 2018 ஆம் ஆண்டுக்கான தெங்குச் செய்கை சபையின் ஆண்டறிக்கை
1.4 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை

**2. கடந்த கூட்டக் குறிப்புகளிலிருந்து எழும் விடயங்கள்**

**2.1 தென்னைக் காணிகளை கூறுபோடுதல் மற்றும் இறப்பர் காணிகளில் இறப்பர் மரங்களை வெட்டுதல் தொடர்பாக சட்டத்தை முறைப்படுத்தல் – கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

தென்னை மரத்துக்கு மேலதிகமாக கித்துல் மற்றும் பனை மரத்தையும் உணவுச் சட்டத்துக்குள் சேர்க்குமாறு கௌரவ உறுப்பினரால் முன்மொழியப்பட்டது.

மாத்தறை மாவட்டத்திலும் தென்னை காணிகளை கூறுபோடும் செயற்பாடு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும், இந்த சட்டத்தை திருத்தும் வரைக்கும் வர்த்தமானி அறிவித்தல் ஊடாகவேனும் இதனை நிறுத்துமாறு கௌரவ வீரசுமன வீரசிங்ஹ கோரினார்.

ஒரு ஹெக்டேயருக்கு மேற்பட்ட தென்னங் காணிகளை கூறுபோடுவதற்கு தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களை கூறுபோடுதலை கட்டுப்படுத்தல் சபையின் அனுமதி தேவை என்பதால் 1958 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்கள் (கூறுபோடுதலை கட்டுப்படுத்துதல்) சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் ஏற்கெனவே சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதற்கு அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தவுடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

தென்னை மரத்தை, மரம் தறித்தலை கட்டுப்படுத்துதல் சட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

காணிகளை கூறுபோடுதல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்கள் பல்வேறு வகையிலான துணைச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் இயற்றுவதால் இது தொடர்பான பொறுப்பை ஒரு நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ ரோஹண திசாநாயக்கவினால் முன்மொழியப்பட்டது.

**2.2 குட்சைட் தோட்டம், மெததும்பர பிரதேசத்தில் ஏற்றுமதி கிராமமொன்றை அமைத்தல் – கௌரவ வசந்த யாப்பா பண்டார**

இந்த விடயம் தொடர்பான பதில்கள் கௌரவ உறுப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**2.3 கண்டி நாத தேவாலய காணிகளை புஸ்ஸல்லாவ தோட்டக் கம்பனியிலிருந்து விடுவித்துக்கொள்ளல் – கௌரவ வசந்த யாப்பா பண்டார**

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே கௌரவ உறுப்பினருக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்துக்கும் குறித்த கம்பனிக்குமிடையே வழக்கொன்று நிலுவையில் உள்ளதாகவும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

**2.4 கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் தனியார் துறையின் முதலீடு மற்றும் பங்கிலாபம் தொடர்பாக அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டியுள்ள நிதி கிடைக்காமை – கௌரவ மதுர விதானகே**

கௌரவ மதுர விதானகேவினால் கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) நிறுவனத்தின் தனியார் துறையின் முதலீடு, அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டியுள்ள தொகை தொடர்பாகவும் மேற்படி நிறுவனத்தின் முறை சாராத செயற்பாடு தொடர்பாகவும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

அமைச்சின் தலையீட்டின் பேரில் இந்த நிறுவனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட

வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான தீவிர பின்னூட்டல் மேற்கொள்ளப்படுவதாகவும், இராஜாங்க அமைச்சு ஊடாக அரசின் பங்களிப்புக்காக கிடைக்க வேண்டியுள்ள பங்குலாபம் தொடர்பாகவும் இந்த நிறுவனத்தை முறைசார்ந்ததாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படுமென கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் தனியார் துறையின் முதலீடு தொடர்பாக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர முன்மொழிந்ததோடு, கௌரவ ஹெக்டர் அப்புஹாமி கருத்து தெரிவிக்கையில், இந்த விடயத்தை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்வதே மிகப் பொருத்தமானதாக இருக்குமென குறிப்பிட்டார்.

## 3. கௌரவ உறுப்பினர்களின் எழுத்துமூலமான முன்மொழிவுகள்

### 3.1 சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான கினியம தோட்டத்திலிருந்து குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவின் வீரபொக்குண பிரதேச பொது அலுவல்களுக்காக 02 ஏக்கர் காணித் துண்டொன்றை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை – கௌரவ சாந்த பண்டார (பிரேரணை இல 95)

இந்த பிரேரணைக்கான பதில் அறிக்கை கௌரவ உறுப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

## 4. ஏனைய அலுவல்கள்

### 4.1 கௌரவ சாந்த பண்டார அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.1.1 ஆபத்தான மரங்களை அப்புறப்படுத்துவதற்கான செயன்முறையை துரிதப்படுத்தல்

எமது நாட்டில் தற்பொழுது நிலவும் சட்ட நிலைமையின் பிரகாரம் ஆபத்தான மரங்களை அப்புறப்படுத்தும் செயற்பாட்டுக்கு பிரதேச செயலகமும் மரக் கூட்டுத்தாபனமும் தொடர்புபடுகின்ற காரணத்தினால் குறைந்தபட்சம் இதற்காக சுமார் 06 மாதங்களேனும் எடுக்குமெனவும் ஆபத்தான மரங்களை அப்புறப்படுத்தும் செயன்முறையை துரிதப்படுத்தும் செயன்முறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டியது மிகவும் உகந்ததாக இருக்குமெனவும் கௌரவ உறுப்பினரால் வலியுறுத்தப்பட்டது.
ஆபத்தான மரங்களை அப்புறப்படுத்துவதற்கான அனுமதியை குறித்த பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெறும் வகையில் ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குழுவின் தவிசாளர் குழுவிற்கு அறிவித்தார்.

### 4.2 கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி டி சொய்சாவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.2.1 ஹெந்தலி தோட்டத்தில் தாவரவியல் பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்கு காணித் துண்டொன்றை பெற்றுக்கொள்ளுதல்

இரக்குவானை தொகுதியில் தெனியாய வீதியில் அமைந்துள்ள ஹெந்தலி தோட்டத்தில் 100 ஏக்கர் தாவரப் பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்கான கோரிக்கை தொடர்பாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இந்த கோரிக்கைக்கு, ஏற்புடைய தோட்டக் கம்பனி இணக்கம் தெரிவித்த பின்னர் அமைச்சினால் தலையீடு செய்ய முடியுமென கௌரவ தவிசாளர் கௌரவ உறுப்பினருக்கு அறிவித்ததோடு, எதிர்காலத்தில் இது தொடர்பாக கௌரவ உறுப்பினருக்கு பதிலொன்றை வழங்குமாறு பெருந்தோட்ட முகாமைத்துவ

மேற்பார்வைப் பிரிவின் பணிப்பாளருக்கு அறிவுறுத்தினார்.

## 4.3 கௌரவ சம்பத் அதுகோரல அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.3.1 எல்பிட்டிய தோட்டக் கம்பனியிடமிருந்து காணியைப் பெறுதல்

கிங் கங்கை கருத்திட்டம் காரணமாக காணிகள் மற்றும் வீடுகளை இழக்கின்ற ஆட்களுக்கு வழங்குவதற்கு எல்பிட்டிய தோட்டக் கம்பனியிடமிருந்து சுமார் 400 ஏக்கர் காணியைப் பெறுவதற்கு காலி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதால் குறித்த மேற்படி விடயத்தை ஒருங்கிணைத்துத் தருமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

### 4.3.2 பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளில் வசிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள்

எல்பிட்டிய, வட்டவல பெருந்தோட்டக் கம்பனிக்கும் சொந்தமான காணிகளில் மேற்படி தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமாவதற்கு முன்னர் வாழ்ந்த மக்கள் அவர்களின் அன்றாடப் பணிகளை மேற்கொள்கையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக கௌரவ உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.
பெருந்தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவிக்கின்ற காணிகளின் உரிமையை மேற்படி குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமென கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 4.3.3 மேலதிக இஞ்சி விளைச்சலை கொள்வனவு செய்யும் செயன்முறை

நெலுவ உள்ளிட்ட 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் சுமார் 8000 அளவிலான பெரும் இஞ்சி விளைச்சல் கிடைத்துள்ளதால் அவற்றை கொள்வனவு செய்வதற்கான செயன்முறையொன்றை தயாரித்துத் தருமாறு கௌரவ உறுப்பினரால் கோரப்பட்டது.

## 4.4 கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.4.1 பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான குறை பயன்பாட்டு காணிகளை அரசாங்கத்துக்குச் சுவீகரித்தல்

மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர நகர அபிவிருத்தி திட்டத்துக்கு பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து 5 ஏக்கர் காணித் துண்டொன்றை பெறுவதற்கு 20 ஆண்டுகள் கடந்துள்ளதாகவும் அது தீர்க்கப்படாதுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து காணிகளைப் பெறுவதிலுள்ள சிரமம் காரணமாக

### 4.4.2 மாத்தறை மற்றும் காலி மாவட்ட சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சார்ந்த பிரச்சினைகள்

மாத்தறை மற்றும் காலி மாவட்ட சிறு தேயிதைத் தோட்ட உரிமையாளர்களை தேயிலை மீள் நடுகை நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பதற்கு வழங்கப்படுகின்ற மானியம் போதவில்லை எனவும் அடுத்த நிலை கொழுந்துகளை பறிக்கும் வரைக்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினரால் கோரப்பட்டது.

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு மீள் நடுகைக்காக வழங்கப்படுகின்ற மானியத்தை ஒரு ஹெக்டேயருக்கு ரூ 7.5 இலட்சம் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு அரை ஏக்கருக்கு ரூ 5000 கொடுப்பனவுத் தொகையொன்றை 24 மாதங்களுக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டு அமைச்சரவைப் பத்திரமொன்று அமைச்சரவைக்கு

சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவிற்கு அறிவித்தார்.

இந்த மானியத்தொகையை ஒரு 2.5 ஏக்கருக்கு ரூ 5000 இற்கு பதிலாக ரூ 10000 வரை அதிகரித்துத் தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை வைத்தார்.

## 4.5 கௌரவ சிசிர ஜயகொடி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.5.1 சுதேச மூலிகை வகைகளைப் பயிரிடுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு கோருதல்

எமது நாட்டின் சுதேச மூலிகை வகைகளுக்கு உலக அளவில் பெரும் கேள்வி ஏற்பட்டுள்ள இத் தருணத்தில் ஏற்றுமதி துறையில் மறுமலர்ச்சியொன்றை ஏற்படுத்துவதற்கு சுதேச மூலிகை வகைகளை உள்நாட்டில் பயிரிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டது.

## 4.6 கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.6.1 வயம்ப பல்கலைக்கழகத்தில் பொறியியற் பீடமொன்றை நிறுவுவதற்கு காணியொன்றைப் பெறல்

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வயம்ப பல்கலைக்கழகத்துக்கு பொறியியற் பீடமொன்றை நிறுவுவதற்கு 12 ஏக்கர் காணி தேவைப்படுவதால் குருநாகல் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணியிலிருந்து மேற்படி காணியை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.
இந்த காணி ஏற்கனவே வெடி மருந்துப் பொருட்கள் களஞ்சியமொன்றுக்காக பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாக குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் தவிசாளர் தெரிவித்தார்.

## 4.7 கௌரவ கபில அதுகோரல அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.7.1 கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற காணித் துண்டுகள்

அமைச்சரவை தீர்மானமொன்றுக்கமைய கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கின்ற ஊழியர்களுக்கு வசிப்பதற்கு அப்பிரதேசத்தில் காணித் துண்டொன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரை அது நடைபெறவில்லை என கௌரவ உறுப்பினர் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

### 4.7.2 கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீள ஆரம்பித்தல்

கந்தளாய் சீனித் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள நாள் மற்றும் ஆரம்பிப்பதிலுள்ள தடைகள் யாவை என்பது தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

இக் கைத்தொழிற்சாலை எம்.ஜீ சுகர் எனும் தனியார் நிறுவனத்துக்கு உடன்படிக்கையொன்றின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் நடுத்தீர்ப்பின் போது இந்த நிறுவனத்துக்கு இழப்பீடு செலுத்துவதற்கு நேர்ந்துள்ளதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

.

### 4.7.3 கரும்புச் செய்கை மேற்கொள்ள முடியாத காணிகளை நெற் செய்கைக்காக வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான பயிர்ச்செய்கை மேற்கொள்ளக் கூடிய காணிகளில் கரும்புச் செய்கை மேற்கொள்ள முடியாத சுமார் 300 – 400 ஏக்கர் காணியை அப் பிரதேச மக்களுக்கு நெற் செய்கைக்காக வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

எம்.ஜீ சுகர் நிறுவனம் 2016 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், இக் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதெனவும், மேற்படி நிறுவனத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்து இந்த ஆண்டுக்குள் மேற்படி பிரச்சினையை தீர்ப்பதற்கு முடியுமெனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் அறிவித்தார்.

#### 4.7.4 திருகோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்ட தென்னங் கன்றுகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் தெங்கு அபிவிருத்திச் சபையினால் தென்னங்கன்றுகளை பகிர்ந்தளிக்கும் சில வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், அம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தவிசாளர் என்ற முறையில் தான் அது பற்றி அறிந்திருக்கவில்லை எனவும் கௌரவ உறுப்பினர் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

### 4.8 கௌரவ ரொசான் ரணசிங்க அவர்களினால் பொலனறுவை மாவட்டத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.8.1 தென்னங் கன்றுகளைப் பெறல்

பொலனறுவை பிரதேசத்துக்கு தற்பொழுது மழை கிடைக்காத காரணத்தினால் இத் தருணத்தில் தென்னங்கன்றுகளை வழங்குவது நடைமுறைச்சாத்தியமற்றதெனவும், அடுத்து வரும் செப்தம்பர் மாதத்தில் 10000 குடும்பங்களுக்குத் தேவையான தென்னங்கன்றுகளை வழங்குவதற்கான சாத்தியம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் வினவினார்.

#### 4.8.2 தெங்கு அபிவிருத்திச் சபையின் தென்னங்கன்றுகளை வைப்பதற்கு இடமொன்றை வழங்குதல்

பொலனறுவை மாவட்டத்தின் தெங்கு அபிவிருத்திச் சபையின் தென்னங்கன்றுகளை வைப்பதற்கு இடமொன்று இல்லை எனவும் அதற்காக காணியொன்றை ஒதுக்கித் தர முடியுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

அந்த இடத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதியை வழங்குவது பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

#### 4.8.3 ஏற்றுமதி விவசாயப் பயிர்களை பயிரிடுவதற்கு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்

ஏற்றுமதி விவசாயப் பயிர்களை மேம்படுத்துவதற்கு மஞ்சள், இஞ்சி, மிளகு போன்ற பயிர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்துமாறும் செப்தம்பர் மாதமளவில் இதற்காக கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான சாத்தியம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

### 4.9 கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.9.1 வெலிகடமுல்ல நாற்றுமேடையில் நாள் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களை நிரந்தரமாக்குதல்

கம்பஹா வெலிகடமுல்ல நாற்றுமேடையில் நாள் சம்பளம் பெறுகின்ற (Check roll அடிப்படையில்) சுமார் 40 – 50 ஊழியர்கள் உள்ளதாகவும் அவர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கோரினார்.

#### 4.9.2 அத்தனகல்ல பிரதேசத்துக்கு தேயிலை கள உத்தியோகத்தரொருவரின் தேவை

அத்தனகல்ல, ஊராபொல மற்றும் ருவண்வெல்ல ஆகிய பிரதேசங்களில் தேயிலைச் செய்கைக்காக கள உத்தியோகத்தரொருவரை பெற்றுத் தருமாறு கௌரவ உறுப்பினரால் கோரப்பட்டது.

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களில் ஒருவரை இப் பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கு ஈடுபடுத்துமாறு கௌரவ தவிசாளர் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தார்.

#### 4.9.3 கறுவா செய்கைக்குத் தேவையான பயிற்சியை வழங்குமாறு கோருதல்

அத்தனகல்ல பிரதேசத்தில் இன்றளவில் வெற்றிகரமான முறையில் கறுவா பயிரிடப்பட்டு வருகின்ற போதிலும், கறுவாத் தொழில் மற்றும் கறுவா சந்தையை உருவாக்குவதற்கு அறிவுடைய ஆட்கள் அப் பிரதேசத்தில் குறைவாக உள்ளதால் கறுவா செய்கைக்குத் தேவையான பயிற்சியை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

#### 4.9.4 தென்னங் கன்று நாற்றுமேடைகளில் கலப்பின தென்னங்கன்றுகளின் தட்டுப்பாடு

கிரிந்தவெல மற்றும் கம்பஹா தென்னங்கன்று நாற்றுமேடைகளில் போதியளவு தென்னங்கன்றுகள் இல்லாத காரணத்தினால் கலப்பின தென்னங்கன்றுகளை வழங்குவது தொடர்பாக கௌரவ உறுப்பினரால் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

### 4.10 கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.10.1 தென்னையுடன் தொடர்புடைய மூன்று நிறுவனங்களையும் இணைத்தல்

தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் தெங்குச் செய்கை சபை ஆகிய நிறுவனங்களுக்குப் பதிலாக தனி நிறுவனமொன்றைத் தாபிப்பதற்கு அரசாங்கம் தீர்மானமொன்றை எட்டியுள்ளதா என்பது தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

இந்த மூன்று நிறவனங்களும் தெங்குச் செய்கை தொடர்பாக ஒன்றுக்கொன்று வேறுப்பட்ட ஆனாலும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல கருமங்களை ஆற்றுவதால் மேற்படி மூன்று நிறுவனங்களின் நிருவாக அமைப்பை தனி நிருவாக பொறிமுறையொன்றின் மூலம் மேற்கொள்வது அதன் நடவடிக்கைகளுக்கு வசதியாக இருக்குமென கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

#### 4.10.2 அமைச்சின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள்

பெருந்தோட்ட அமைச்சின் கீழுள்ள தென்னை, தேயிலை, இறப்பர், கரும்பு மற்றும் பனை ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்த நிறுவனங்களை விட்டுச் செல்வதால் தென்னை, தேயிலை, இறப்பர், கரும்பு மற்றும் பனை ஆராய்ச்சி நிறுவனங்கள் அனைத்தையும் பல்கலைக்கழக மட்டத்துக்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்துள்ளதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பர்னாந்து குழுவிற்குத் தெரிவித்தார்.

## 4.11 கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.11.1 யாழ்ப்பாணம் நெடுந்தீவில் தென்னை மற்றும் பேரீச்சை பயிரிடுவதற்குத் தேவையான உதவிகள்

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நெடுந்தீவில் தென்னை, பனை மற்றும் ஐந்து ஆண்டுகளில் விளைச்சலைப் பெறக்கூடிய புதிய வகை பேரீச்சை பயிரிடுதல் தொடர்பான கருத்திட்டமொன்றை உருவாக்குமாறும் கௌரவ தவிசாளர் அப் பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் கோரினார்.

நெடுந்தீவில் தென்னை மற்றும் பனை பயிரிடுவதற்குத் தேவையான உதவிகளை வழங்க முடியுமெனவும் பேரீச்சை செய்கைக்குத் தேவையான விதைகளையும் கன்றுகளையும் பெறுவதில் சிக்கல்கள் காணப்படுகின்ற காரணத்தினால் அதற்கு தீர்வு உள்ளதா என கௌரவ தவிசாளர் வினவினார்.

பேரீச்சை கன்றுகளை இந்தியாவிலிருந்து தருவிக்க முடியுமெனவும், கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே பேரீச்சை செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் பெறப்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் தலைவருக்கும் பனை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கும் அடுத்த அமர்வுக்கு சமூகமளிக்கையில் பேரீச்சைக் கன்றுகளை பெறக்கூடிய செயன்முறை தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டது.

### 4.11.2 பனையுடன் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களின் உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல்

கிளிநொச்சியில் பனை உற்பத்தியுடன் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாகவும் அச் சங்கங்களை புதிதாகத் தாபிப்பதற்கு உத்தியோகதத்தர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட்டு புதிய அங்கத்தவர்களை நியமித்து செயற்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

பனையுடன் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பனங் கள்ளு வடிசாலைகள் இயங்குவதோடு இந்த கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் தெரிவுக்கான தேர்தலை மேற்கொள்ளும் போது, யாப்பின் ஊடாகவே பனை அபிவிருத்திச் சபைக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படி அதிகாரசபையின் தலையீட்டுடன் உத்தியோகத்தர் தெரிவு மேற்கொள்ளப்படுவதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் அருந்திக பர்னாந்து குறிப்பிட்டார்.

மேலும், பனை சார்ந்த உற்பத்திகளையும் கள்ளு கைத்தொழிலையும் மேம்படுத்துவதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

### 4.11.3 பளை பிரதேசத்தில் தென்னை பயிர்ச் செய்கைக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பளை பிரதேசத்தில் தெங்குச் செய்கை சபைக்குச் சொந்தமான வளமான தென்னங் காணியொன்றில் குடியிருக்கும் மக்களுக்கு அக் காணிக்கு முன்னாலுள்ள, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியை வழங்குவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க முடியுமா என்பது தொடர்பாக கௌரவ தவிசாளரினால் கௌரவ உறுப்பினரிடம் வினவப்பட்டது.

காணி உரிமையாளர்களைச் சந்தித்து அவர்களின் காணிகள் சுவீகரித்தல் தொடர்பாக கலந்துரையாடி அவர்களின் காணி உரித்து தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்து

உண்மை நிலைமையை தெளிவுப்படுத்திக் கொள்ள முடியுமென கௌரவ உறுப்பினரால் முன்மொழியப்பட்டது.

## 4.12 கௌரவ சுதர்ஷன தெனிபிடிய அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.12.1 நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்தல்

தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த பதுளை மற்றும் நுவரெலியா மாவட்ட நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு செயன்முறையொன்று அத்தியாவசியமாக உள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவின் முன் தெரிவித்தார்.

### 4.12.2 வீதி அபிவிருத்தியின் போது தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளைப் பெறுவதிலுள்ள சிரமங்கள்

வீதிகளுக்கு காப்பற் இடுகையில் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளைப் பெறுவதற்கு தோட்டக் கம்பனிகளின் அங்கீகாரத்தைப் பெறுவது நீண்ட காலச் செயற்பாடாக உள்ளதால் அதற்குத் தேவையான உதவியை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் அமைச்சிடம் கோரினார்.

அங்கீகாரம் தேவைப்படுகின்ற தோட்டக் கம்பனிகளின் பட்டியலையும் வீதிகளின் பட்டியலையும் வழங்க முடிந்தால் அமைச்சு மட்டத்தில் பேசி தீர்வுகளை பெற்றுத்தர முடியுமென கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 4.12.3 தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயிரிடப்படாத காணிகளை சிறு தேயிலைத் தோட்டச் சங்கங்களுக்கு வழங்குதல்

தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயிரிடப்படாத காணிகளை சிறு தேயிலைத் தோட்டச் சங்கங்களுக்கு வழங்கி அக் காணிகளில் பயிடுவதற்கு அனுமதி அளிக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரப்பட்டது.

தோட்டக் கம்பனிகளின் குறை பயன்பாட்டு காணிகளை மீள அரசாங்கத்துக்குச் சுவீகரிப்பதற்கு புதிய சட்டமொன்றை இயற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 4.12.4 பதுளை மாவட்டத்தின் வீடமைப்புக் கருத்திட்டங்கள்

பதுளை மாவட்டத்தில் வீடமைப்புக் கருத்திட்டங்களை உருவாக்கையில் அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் இதன் மூலம் பெருமளவு காணிகளை சேமிக்க முடியுமெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

## 4.13 கௌரவ சுதத் மஞ்சுல அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 4.13.1 கேகாலை மாவட்டத்தில் செம்பனைச் செய்கை

கேகாலை, ருவண்வெல்ல பிரதேசங்களில் காணப்படுகின்ற மல்வத்தை பெருந்தோட்டக் கம்பனி மற்றும் களனிவெளி பெருந்தோட்டக் கம்பனி ஆகியவை செம்பனைச் செய்கையை ஆரம்பித்த போதிலும் அரசாங்கம் கொள்கை ரீதியாக செம்பனைச் செய்கையை நிறுத்தி உள்ளதா என்பது தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் புதிதாக மரம் நாட்டுவதையும் ஏற்கனவே உள்ள மரங்களை வெட்டுவதையும் நிறுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் புதிதாக செம்பனைச் செய்கையை நிறுத்துவதற்கு அரசாங்கம் மிகத் தெளிவாக கொள்கை ரீதியான தீர்மானமொன்றில் இருப்பதாகவும் கௌரவ தவிசாளர் குழுவிற்கு அறிவித்தார்.

#### 4.13.2 மொரலிய தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணித் துண்டொன்றை பெற்றுக் கொள்ளுதல்

நகர அபிவிருத்தி வேலைத்திட்டம், கிராமங்களை விரிவுப்படுத்தும் வேலைத்திட்டம் மற்றும் ருவண்வெல்ல தொழில்நுட்பக் கல்லூரியை விரிவுப்படுத்தல் ஆகிய திட்டங்களுக்கு ருவணவெல்ல ஒருங்கிணைப்புக் குழுவினால் மொரலிய தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணிகளில் சுமார் 40 ஹெக்டேயர் காணி கோரப்பட்டுள்ளதால் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

நகர அபிவிருத்திக்கும் கிராமங்களை விரிவுபடுத்துவதற்குமாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக தோட்டக் கம்பனிகளின் விருப்பமின்றி காணிகளை சுவீகரிப்பதற்கு முடியுமென்பதால் அவ்வாறு தேவைப்படுகின்ற காணிகளை சுவீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 4.14 கௌரவ ரோஹண திஸாநாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.14.1 தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளின் தரம் குறைந்துள்ளமை

மாத்தளை மாவட்டத்தில் தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளின் தற்போதைய நிலையையும் தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்படுவதற்கு முன்னைய நிலையையும் ஒப்பிடும் போது அக் காணிகளின் தரம் குறைந்துள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்

நீரேந்துப் பிரதேசங்களாக பாதுகாக்கப்பட வேண்டிய இடங்கள் கைவிடப்பட்டுள்ள காரணத்தினால் அந்த இடங்கள் அழிந்து வருவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

#### 4.14.2 மலைப் பிரதேசங்களில் மரங்களைத் தறித்தல்

மலை உச்சிகளில் பாதுகாக்கப்பட்ட இடங்களைச் சார்ந்ததாக அமைந்துள்ள மரங்களைத் தறிப்பது பெரும் பிரச்சினையாகி உள்ளதாகவும் பாதுகாக்க வேண்டிய வனப் பகுதிகள் இன்றளவில் தரிசு நிலங்களாக மாறி வருவதால் தறிக்கப்படுகின்ற ஒவ்வொரு மரத்துக்குப் பதிலாகவும் புதிதாக 10 மரங்களை நாட்டி இந்த மலைகள் சார்ந்த வனப் பகுதிகளை பாதுகாக்க வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

#### 4.14.3 கித்துல் சார்ந்த உற்பத்திகள் மற்றும் மிளகுச் செய்கையை ஊக்குவித்தல்

கித்துல் மரம் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்ள முடியுமென்பதால் கித்துல் ஏராளமான பயன்களை பெறக்கூடிய ஒரு தாவரம் எனவும், அதனை சிறு ஏற்றுமதி பயிராக ஊக்குவிக்க வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

#### 4.14.4 தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான சுற்றுலா மையங்களிலிருந்து ஈட்டப்படுகின்ற வருமானம்

மத்திய மாகாணத்திலுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளின் சுற்றுலா கண்கவர் இடங்களிலிருந்து அக் கம்பனிகள் பெருமளவு வருமானங்களை ஈட்டுவதாகவும், அந்த வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துமாறும் கௌரவ உறுப்பினர் யோசனை முன்வைத்தார்.

#### 4.14.5 புதிதாக ஏற்படுத்தப்படும் 03 பொலிஸ் நிலையங்களுக்கு காணிகளைப் பெறுதல்

புதிதாக 03 பொலிஸ் நிலையங்களைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ள

காரணத்தினால் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயிரிடப்படாத தரிசு நிலங்களிலிருந்து பொலிஸ் நிலையங்களுக்காக காணிகளை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

**4.15 கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**4.15.1 மன்னார் பிரதேசத்தில் கள்ளு சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல்**

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற கள்ளுக்கு சந்தை வசதிகள் இல்லாத காரணத்தினால் மிகை உற்பத்திகளை அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் மன்னார் பிரதேசத்தில் கள்ளு சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

மன்னார் மற்றும் வன்னி மாவட்டங்களுக்கு மதுசார வடிசாலை மற்றும் கள்ளு சேகரிக்கும் நிலையமொன்றின் தேவை தொடர்பாக நீண்ட காலமாக கோரிக்கை வைக்கப்பட்டு வருவதாகவும் அந்த கோரிக்கை இன்றளவில் பனை அபிவிருத்திச் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோடு, இதனை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பர்னாந்து தெரிவித்தார்.

**4.16 கௌரவ அருந்திக்க பர்னாந்து அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**4.16.1 செஸ் வரி வருமானத்தின் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தை தென்னை அபிவிருத்திக்கு ஈடுபடுத்துமாறு மேற்கொள்ளப்படும் பிரேரணை**

தெங்கு கைத்தொழில் மூலமான செஸ் வருமானத்தின் குறிப்பிட்டதொரு சதவீதத்தை தெங்குச் செய்கையின் அபிவிருத்திக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் பிரேரித்தார்.

இந்த யோசனையை நிதி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சு செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

**4.17 கௌரவ வசந்த யாப்பா பண்டார அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**4.17.1 குட்சைட் தோட்டம், தேசிய பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் தனியார் தரப்பொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்படுதல்**

கண்டி மாவட்டத்தின் மெதமஹநுவர பிரதேசத்தில் அமைந்துள்ள குட்சைட் தோட்டம், தேசிய பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் தனியார் தரப்பொன்றுக்கு மீள குத்தகைக்கு வழங்கப்படுதல் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் இந்த தோட்டத்தை மீளவும் தனியார் தரப்பொன்றுக்கு குத்தகைக்கு வழங்கும் எந்த யோசனையும் இல்லை என கௌரவ தவிசாளர் குழுவிற்கு அறிவித்தார்.

**4.17.2 இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை மற்றும் ஊழியர் சேமலாப/ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய செலுத்துகைகள்**

குட்சைட் தோட்டத்தில் சுமார் 400 குடும்பங்கள் குடியிருப்பதாகவும், இத் தோட்டத்தில் சேவையாற்றியவர்களின் பணிக்கொடைத் தொகை மற்றும் ஊழியர் சேமலாப/ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத் தொகை பல ஆண்டுகளாக செலுத்தப்படவில்லை என்பதால், மேற்படி நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை முறையாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவிற்கு அறிவித்தார்.

### 4.17.3 குட்சைட் தோட்டத்தில் வசிக்கும் மக்களின் வீட்டுப் பிரச்சினை

இத் தோட்டத்தில் வசிக்கும் மக்களின் வீட்டு வசதிகள் பற்றிய பிரச்சினை தொடர்பாக கௌரவ உறுப்பினர் வினவினார்.

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இத் தோட்டத்திலும் வீட்டுத் திட்டமொன்றை ஆரம்பித்தல் தொடர்பாக தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சிடம் பேருந்தோட்ட அமைச்சு கோர வேண்டுமென கௌரவ தவிசாளர் உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

### 4.17.4 வெனிலா விளைச்சலை கொள்வனவு செய்தல்

கண்டி மாவட்டத்தில் வெனிலா விளைச்சல் வெனிலா செய்கையாளர்களின் சங்கத்தின் (Vanilla Growers Association) மூலமாகவே முழுமையாக கொள்வனவு செய்யப்படுவதோடு அவர்கள் அவற்றை எலிபன்ட் ஹவுஸ் (Elephant House) நிறுவனத்துக்கு விற்பனை செய்கின்றார்கள். ஆனால், இந்த ஆண்டில் எலிபன்ட் ஹவுஸ் நிறுவனம் மிகக் குறைந்த அளவிலான வெனிலாவையே கொள்வனவு செய்த காரணத்தினால் வெனிலா செய்கையாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

### 4.17.5 குழுவுக்கான முன்மொழிவுகள்

இக் குழுவில் விடயங்களை முன்வைப்பதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்குகையில், துறைகள் அடிப்படையிலோ அல்லது நிறுவனங்களின் அடிப்படையிலோ கேள்விகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் கௌரவ உறுப்பினர்களின் நேரத்தை மீதப்படுத்த முடியுமென கௌரவ உறுப்பினர் பிரேரித்தார்.

**5.** குழு பி.ப 1.30 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

**போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**இரண்டாவது கூட்டம் -2021 மார்ச் மாதம் 23**

***சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்***

கௌரவ காமினி லொக்குகே( தவிசாளர்)
கௌரவ திலும் அமுனுகம (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ அஸோக அபேசிங்ஹ
கௌரவ மதுர விதானகே

***சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்***

கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ றோஹண திஸாநாயக்க
கௌரவ பைஸால் காசிம்
கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்
கௌரவ சாந்த பண்டார
கௌரவ செல்வம் அடைக்கலநாதன்
கௌரவ அசோக்க பிரியந்த( இராஜாங்க அமைச்சர்)
கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ சிவஞானம் சிறீதரன்
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ அகில எல்லாவல
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன
கௌரவ குலசிங்கம் திலீபன்
கௌரவ எச். நந்தசேன
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ எஸ். எம். எம். முஷாரப்
கௌரவ அலி சப்ரி ரஹீம்
கௌரவ அஜித் ராஜபக்ஷ
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்
கௌரவ சமன்பிறிய ஹேரத்
கௌரவ தவராஜா கலை அரசன்

**1. கட்டளைகள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்.**

**1.1** (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 135 (4)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 237ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 ஒற்றோபர் 09ஆந் திகதிய 2144/19ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

**1.2** (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 143ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 237ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2020 சனவரி 30ஆம் திகதிய 2160/33ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

இக்கட்டளைகளைச் சமர்ப்பிப்பதன் நோக்கம் தொடர்பாக அமைச்சின் செயலாளரினால் நீண்ட விளக்கம் அளிக்கப்பட்டது.

**1.3 ஆண்டறிக்கைகள்.**

**1.3.1** 2017ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்
**1.3.2** 2018ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்
**1.3.3** 2016ஆம் ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆண்டறிக்கை
**1.3.4** 2017ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் ஆண்டறிக்கை

மேற்குறிப்பிட்ட கட்டளைகள் மற்றும் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## 2. வேறு விடயங்கள்.

### 2.1 இலத்திரனியல் சாரதி அனுமதிப்பத்திரங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் / தவறுகளை இனங் காண்பதற்காக பொலிசு உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல். – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்

இலத்திரனியல் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள போதும் அவற்றை பயன்படுத்துகின்றபோது ஏற்படுகின்ற தவறுகளை இனங் காண்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்ப உபகரணங்களை இதுவரை பொலிஸ் நிலையங்களுக்கேனும் வழங்காமை தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

அதற்காக விசேட உபகரணமொன்றினை வழங்குவதற்குப் பதிலாக கிவ் ஆர் குறியீடுகள் (QR Codes) மற்றும் கைத்தொலைபேசி பாவனையின் ஊடாக மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ளக்கூடிய முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.2 கௌரவ மதுர விதானகே அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 2.2.1 உள்ளூராட்சி மன்றங்களின் வாகன குழுவிற்கு போக்குவரத்து அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்.

இவ்விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

#### 2.2.2 அரச நிறுவனங்களில் கடமையாற்றும் சாரதிகளின் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்காக விசேட பயிற்சியினை வழங்கி, விசேட அனுமதிப்பத்திரமொன்றினையும் வழங்குதல்.

சாரதிகளின் கவனயீனம் மற்றும் அறியாமை காரணமாக அரச வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்காக அரச சாரதிகளுக்கு விசேட பயிற்சியொன்றினை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்காக போதியளவு சாரதி போதனாசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களும் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

### 2.3 தொழில் பயிற்சி அதிகார சபைக்கு சாரதி போதனாசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல். – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்

அதிகார சபைக்கு சாரதி போதனாசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு இடமளிக்கப்படுவதில்லை என கௌரவ உறுப்பினரால் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

உரிய பரீட்சைகளை நடத்தி சாரதி போதனாசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர், கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.4 இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை டிப்போவில் நிலவும் சாரதி மற்றும் நடத்துனர் பதவி வெற்றிடங்கள். – கௌரவ அகில எல்லாவல அவர்கள்**

பலாங்கொடை டிப்போவில் நிலவும் சாரதி மற்றும் நடத்துனர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து சேவைகளை ஒன்றிணைந்த நேரசூசிக்கு ஏற்ப செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வெற்றிடங்களை நிரப்பும் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் மற்றும் ஆட்சேர்த்ததன் பின்னர் பின்பற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர், கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் நீண்ட விளக்கமளிக்கப்பட்டது.

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்களும் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

**2.5 மட்டக்களப்பு தனியார் பேருந்து நிலையத்தில் நிலவும் குறைபாடுகள். - கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்கள்**

இப்பேருந்து நிலையமானது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முறையான திட்டத்திற்கு அமைவாக நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக மழை நீர் மற்றும் அதிக வெயிலினால் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையினால் அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கௌரவ பைஸால் காசிம் அவர்களும், கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி அவர்களும் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தனர்.

குழுவின் பரிந்துரையாக, இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுப்பதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.6 பெலிஅத்த புகையிரத நிலையம் வரை பொருட்களை ஏற்றிச் செல்லும் வசதியைப் பெற்றுக்கொள்ளல். - கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

புகையிரதம் மூலம் பொருட்களை ஏற்றிச் செல்லும் வசதி மாத்தறை புகையிரத நிலையம் வரை மாத்திரமே காணப்படுவதுடன் அவ்வசதியை பெலிஅத்த புகையிரத நிலையம் வரை பெற்றுத் தருமாறு கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**2.7 அரசியல் பழிவாங்கலை நிறுத்துதல். – கௌரவ அஸோக அபேசிங்ஹ அவர்கள்**

அரசியல் பழிவாங்கல் மீண்டும் இடம்பெறுவதாக கௌரவ அஸோக அபேசிங்ஹ அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதற்கான தீர்வினைப் பெற்றுத் தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அவ்விடயம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய தரவுகளையும் தகவல்களையும் பெற்றுத் தருமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் கௌரவ அஸோக அபேசிங்ஹ அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**2.8 கம்பஹ மாவட்டத்தின் கிராமிய வீதிகளில் நிலவும் போக்குவரத்து அசௌகரியங்கள். – கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன அவர்கள்**

அதிகளவான கிராமிய வீதிகளைக் கொண்ட மீரிகம, தொம்பே மற்றும் அத்தனகல்ல ஆகிய தேர்தல் தொகுதிகளுக்கு ஒரு டிப்போ மாத்திரமே காணப்படுவதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பமாகும் மற்றும் நிறைவடையும் நேரங்களில் கிராமிய வீதிகளில் பேருந்து சேவை பலவீனமான நிலையில் காணப்படுவதாக கொளரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கம்பஹ மாவட்டத்தின் போக்குவரத்து குழுக் கூட்டத்தை நடத்தி, பிரயாணத் திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர், கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.9 பழுதடைந்த பேருந்துகளைத் திருத்துதல். – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**

இவ்விடயம் தொடர்பாக கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் வினவப்பட்டது.

மிகப் பழைய பேருந்துகளைத் திருத்துவது பயனற்ற செயல் என்பதுடன் அதற்குப் பதிலாக 600 புதிய பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.10 அஹங்கம புகையிரத நிலையத்தினை அண்மித்ததாக அஹங்கம நகரத்திற்குள்பிரவேசிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள வீதி – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**

அஹங்கம புகையிரத நிலையத்தினை அண்மித்ததாக நகருக்குள் பிரவேசிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள வீதியை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் அவர்களினால் வினவப்பட்டது.

அக்கருத்திட்டம் தொடர்பாக அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் நிறுவனத்தின் பொறியியலாளர்களை ஈடுபடுத்தி கள ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் முன்னாள் புகையிரத பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

**2.11 ஹபராதுவ புகையிரத நிலையத்தில் கடுகதி புகையிரதத்தை நிறுத்துதல். – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**

மீண்டும் ஹபராதுவ புகையிரத நிலையத்தில் கடுகதி புகையிரதத்தை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்வதாக முன்னாள் புகையிரத பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

**2.12 கிராமிய வீதிகளில் சிறிய ரக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தல். – கௌரவ அகில எல்லாவல அவர்கள்**

கிராமிய பிரதேசங்களில் உள்ள ஒடுங்கிய வீதிகளில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு சிறிய ரக பேருந்துகளை (ஒரு கதவினைக் கொண்ட பேருந்துகள்) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவ்வீதிகளில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக ஒரு கதவினைக் கொண்ட பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

**2.13 இ.போ.ச. பணியாளர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நலன்புரித்திட்டங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். – கௌரவ அகில எல்லாவல அவர்கள்**

இ.போ.ச பணியாளர்களுக்குத் தேவையான உணவு, தங்குமிட, மலசலகூட வசதிகளை வழங்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சகல டிப்போக்களிலும் உள்ள மலசலகூடங்கள் மற்றும் தங்குமிட அறைகளை (Rest room) நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், அனைத்து டிப்போக்களிலும் நலன்புரி வர்த்தக நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.14 ஓமந்தை, தலைமன்னார் பியர், மாங்குளம் புகையிரத குறுக்கு வீதிகளில் காவலாளிக் கூடங்கள் சரியான முறையில் இயங்காமை. – கௌரவ செல்வராசா கஜேந்திரன் அவர்கள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வினவப்பட்டதுடன் அவ்விடங்களில் சிறந்த முறையில் சேவையில் ஈடுபடக்கூடிய காவலாளிகளை சேவையில் ஈடுபடுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

புகையிரத குறுக்கு வீதிகளில் தானியங்கி புகையிரத கடவைத் தடைகள் அல்லது மின் குமிழ் முறைமையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென்பது கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புகையிரத சமிஞ்சை முறைமையினை புதிதாக அமைப்பதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

பொலிசுத் திணைக்களத்தின் கீழ் புகையிரத குறுக்குவீதி காவலாளிக் கூடங்களில் கடமையாற்றும் காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனால் பொலிசுத் துறை தலைமையதிபதிக்கும் இது தொடர்பாக அறிவித்து மேற்குறிப்பிட்ட 4 காவலாளிக் கூடங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

**2.15 மன்னார் புகையிரத நிலையத்திற்கு இனையவழியாக புகையிரத பிரயாணச்சீட்டுக்களைப் பதிவு செய்தல். (On – line Booking) – கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களினால் குழுவிடம் வினவப்பட்டது.

இனையத்தளம் ஊடாக புகையிரத பிரயாணச் சீட்டுக்களைப் பதிவு செய்வது தொடர்பாக நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வருகை தந்திருந்த புகையிரத திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**2.16 திடீர் விபத்துக்களைக் குறைத்தல். – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**

திடீர் விபத்துக்களைக் குறைப்பதற்குத் தேவையான வழிமுறையொன்றினைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்காக விசேட குழுவொன்றினை நியமிக்குமாறு கோரி கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

தேசிய மட்டத்தில் போக்குவரத்து குழுவொன்றினை நியமித்து வீதிகளில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய இடங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

## 2.17 அரச வாகனங்களுக்கு ரயர்களை வழங்கல். - கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்

அரச வாகனங்களுக்குத் தேவையான ரயர்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## 2.18 கௌரவ மதுர விதானகே அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 2.18.1 வாகன விபத்துக்களுக்கு இழப்பீடு பெற்றுக்கொள்ளல்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை அல்லது ரெலிகொம் போன்ற நிறுவனங்களினால் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள தூண்கள், பலகைகள் காரணமாக ஏற்படக்கூடிய வாகன விபத்துக்கள் தொடர்பாக இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கு வழிமுறையொன்றினைத் தயாரிக்குமாறு கௌரவ உறுப்பினர் அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 2.18.2 கொழும்பு – தெமட்டகொடை புகையிரத முற்றத்திலிருந்து மருதானை வரையான புகையிரத வீதி அசுத்தமாதல்.

கொழும்பு – தெமட்டகொடை புகையிரத வீதியை சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ மதுர விதானகே அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 2.18.3 அரச சாரதிகளுக்கு நவீன ரக வாகனங்களில் உள்ள புதிய பாகங்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவினை வழங்கி தரமான சேவையைப் பெற்றுக்கொள்ளல்.

அரச வாகன முகவர் நிறுவனங்களுடன் இணைந்து அரச சாரதிகளுக்கு நிபுணத்துவ அறிவினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ மதுர விதானகே அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளுக்கு தனியான விசேட அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.18.4 பயணிகள் பேருந்துகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

பயணிகள் பேரூந்துகளில் கண்ணாடிகளை இருண்ட நிறமாக்கல், ஸ்ரிக்கர் ஒட்டுதல், தொலைக்காட்சிகளைப் பொருத்துதல் மற்றும் இசை ஒலிபரப்புதல் போன்றவை காரணமாக சாரதிகளின் கவனம் சிதறுவதாக கௌரவ உறுப்பினர் மதுர விதானகே அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அங்கீகாரத்தை அச்செயற்பாடுகளுக்காக பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படுத்த வேண்டுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

**2.18.5 வாகனப் பிரயாணத்திற்கு வீதிகள் பொருத்தமானவையா என்பது தொடர்பாக கணக்காய்வினை மேற்கொள்ளல்.**

வாகனப் பிரயாணத்திற்கு ஏற்ற வகையில் நெடுஞ்சாலைகள் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளனவா என்பதை இனங்காண்பதற்காக கணக்காய்வொன்றினை மேற்கொள்ளுமாறும் அது தொடர்பான விபரங்களை எதிர்வரும் அமைச்சுசார் ஆலோசனை குழுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்குமாறும் கௌரவ மதுர விதானகே அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**2.18.6 அம்பாறை, திகாமடுல்ல, சம்மாந்துறை உப டிப்போவை மூடுதல். – கௌரவ றிஸாட் பதியுதீன், கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள்**

அம்பாறை மாவட்டத்தின் திகாமடுல்ல தொகுதியின் சம்மாந்துறை உப டிப்போவை மூடுதல் தொடர்பாக வினவப்பட்டன.

நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசணைக்கு அமைவாக அந்த டிப்போவை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பேருந்துகள் டிப்போவில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அலுவலகப் பணிகள் பிரதான டிப்போவினால் மேற்கொள்ளப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர், கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.19 கௌரவ செல்வராசா கஜேந்திரன் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**2.19.1 வட மாகாண இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவில் நிலவும் குறைபாடுகள்.**

வட மாகாண போக்குவரத்துச் சபையின் டிப்போவுக்கு நிரந்தர பிராந்திய முகாமையாளர் ஒருவரை (Chief Regional Manager) நியமிக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வட மாகாண பிராந்திய போக்குவரத்துச் சபையின் அலுவலகம் மற்றும் கோண்டாவில் டிப்போ ஆகியவை ஒரே இடத்தில் அமைந்துள்ளதுடன் உத்தியோகத்தர்கள் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வடக்கு பிராந்தியத்தின் கோண்டாவில் டிப்போவின் பணிகள் மாங்குளம் டிப்போவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பாகவும் கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

**2.19.2 ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்கல்.**

ஒப்பந்த அடிப்படையில் பத்து வருடங்களாக சேவையாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**2.19.3 கோண்டாவில் புகைப் பரிசோதனை நிலையத்தை மீண்டும் திறத்தல்.**

தற்போது செயலிழந்த நிலையில் உள்ள 2 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கோண்டாவில் புகைப் பரிசோதனை நிலையத்தை மீளவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 2.19.4 பருத்தித்துறை டிப்போவின் பணியாளர்களுக்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

பருத்தித்துறை டிப்போவின் பொறியியல் பிரிவின் பணியாளர்களுக்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் 5 வருடங்களை விட அதிகமான சேவைக் காலத்தைக் கொண்ட பணியாளர்களை நிரந்தரமாக்கல், டிப்போ வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பணியாளர்களின் தங்குமிட அறைகள் மற்றும் மலசலகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கௌரவ இராஜாங்க அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அரசியல் பழிவாங்கல் இடம்பெறுமாயின் அது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் அலுவலகம் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், மதவச்சி வேலைத்தளத்தில் பேருந்து பொருத்தும் பணிகளை தனியார் துறையினர் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.20 வாகனங்களுக்கு உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது ஏற்படும் முறைக்கேடுகள். – கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்கள்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்களினால் வினவப்பட்டது. மேலும் தூரப் பிரயாண பேருந்துகளுக்கு மேலதிக ரயர் வசதிகள் (Spare wheel) வழங்கப்படவில்லை என கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

பேருந்துகளுக்கு உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யும் போது ஏற்படும் முறைகேடுகள் பழைய முறைகளை பயன்படுத்துவதன் காரணமாக இடம்பெறுவதாகவும், கணினி மென்பொருள் ஊடாக கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.21 கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 2.21.1 கம்பஹ மாவட்டத்தின் போக்குவரத்துப் பிரச்சினைகள்.

கம்பஹ மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் பயணிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகளைப் பெற்றுத் தருமாறு கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்களினால் குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கம்பஹ மாவட்டத்தின் போக்குவரத்து குழுவுக்கு, போக்குவரத்துத் தேவைகள் தொடர்பான தரவுகளைப் பெற்றுத்தருமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டதுடன் கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ள பேருந்துகள் கிடைக்கப் பெற்றதும் அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

#### 2.21.2 அத்தனகல்ல தாரலுவ புகையிரத நிலையத்தின் அசௌகரியங்கள்.

தாரலுவ புகையிரத நிலையத்தில் புகையிரதத்தை நிறுத்தும் போது புகையிரதப் பெட்டிகள் சாய்வதன் காரணமாக பயணிகள் வீதியில் விழுவதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்த அசௌகரியத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**2.21.3 ஹீன்தெனிய புகையிரத நிலையத்திற்கு (பாளுவரிகே) அருகில் வாகனங்களை நிறுத்துதல்.**

ஹீன்தெனிய புகையிரத நிலையத்திற்கு (பாளுவரிகே) அருகில் சைக்கிள்களை நிறுத்துவதற்காக இடம் ஒன்றினை ஒதுக்கித் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அது தொடர்பாக குழுவுக்கு முன்மொழிவு ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறு கௌரவ இராஜாங்க அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

**2.22 கல்கமுவ புகையிரத ஒதுக்கு வனப்பிரதேசத்தில் கல்கமுவ பொதுச் சந்தையை நடத்திச் செல்லல். – கௌரவ அசங்க நவரத்ன அவர்கள்**

மேற்குறிப்பிட்ட இடத்தில் பொதுச் சந்தையை நடத்திச் செல்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அது தொடர்பாக எழுத்து மூலமான வேண்டுகோளைச் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரினால் அறிவிக்கப்பட்டது.

**2.23 கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**2.23.1 பொத்துவில் பேருந்து நிலையத்தை பிரதான பேருந்து நிலையமாக தரமுயர்த்தல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப் அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக எழுத்து மூலமான வேண்டுகோளைச் சமர்ப்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.23.2 பொத்துவில் கொழும்பு பேருந்து வீதி.**

பொத்துவில் தொடக்கம் கொழும்பு வரை பயணிக்கும் பேருந்துகள் பொத்துவில் வீதியில் பயணிக்காமல் அக்கரைப்பற்று வீதியில் பயணிப்பது தொடர்பாக கௌரவ உறுப்பினர் அவர்களினால் வினவப்பட்டது.

அது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சரினால் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**2.24 கௌரவ பைஸால் காசிம் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**2.24.1 பேருந்து நடத்துனர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்.**

பேருந்து நடத்துனர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு நேர்முகப் பரீட்சைகளை நடத்தி, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்ட போதும் இதுவரை அவர்கள் பணிக்கு அமர்த்தப்படவில்லை என கௌரவ உறுப்பினர் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுத்தருமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

**2.24.2 பேருந்துகளுக்கு நடுக்கதவொன்றினைப் பொருத்துதல்.**

குளிரூட்டப்பட்ட, நீளமான பேருந்துகளுக்கு நடுக்கதவொன்றினைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ பைஸால் காசிம் அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**2.25 மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள – குருநாகல் புகையிரத வீதியில் இடம்பெயர்ந்துள்ள 400 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் வேறு விடயங்கள் - கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்கள்**

**2.25.1 தம்புள்ள – குருநாகல் புகையிரத வீதியில் இடம்பெயர்ந்துள்ள 400 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள்.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அந்நபர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான நிதிக்குரிய அங்கீகாரம் தற்போது பெறப்பட்டுள்ளது என முன்னாள் புகையிரத முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

**2.25.2 மாத்தளை டிப்போ நிலத்தில் உள்ள குழிகளை நிரப்பி சீராக்குதல்.**

மாத்தளை டிப்போ நிலத்தில் உள்ள குழிகளைக் கொண்ட பிரதேசத்தை நிரப்பி சீராக்கித் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு டிப்போ 107 இன் நிலங்களைச் சீராக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கௌரவ இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

**2.25.3 பேருந்துகளை பழுதுபார்க்கும் உபகரணங்களை வழங்குதல்.**

களுதாவளை டிப்போ வேலைத்தளத்தில் மாதத்திற்கு 11 பேருந்துகளை பழுதுபார்ப்பதாகவும், பேருந்துகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை பழுதுபார்க்கும் உபகரணங்களை அவ்வேலைத்தளத்திற்கு பெற்றுத் தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பழுதுபார்க்கும் உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**2.25.4 களுதாவளை டிப்போவுக்கு ரயர் மீள் நிரப்பல் இயந்திர உபகரணங்களை வழங்கல்.**

களுதாவளை டிப்போவுக்கு ரயர் மீள் நிரப்பல் இயந்திர உபகரணங்களை ( Tire Re – build Plant ) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அம்பாறை மற்றும் களுதாவளைக்கு புதிய உற்பத்தி இயந்திர உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இராஜாங்க அமைச்சர், கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

#### 2.25.5 மாத்தளை, உக்குவெல போக்குவரத்துப் பிரச்சினைகள்.

உக்குவெல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் புகையிரத திணைக்களத்தை பிரதிநித்துவம் செய்வதற்கு பிரதிநிதி ஒருவரை பெற்றுத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 2.25.6 அரசியல் பழிவாங்கலை நிறுத்துதல்.

அரசியல் பழிவாங்கலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அலுவலகங்களில் இருக்கும் மேலதிக பணியாளர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அலுவலகங்களில் உள்ள மேலதிக பணியாளர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

#### 2.25.7 பணியாளர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு.

மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவு, பதவியுயர்வு வழங்கி வருமானம் மற்றும் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து தருமாரு கௌரவ உறுப்பினர் அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 2.26 கிராமிய வீதிகளில் பேருந்து பிரயாணத்தை முறையாக மேற்கொள்ளல். – கௌரவ சுதத் மஞ்சுல அவர்கள்

ருவன்வெல்ல, தெஹிஓவிட, எட்டியந்தோட்டை, புலத்கொஹுபிட்டிய கிராமிய வீதிகளில் பேருந்து பிரயாணத்தை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ சுதத் மஞ்சுல அவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அப்பிரதேசங்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.27 பொலன்னறுவை டிப்போ – கௌரவ அமரகீர்த்தி அதுகோரள அவர்கள்

பொலன்னறுவை டிப்போ அவ்விடத்தில் இருந்து நீக்கப்படுமா என கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

அதற்கு அதிகளவு செலவு ஏற்படும் என்பதால் தற்போதைக்கு அவ்விடத்திலேயே அதனை இயங்கச் செய்து உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென கௌரவ இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.28 கௌரவ பைஸால் காசிம் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 2.28.1 நிந்தவூர், அட்டப்பள்ளம் பாடசாலை பிள்ளைகளுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்து தற்போது சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளமை.

கல்முனை டிப்போவினால் நிந்தவூர், அட்டப்பளம் பாடசாலை பிள்ளைகளுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்து தற்போது சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது என கௌரவ உறுப்பினர் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

அவ்விடத்திற்கு பேருந்து ஒன்றினை சேவையில் ஈடுபடுத்துவதாக கௌரவ இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

**2.28.2 கல்முனை தொடக்கம் கூழாவடி வீதியில் பயணிக்கும் பாடசாலை பேருந்தினையும் சேவையில் இருந்து நிறுத்தி உள்ளமை.**

கல்முனை தொடக்கம் கூழாவடி வீதியில் பயணிக்கும் பாடசாலை பேருந்தினையும் சேவையில் இருந்து நிறுத்தி உள்ளதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

3. குழு பி.ப. 12.45 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**இரண்டாவது கூட்டம் - 2021 மார்ச் 24**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத் (தவிசாளர்)
கௌரவ (கலாநிதி) நாளக கொடஹேவா (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ முஜிபுர் ரஹுமான்

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ சாந்த பண்டார
கௌரவ அசோக்க பிரியந்த
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ இஷாக் ரஹுமான்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ சம்பத் அதுகோரல
கௌரவ நஸீர் அஹமட்
கௌரவ ஜகத் குமார
கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ மிலான் ஜயதிலக்க
கௌரவ நிமல் பியதிஸ்ஸ
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ எஸ்.எம்.எம்.முஸ்ஸாரப்
கௌரவ அலி சப்ரி ரஹீம்
கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர
கௌரவ அஜித் ராஜபக்ஷ
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
கௌரவ டீ. வீரசிங்க
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ
கௌரவ யதாமிணீ குணவர்தன
கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

1. **வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்.**

பாராளுமன்றத்தினால் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்வரும் வருடாந்த அறிக்கைகளை ஆராய்ந்ததன் பின்னர் இந்த வருடாந்த அறிக்கைகளுக்கு குழு உடன்பாடு தெரிவித்ததுடன், இது தொடர்பிலான குழு அறிக்கை பிரதமரும் குழுவின் தவிசாளருமான கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் 2021 ஏப்பிறல் மாதம் 23ஆந் திகதி பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

1.1 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை
1.2 2016ஆம் ஆண்டுக்கான நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

**2. 2020.11.24ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் கூட்டக்குறிப்புகளிலிருந்து எழுகின்ற விடயங்கள்**

**2.1 நகர்புற குடியிருப்புகளில் வாழும் மக்களின் நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் - கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

2020ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரை இது தொடர்பிலான கூட்டு செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயார் செய்து இதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் வீ.யூ.பீ.உதய நாணாயக்கார தெரிவித்தார்.

**2. 2. திட்ட அங்கீகரிப்பினை ஒன்லைன் (இணையவழி) முறையில் மேற்கொள்ளுதல் மற்றும் திட்ட அங்கீகரிப்புக்கான சட்டதிட்டங்களை இற்றைப்படுத்துதல் - கௌரவ மதுர விதானகே**

**2.2.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான ஒன்லைன்(இணையவழி) முறையை அறிமுகப்படுத்துதல்**

உள்ளூராட்சி நிறுவனங்களில் ஒன்லைன் முறையை அறிமுகப்படுத்துமாறு கிடைக்கப்பெற்றுள்ள ஆலோசனைகளின் பிரகாரம், கோட்டே மாநகர சபைக்கு இதனை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகைள் மேற்கொள்ளப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். மேலும், முன்னோடிக் கருத்திட்டமாக கம்பஹ மற்றும் களுத்துறை பிரதேச சபைகளுக்கு இதனை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் சகல உள்ளூராட்சி நிறுவனங்களினதும் நடவடிக்கைகளை ஒன்லைன் முறையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**2.2.2 உள்ளூராட்சி நிறுவனங்கள் திட்ட அங்கீகரிப்புச் செயன்முறையினை முறையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் செயற்படுத்தல்**

உள்ளூராட்சி நிறுவனங்கள் திட்ட அங்கீகரிப்புச் செயன்முறையினை முறையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் செயற்படுத்தாமையினால் மக்கள் பெரிதும் அசௌகரியத்துக்கு உட்படுவதாக கௌரவ மதுர விதானகே தெரிவித்தார். இச்செயன்முறையின்போது மக்களின் நேரடி பங்கேற்பினை குறைக்கும் வகையில் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி இந்நடவடிக்கைகளை முறைப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு முன்வைக்கப்பட்டுள்ள திட்ட அங்கீகரிப்புச் செயன்முறையினை 14 -21 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

**2.2.3 விண்ணப்பப்படிவங்களை நியம மாதிரிக்கு ஏற்ப தயார் செய்தல்**.

சகல உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களை அங்கீகரிக்கும் செயன்முறையுடன் தொடர்புடைய விண்ணப்பப்படிவங்களை எளிதாக நியம மாதிரியில் தயார் செய்ய வேண்டுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

### 2.2.4 திட்டங்களை அங்கீகரிப்பதற்காக பல்வேறு அரச நிறுவனங்களை நாடவேண்டி இருத்தல்.

மேலும், குறிப்பிட்டதொரு திட்டத்தை அங்கீகரிக்கையில் இதற்காக பல்வேறு அரச நிறுவனங்களை நாட வேண்டி இருத்தல் முதலீட்டாளர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதாக கௌரவ மதுர விதானகே தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயன்முறைக்கு ஏற்ப முதலீட்டாளர்களுக்கு பல்வேறு அலுவலகங்களை நாட வேண்டிய தேவை ஏழாதென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். இதன்போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பித்ததன் பின்னர் ஒன்லைன் முறையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையே இதனை தேவையான நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தி குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### 2.2.5 இலங்கை, வர்த்தக சுட்டியில் ( Doing business Index) வகிக்கும் நிலை

இலங்கை, வர்த்தக சுட்டியில் ( Doing business Index) வகிக்கும் நிலை குறித்து திருப்தியடைய முடியாதெனவும் இந்நிலைமை முதலீட்டாளர்களைக் கவருவதில் தாக்கம் செலுத்துவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

வர்த்தக சுட்டியை ( Doing business Index) கணிப்பீடு செய்கையில் 9000 சதுர அடிகளுக்கு அதிகமான கட்டிடங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படுவதனால் இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும், 9000 சதுர அடிகளுக்குக் குறைந்த கட்டிடங்கள் தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களும் நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### 2.2.6 மக்களுக்கு தகவல் அறிவதற்கான முறையியலொன்றை தயார் செய்தல்.

உள்ளூராட்சி நிறுவனங்களில் திட்டங்களை அங்கீகரிக்கும் செயன்முறை குறித்து மக்களுக்குத் தேவையானபோது தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக முறைசார்ந்த முறையியலொன்றை தயார் செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 2.2.7 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தத்துவங்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கையளித்தல்

இன்றைய காலகட்டத்தில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தத்துவங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்படாமை, கிராமிய பிரதேங்களில் உள்ள மக்களின் செயற்பாடுகள் மீது பாரிய தாக்கம் செலுத்தியுள்ளதாக கௌரவ மிலான் ஜயதிலக்க மற்றும் கௌரவ குமாரசிறி ரத்னாயக்க ஆகியோர் தெரிவித்தனர்.

### 2.2.8 நகரப்புறங்களில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நிர்மாணிப்புகள்

நகரப்புறங்களில் இன்றளவில் பாரியளவில் சட்டவிரோத நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இது தொடர்பில் எந்தவித ஒழுங்குறுத்தலும் இல்லையெனவும் கௌரவ மதுர விதானகே தெரிவித்தார்.

இத்தகைய சம்பங்கள் குறித்து முறைப்பாடு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பொலிஸ் திணைக்களத்தினையும் இணைத்தவாறு, தொடர்ச்சியாக இயங்குமொரு பிரிவினை தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

**2.2.9 திட்டங்களை அங்கீகரிக்கையில் எழும் பிரச்சினைகள் தொடர்பில் அரச கொள்கையொன்றை அறிமுகப்படுத்துதல்.**

திட்ட அங்கீகரிப்புச் செயன்முறையில் தொடர்புகொள்ளும் நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் காலத்துக்குக் காலம் மாறுவதன் காரணமாக, ஒரே விடயம் குறித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட விதப்புரைகளை வழங்குவதாக கௌரவ மதுர விதானகே தெரிவித்தார்.

ஆகையால், குறிப்பிட்டதொரு விடயம் குறித்து செயற்படுவதற்கான அரச கொள்கையினை தயார் செய்வது அவசியமானதென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

**2.3 பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள் கட்டிடங்களை திட்டமிடுகையில் பிரயோகரீதியில் செயற்படாமை - கௌரவ மதுர விதானகே.**

கட்டிடங்களை திட்டமிடுவது தொடர்பிலான புதிய வழிகாட்டல்கள் எதிர்காலத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளமையால், இப்பிரச்சனைக்கான தீர்வு எட்டப்படுவதாக இராஜங்க அமைச்சர் கௌரவ ( கலாநிதி) நாலக்க கொடஹேவா தெரிவித்தார்.
கட்டிடக்கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்தல் அவசியமென கௌரவ மதுர விதானகே தெரிவித்தார்.

**2.4 மீரிகம நகரத் திட்டம் - கௌரவ கோகிலா குணவர்தன**

இது எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் (கலாநிதி) நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நகர அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக அவற்றை நகர அபிவிருத்தி அதிகாரபைக்கு ஆற்றுப்படுத்துமாறு கௌரவ தவிசாளர் கௌரவ உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.5 யாழ்ப்பாண மாவட்டத்துக்கான செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் - கௌரவ அங்கஜன் இராமநாதன்**

இக்கருத்திட்டம் தற்போது துரிதமாக இடம்பெற்றுவருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

**2.6 உள்ளூராட்சி நிறுவனங்களைக் கருத்தில் கொள்ளாது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்தின் மீது வீடமைப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல். - கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

2012 - 2013 காலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தில் மக்கள் குடியேறியுள்ளார்கள் எனினும், இக்கருத்திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லையென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

வீடுகளின் விற்பனை நிறைவடைந்துள்ளமையால், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இதனை மீண்டும் பொறுப்பேற்பதற்கான இயலுமை இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபை அங்கீகாரம் வழங்கியுள்ளமையினால், இதன் பொறுப்பினை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஏற்க வேண்டுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார். ஆகையால், குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்துடன் தொடர்புகொண்டு எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

**2.7 குளியாப்பிட்டிய மீகஹகொட்டுவையில் பூங்காவொன்றை அமைத்தல் - கௌரவ சமன்பிரிய ஹேரத்**

இங்கு குறிப்பிடப்படுவதைப்போன்று பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டமொன்று இல்லையென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

**2.8 கல்கமுவை தேர்தல் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் -கௌரவ அசங்க நவரத்ன**

கடந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாமையினால் தற்போது முன்னெடுக்கப்படும் கிராமியத் திட்டங்களிலிருந்து தேவையான நிதியைப் பெற்றுக்கொண்டு இந்த வசதிகளை வழங்க வேண்டுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

**3. கௌரவ உறுப்பினர்களின் முன்மொழிவுகள்**

**3.1 காணியை அபிவிருத்தி செய்வதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக உணவட்டுன, போனவிஸ்டாவ, ரொஸ்வுட்டில் வசிக்கும் திரு.எம்.எஸ்.நாணாயக்காரவினால் முன்வைப்படும் கோரிக்கை - கௌரவ சந்திம வீரக்கொடி (முன்மொழிவு இலக்கம் 5)**

பதிலறிக்கை கௌரவ அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

மேற்படி வேண்டுகோளை முன்வைக்கும் நபர் இப்பிரதேசத்தைச் சார்ந்த பூர்வீக குடியிருப்பாளரெனவும் அவர் காணியை அபிவிருத்தி செய்வதற்கான கோரிக்கையினை முன்வைக்கையில், இந்த வலயம் கூருணர்வுமிக்க பிரதேசமாகக் குறிப்பிடப்பட்டு இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார். இப்பிரதேசத்தில் மேற்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்படும் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரியப்படுத்தினார். ரூமஸ்சல பிரதேசத்தில் சுற்றாடல் அழிவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்க முடியாதென அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது பிரேரணை முன்வைக்கப்படும் கருத்திட்டங்கள் குறித்து ஆய்ந்தறிந்து இதற்கான அங்கீகாரம் வழங்கப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இக்கருத்திட்டத்துக்கான பிரேரணைகளை சரியாக தயார் செய்து முன்வைக்குமாறு இராஜாங்க அமைச்சர், கௌரவ (கலாநிதி) நாலக்க கொடஹேவா கௌரவ உறுப்பினருக்குத் தெரிவித்தார்.

மேலும், இப்பிரதேசம் கூருணர்வுமிக்க வலயமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், இக்கூருணர்வு வலயத்திற்குள் இப்பிரதேசத்திலுள்ள அரச காணிகள் உள்ளடக்கப்படவில்லையென கௌரவ சந்திம வீரக்கொடி தெரிவித்தார். இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

**3.2 பதில்கள் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள கௌரவ உறுப்பினர்களின் ஏனைய முன்மொழிவுகள்**

**3.2.1** அக்குரெஸ்ஸ, ஹுலந்தாவ தோட்டம் எனும் முகவரியில் வசிக்கும் திரு.பாலித லியனகே தமது வீட்டுக்கு கூரைத் தகடுகளை வழங்குமாறு முன்வைத்துள்ள கோரிக்கை - **கௌரவ புத்திக பத்திறண (முன்மொழிவு இலக்கம் 27)**

**3.2.2** கொழும்பு 12, புனித செபஸ்தியார் வீதியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான காணித் துண்டு இலக்கம் 7388 மற்றும் 7015 இனைக் கொண்டுள்ள காணியில் 52.18 பர்ச்சஸ் காணித் துண்டை மேமா/கொ/அல் ஹிக்மா கல்லூரிக்கு வழங்குவது தொடர்பில் கௌரவ உறுப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை. - **கௌரவ ரஊப் ஹகீம் (முன்மொழிவு இலக்கம் 33)**

**3.2.3** காலி, கடவத் சதர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மொஹிதீன் தோட்டம் வீடமைப்புத் திட்டத்தில் 30 வருட காலத்துக்கும் அதிகமாக வசிக்கும் வீட்டுரிமையாளர்களுக்கு அறுதிஉறுதிகளை வழங்குமாறு கோரி கௌரவ உறுப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை - **கௌரவ ரஊப் ஹகீம் (பிரேரணை இலக்கம் 34)**

## 4. ஏனைய நடவடிக்கைகள்

## 4.1 கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.1.1 நொச்சியாகம நகர அபிவிருத்தித் திட்டம்

நொச்சியாகம நகரத்துக்கான நகரத் திட்டத்தை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், இதன்போது பஸ் தரிப்பு நிலையம், பொது மலசலகூடம் மற்றும் நடைப்பயிற்சி பாதை ஆகிய வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ கே.பி.எஸ்.குமாரசிறி கோரிக்கையினை முன்வைத்தார்.

### 4.1.2 வீட்டுக் கடனுக்கு விண்ணப்பித்தல்

வீட்டுக் கடனுக்கு விண்ணப்பித்துள்ள தமது மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு கடன் வழங்குவதில் தாமதம் காணப்படுவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

### 4.1.3 அநுராதபுரம் சமாதி (அமர்ந்த நிலையில் இருக்கும்) புத்தர் சிலைக்கு அருகாமையிலான வலயத்தில் வர்த்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்பினை இல்லாதொழித்தல்.

குறிப்பிட்ட அனைத்துத் தரப்புகளினதும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளபோதிலும், அநுராதபுரம் சமாதி (அமர்ந்த நிலையில் இருக்கும்) புத்தர் சிலைக்கு அருகாமையிலான வயலத்தில் வர்த்தம் மேற்கொள்வதற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக் குறித்து விகாராதிபதி தேரர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருடன் விகாராதிபதி தேரரை சந்தித்து கலந்துரையாடுமாறு இராஜங்க அமைச்சர் (கலாநிதி) நாலக்க கொடஹேவாவினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

## 4.2 கௌரவ மிலான் ஜயதிலக்க அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்.

### 4.2.1 கிரிந்திவெல நகர அபிவிருத்தித் திட்டம்

கிரிந்திவெல பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ள பிரதேச சபைக் கட்டிடத்துக்குப் பின்னால், சுயகைத்தொழிலாளர்களுக்கு வர்த்தகம் மேற்கொள்வதற்கான நிலையமொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதே இடத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார். மேலும், கிம்புல்விலவத்த வாவியைப் புனரமைத்தல் தொடர்பிலும் கௌரவ மிலான் ஜயதிலக்க வினவினார்.

**4.2.2 கிரிந்திவெல பஸ் தரிப்பு நிலையத்தைக் கையளித்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் கிரிந்திவெல பஸ் தரிப்பு நிலையத்தை இலங்கை போக்குவரத்து அதிகாரசபைக்குக் கையளிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

**4.3 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**4.3.1 அஹங்கம நகர அபிவிருத்தித் திட்டம்**

அஹங்கம நகரில் காணப்படும் வாகன நெரிசல் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் நகர மையத்தை சுற்றி புறவழியொன்று (Bypass) தேவைப்படுவதாகவும் இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

**4.3.2 .இமதூவ நகர அபிவிருத்தித் திட்டம்**

இமதூவ நகருக்கான உத்தேச நகர அபிவிருத்தித் திட்டத்தை பூர்த்தி செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.
இமதூவ நகர அபிவிருத்தித் திட்டத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளுக்காக இந்த வருடத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

**4.3.3 போகஹகொட நகர அபிவிருத்தித் திட்டம்**

போகஹகொட நகர அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்து அதனை நடைமுறைப்படுத்துகையில் எழுந்த மற்றுமொரு தரப்பினரின் தலையீட்டின் காரணமாக சிக்கல் நிலை ஏற்பட்டமையினால், இவ்வாறு இடம்பெறாதிருக்க கவனமாயிருத்தல் வேண்டுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

**4.3.4 எல்பிட்டி நகர அபிவிருத்தித் திட்டம்**

எல்பிட்டி நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான சமர்ப்பணத்தை எதிர்வரும் அமைச்சுசார் ஆலோனைக் குழுவில் முன்வைக்குமாறு கௌரவ சந்திம வீரக்கொடி கோரிக்கையினை முன்வைத்தார்.

கடந்த காலப்பகுதியில் நகர அபிவிருத்தித் திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை எனவும், தற்போது முன்னுரிமை வரிசையில் இத்திட்டங்களின் கீழ் கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர், கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா தெரிவித்தார்.

**4.4 கௌரவ ஜகத் குமார அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**4.4.1 கடுவலை மற்றும் பத்தரமுல்லை நகரங்களில் நிலவும் வாகன நெரிசலைக் குறைத்தல்**

கடுவலை மற்றும் பத்தரமுல்லை நகரங்களில் காணப்படும் வாகன நெரிலைக் குறைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ ஜகத் குமார கோரிக்கையினை முன்வைத்தார்.

இந்த விடயத்துக்கான தீர்வாக தரைக்கு மேலாக வீதிகளை (Elevator Roads) நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும், மாலம்பே, கடுவலை, அத்துருகிரிய மற்றும் பத்தரமுல்லை நகரங்களுக்கான நகர அபிவிருத்தித் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

### 4.4.2 பாதுக்கை நகரின் விளையாட்டு மைதானத்தில் நீர் வடிந்து செல்லாமை

பாதுக்கை நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள விளையாட்டு மைதானத்தில் நீர் வடிந்து செல்வதில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையானது இதனை பிரதேச சபைக்குக் கையளிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லை என்பதனால், இந்த விளையாட்டு மைதானத்திற்குத் தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு இதனைக் கையளிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 4.4.3 வீட்டுத்திட்ட உதவித்தொகையை வழங்குதல்

குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டுத்திட்ட உதவித்தொகை வழங்குவதற்கான தகுந்த வேலைத்திட்டமொன்றை தயார் செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒருதொகை நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு நகர மட்டத்திலான பகுதியளவு நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு நன்கொடையை வழங்குவதற்கான இயலுமை காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

### 4.4.4 மாலம்பே மாதிரி கனிஷ்ட கல்லூரிக்கு விளையாட்டு மைதானமொன்றை வழங்குதல்

மாலம்பே மாதிரி கனிஷ்ட கல்லூரியினால் பயன்படுத்தப்படும் ஹல்பராவே விளையாட்டு மைதானத்தை இக்கல்லூரிக்கு வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

இந்த விளையாட்டு மைதானம் தனியார் காணியொன்றில் அமைந்துள்ளமையினால் இவர்களுக்கு பிறிதொரு காணியை வழங்குவதன் மூலம் இதனை இக்கல்லூரிக்குப் பெற்றுக்கொள்ள முடியுமென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

### 4.4.5 கொத்தலாவல பௌத்த சமாதி நிலையத்தின் கட்டிடங்களை அகற்றுமாறு அறிவித்தல்

கொத்தலாவல சமாதி நிலையத்தின் சில கட்டிடங்கள் அங்கீகரிக்கப்படவில்லையென்பதைக் குறிப்பிட்டு அவற்றை அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமையினால் இதற்கான தீர்வினை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

இப்பௌத்த நிலையத்தின் திட்டமானது கடுவலை நகர சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமாகையால், இதனை மேற்கொள்வதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

கடுவலை நகர சபை இதில் தலையிடுவதில்லை என்பதனால், நகர அபிவிருத்தி அதிகார சபை இதில் தலையிட்டு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுத் தருமாறு கௌரவ ஜகத் குமார கோரிக்கையினை முன்வைத்தார்.

இப்பௌத்த நிலையத்திலிருந்து அகற்றுமாறு வழக்குத் தீர்ப்பு கிடைக்கப்பெற்றுள்ள பகுதியை அகற்றியதன் பின்னர், எஞ்சுகின்ற கட்டிடத்துக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்தை வழங்க முடியுமென அவர் தெரிவித்தார்.

#### 4.4.6 கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேச மக்களுக்கு பயனுறுதிமிக்க சேவையினை வழங்குதல். - கௌரவ யதாமிணீ குணவர்தன

கொழும்பு மா நகர சபையினால் வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறன் தொடர்பில் திருப்தியடைய முடியாதென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார். மேலும், மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தொகையினருக்கும் பிரதேசத்துக்கும் மாத்திரம் சேவைகள் வழங்கப்படுவதாக கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்துள்ள நிறுவனங்களான நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக காணப்பட்ட பணியகங்கள் போன்ற நிறுவனங்களை மீண்டும் செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களின் தேவை தொடர்பிலான புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகளை வழங்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகள் மற்றும் நகர சபை விளையாட்டு மைதானங்கள், வீட்டுத் திட்டங்களில் வீடுகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள ஓய்வு நிலையங்களை அபிவிருத்தி செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.
குறிப்பிட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகளை வழங்குமாறு கௌரவ தவிசாளர் கௌரவ உறுப்பினரிடம் கோரினார்.

கொழும்பு நகரம் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின் பெறுபேறுகள் மற்றும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய நீண்டதொரு விளக்கம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டது.

மீள்குடியேற்றம் தற்போது முறையாக மேற்கொள்ளப்படுவதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

### 4.5 கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 4.5.1 புத்தளம் மாவட்ட மக்களுக்கு வீடுகளை வழங்குதல்.

புத்தளம் மாவட்ட மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

வீடுகளை வழங்கும் செயன்முறையானது முழுமையாக வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்படுவதாகவும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை தெரிவு செய்கையில் வாழ்வதற்கு உகந்த நிலையில் காணப்படாதுள்ள வீடுகளுக்கு கட்டாயமாக வீடுகள் வழங்கப்படுமெனவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

#### 4.5.2 நுரைச்சோலை பொருளாதார நிலையம்

நுரைச்சோலை பொருளாதார நிலையத்தின் வசதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக இந்நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 4.6 மொறொன்துடுவை நகர அபிவிருத்தித் திட்டம் - கௌரவ ஜயந்த சமரவீர

மொறன்துடுவை நகர அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் குறித்து கௌரவ உறுப்பினர் வினவினார். இங்கு பஸ் தரப்பிடத்தை நிர்மாணித்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார். இது இடம்பெற்றுவருவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பளார் நாயகம் தெரிவித்தார்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உத்தேச நகர அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய சமர்ப்பணமொன்றை எதிர்வரும் அமைச்சுசார் ஆலோனைக் குழுக் கூட்டத்தில் முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**4.7 கொம்பனித்தெரு -வேகந்த பிரதேசத்தில் அமைந்துள்ள சிதைவுற்ற நிலையில் காணப்படும் மாடி வீட்டுத் தொகுதி - கௌரவ முஜிபுர் ரஹுமான்**

கொம்பனித்தெரு - வேகந்த பிரதேசத்தில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு உரித்தான 21 வீடுகளைக் கொண்ட மிகவும் பழைய மாடி வீட்டுத் தொகுதியானது சிதைவுற்ற நிலையில் காணப்படுவதன் காரணமாக இங்கு குடியிருப்போரை இந்த இடத்திலிருந்து அகற்றி பிறிதொரு இடத்தை வழங்க வேண்டுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இவர்களுக்கு ஹேனேமுல்ல பிரதேசத்தில் வீடுகளை வழங்குவதற்காக 2017ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவை அங்கீகாரத்துக்கு ஏற்ப, இந்த வீடுகள் இம்மக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு நிரந்தர அறுதிஉறுதியும் உரித்தாக உள்ளமையினால் இவர்கள் குறைந்த வாடகை வருமான வீடுகளில் குடியிருப்பதற்கு விரும்புவதில்லையென கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

கொம்பனித்தெருவில் இந்த வீடமைப்புத் தொகுதி அமைந்துள்ள காணியில் உத்தேச புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வரையில் இந்த மக்களுக்கு தற்காலிகமாக ஹேனேமுல்ல பிரதேசத்தில் குடியிருக்க அறிவிக்குமாறு இராஜாங்க அமைச்சர், கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா தெரிவித்தார்.

**4.8 ஏறாவூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்படாமை - கௌரவ நஸீர் அஹமட்**

தற்போது நான்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் ஏறாவூரில் நிர்மாணிப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொதுச் சந்தை, கலாசார நிலையம் மற்றும் நூலகத்துக்கான நிர்மாணப்பணிகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்படவில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

**4.9 கௌர அமரகீர்த்தி அத்துகோரள அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**4.9.1 உடற்பயிற்சி நடைபாதைகளை நிர்மாணித்தல்**

உடற்பயிற்சி நடைபாதைகளை நிர்மாணிப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தவிசாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளுக்கு அமைவாக தாம் முன்வைத்துள்ள கிரிதலேவிற்கு உடற்பயிற்சி நடைபாதையை பெற்றுதருமாறான பிரேரணையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

**4.9.2 ஹிங்குரக்கொடை மற்றும் பக்கமூன நகர அபிவிருத்தித் திட்டம்**

ஹிங்குரக்கொடை மற்றும் பக்கமூன நகர அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய பிரேரணைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

#### 4.9.3 ஹோட்டல் பாடசாலைக்காக பொலன்னறுவை சுற்றுலா நிலையத்தைப் பெற்றுக்கொள்ளல்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை சுற்றுலா நிலையத்தை ஹோட்டல் பாடசாலைக்காக கோரியுள்ளதாகவும் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

#### 4.9.4 கதுருவெல நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் அங்குள்ள மக்களுக்கு நட்ட ஈடு கிடைக்கப்பெறாமை.

கதுருவெல நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் அங்குள்ள மக்களுக்கு நட்டஈடு வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

#### 4.9.5 பொலன்னறுவை நிருவாக கட்டிடத் தொகுதி

பொலன்னறுவை நிருவாக கட்டிடத் தொகுதிக்காக முன்வைக்கப்பட்டுள்ள வாடகைப் பணத்தொகை அதிகூடிய பெறுமதியாகக் காணப்படுவதன் காரணமாக இது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

#### 4.9.6 ஹிங்குரக்கொடையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாடி வீட்டுத் தொகுதி

ஹிங்குரக்கொடையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாடி வீட்டுத் தொகுதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் இயங்குவதாகவும், இக்காணியை இப்பணிக்காக கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

### 4.10 கௌரவ இஷாக் ரஹுமான் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 4.10.1 கெக்கிராவை தமிழ் கிராம மக்களுக்கு மலசலகூட வசதிகளை வழங்குதல்

கெக்கிராவை தமிழ் கிராம மக்களுக்கு மலசலகூட வசதிகள் காணப்படவில்லையென்பதுடன் இதனை தெரியப்படுத்தியதன் பின்னர் உரிய உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையிட்டு கௌரவ உறுப்பினர் நன்றி தெரிவித்தார்.

#### 4.10.2 அநுராதபுரம் மாவட்டத்தின் நீலாவி கிராமத்திலுள்ள வீடுகளில் காணப்படும் குறைபாடுகள்

அநுராதபுரம் நீலாவி கிராம மக்களுக்கு மலசலகூட வசதிகள் இல்லையெனவும் இந்த மக்களின் வீடுகளிலும் ஏராளமான குறைபாடுகள் காணப்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார். இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

இது தொடர்பிலான தகவல்களை நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் கௌரவ உறுப்பினர் இஷாக் ரஹுமான் அவர்களிடம் தெரிவித்தார். அதற்கேற்ப இது தொடர்பில் அவர்கள் கவனம் செலுத்துவார்களெனவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 4.11 கௌரவ மஞ்சுலா திசாநாயக்க அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.11.1 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணப்பணிகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமை.

2013ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் குருநாகல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணப்பணிகளுக்கான கொடுப்பனவு வழங்கல் கடந்த காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால், இக்கொடுப்பனவுகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 4.11.2 தொடம்கஸ்லந்த தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள சில விகாரைகளில் கட்டிட நிர்மாணப் பணிகள்

தொடம்கஸ்லந்த தேர்தல் தொகுதியின் சில விகாரைகளில் கட்டிட நிர்மாணப் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் இது முன்னெடுக்கப்படுவதில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கைகள் தொடர்பில் கௌரவ பிரதமர் தீர்மானமொன்றை மேற்கொள்வதாக அறிவித்துள்ளமையால் இதனை கௌரவ பிரதமரிடத்தில் முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 4.12 கௌரவ சுதத் மஞ்சுல அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 4.12.1 " களனிவெலி சுற்றுலா கொரிடோர்" கருத்திட்டம் " (Kelaniweli Tourism Corridor)

" களனிவெலி சுற்றுலா கொரிடோ " கருத்திட்டத்தை " (Kelaniweli Tourism Corridor) நடைமுறைப்படுத்துகையில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

### 4.12.2 ருவன்வெல்ல நகரில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தை பிறிதொரு இடத்தில் தாபித்தல்

ருவன்வெல்ல நகரில் அமைந்துள்ள பொலிஸ் நிலையமானது பழையதொரு சுற்றுலா வாடிவீட்டில் அமைந்துள்ளமையினால் இதனை பிறிதொரு இடத்தில் தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டு நகர அபிவிருத்தியின்போது இந்த இடத்தை சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய இடமாக அமைக்குமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 4.12.3 ருவன்வெல்ல தல்தூவையில் அமைந்துள்ள களனிவெலி விளையாட்டு மைதானம்

ருவன்வெல்ல தல்தூவையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான களனிவெலி விளையாட்டு மைதானமானது தற்போது முறையற்ற நிலையில் காணப்படுவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும் இந்த இடத்தில், நிலத்தின் கீழ் இரத்தினக்கல் படிந்துள்ளமையால் இரத்தினக்கல் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்த வேண்டுமென கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

**4.12.4 தெஹிஓவிட்ட பிரதேச செயலகப் பிரிவிலான நடுத்தர வகுப்பு வீடமைப்புத் தொகுதி**

தெஹிஓவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் நடுத்தர வகுப்பு வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக நிலப் பிரதேசம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையால், இந்த வீட்டுக்கருத்திட்டத்தை விரைவில் முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

கேகாலை மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் கௌரவ உறுப்பினருடன் கலந்தாலோசிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

ருவன்வெல்ல நகரைச்சார்ந்த நகர அபிவிருத்தி தொடர்பில் தற்போது முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

**5.** குழுவானது பி.ப. 12.30 மணிக்கு திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டது.

---

**காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**இரண்டாவது கூட்டம் – 2021 மார்ச் 24**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ எஸ்.எம். சந்திரசேன (தவிசாளர்)
கௌரவ திஸகுட்டி ஆரச்சி
கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ மஹிந்த அமரவீர(தவிசாளர்)
கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ ஜகத் புஷ்பகுமார
கௌரவ றோஹண திஸாநாயக்க
கௌரவ கே. காதர் மஸ்தான்
கௌரவ அசோக்க பிரியந்த
கௌரவ செல்வாாசா கஜேங்கிரன்
கௌரவ சிவஞானம் சிறீதரன்
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ வருண லியனகே
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ எச். நந்தசேன
கௌரவ(திருமதி) முதித்தா த சொய்சா
கௌரவ சுகத் மஞ்சுல
கௌரவ எஸ். எம். மஸ்ஸாரப்
கௌரவ அலி சப்ரி ரஹீம்,
கௌரவ குமாரசிறி ரத்னாயக்க
கௌரவ அஜித் ராஜபக்ஷ
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ தவராஜா கலை அரசன்
கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

**1. கூட்டக் குறிப்புக்களிலிருந்து எழும் விடயங்கள்**

**1.1 காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் வசிக்கும் மக்களுக்கு அக்காணிகளை துண்டாடி பகிர்ந்தளித்தல் – கௌரவ மிலான் ஜயதிலக்க**

சுற்றறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக மேலதிகச் செயலாளர் (காணி) குழுவுக்கு அறிவித்தார்.

**1.2 கிராமிய மட்டத்திலுள்ள தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் - கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக காணிப் பயன்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

தொழில்முயற்சியாளர்களுக்கு காணி வழங்கும் போது மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுவை விழிப்பூட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ குமாரசிறி ரத்நாயக்க அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

**1.3 காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் காணிகளை அளவிடும் நடவடிக்கைகளுக்கு அதிக கட்டணம் அறவிடப்படல் – கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

நிலஅளவையாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள நில அளவையாளர்களினால் அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

மாவட்ட அலுவலகங்களைச் சேர்ந்த பணிப்பாளர் ஒருவர் அல்லது வெளிக்கள அலுவலர் ஒருவரின் தலையீட்டுடன் நிதி அறவிட்டுக் கொள்ளும் முறையியலை தயார் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், அளவை நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பான சுற்றறிக்கையை திருத்தம் செய்வதற்கான இயலுமை தொடர்பாக நிலஅளவையாளர் திணைக்களத்துடன் கலந்துரையாடுவதாகவும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குழுவுக்கு அறிவித்தார்.

**1.4 ஹினிதும பிரதேசத்தில் நிலவும் காணிப் பிரச்சினைகள்– கௌரவ சம்பத் அதுகோரல**

பணியாட்டொகுதியின் பற்றாக்குறை காரணமாக புதிய அலுவலகங்களை ஆரம்பிப்பது சிக்கலாக மாறியுள்ளதென உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

இது தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார்.

**1.5 மன்னார் கட்டுக்கரை பிரதேசத்தில் எண்ணூறு பேருக்கு காணி உறுதிகளைப் வழங்குதல் – கௌரவ கே. காதர் மஸ்தான்**

மன்னாரில் அலுவலகமொன்றை திறந்துவைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி அலுவலகத்தை துரிதமாக திறந்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2. வேறு விடயங்கள்

## 2.1 கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.1.1 காணி உறுதிகளை வழங்குதல்

காணி உறுதிகள் வழங்கப்படாத பெரும் எண்ணிக்கையானோர் தமது பிரதேசங்களில் இருப்பதாக கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்கள் குழுவுக்கு அறிவித்தார்.

'***காணி ஆணைக்குழு கிராமத்திற்கு***' நடமாடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கௌரவ தவிசாளர் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.1.2 ரத்வத்தே வத்த காணியை அபிவிருத்தி செய்தல்

சுமார் 150 ஏக்கர் காணியை பயனுள்ள நடவடிக்கைக்காக பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.
இக்காணி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தான காணியாக உள்ளதனால் மேற்படி நிறுவனத்துடன் கலந்துரையாடி தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதாக காணி ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு எழுத்து மூலம் அறிவித்து மேற்படி காணியைப் பெற்றுக்கொண்டு கிராமத்தை விஸ்தரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.1.3 மாத்தளை, உக்குவளை மற்றும் கந்தெநுவர பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்களைத் தாபிப்பதற்காக இரண்டு காணிகளைப் பெற்றுக்கொள்ளல்.

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தவிசாளர் காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.2 கௌரவ வருண லியனகே அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.2.1 பெல்மடுல்ல பொலிசுக்கு உரித்தான காணி தொடர்பான பிரச்சினைகள்

பொலிசுக்கு ஒதுக்கப்பட்ட காணியை சட்டவிரோதமாக கையகப்படுத்திக் கொண்டுள்ளதனால் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

குறித்த நபருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்

### 2.2.2 கிராமங்களை விஸ்தரிப்பதன் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளை முறைகேடாகப் பயன்படுத்தல்

இக்காணிகள் சட்டவிரோதமாக சுவீகரிக்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

போலி ஆவணங்களை தயார் செய்தல் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதனால் குறித்த ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**2.2.3 மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு என்பவற்றில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அலுவலர் ஒருவரை பங்கேற்கச் செய்தல்.**

மேற்படி குழுக் கூட்டங்களுக்கு அலுவலர் ஒருவரை தொடர்புபடுத்திக் கொள்வதன் அவசியத்தன்மையை கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி குழுக் கூட்டங்களுக்கு மாவட்டப் பணிப்பாளரை அல்லது வேறு அலுவலர் ஒருவரை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

**2.3 கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**2.3.1 மன்னார் மாவட்ட நிலஅளவையாளர் அலுவலகத்திற்கு கணக்காளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்**

மன்னார் அலுவலகத்திற்கு கணக்காளர் ஒருவரைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

கணக்காளர் ஒருவரின் சேவை தற்போது வழங்கப்பட்டுள்ளதாக மேலதிக நிலஅளவையாளர் நாயகம் (மத்திய) குழுவுக்கு அறிவித்தார்.

**2.3.2 வனக் காணிகளை விடுவித்துக்கொள்ளல்**

வனக் காணிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

வனப் பாதுகாப்பு மற்றும் வனசீவராசிகள் திணைக்களத்தின் தலையீட்டுடன் இந்த சிக்கலைத் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.4 கிளிநொச்சி மாவட்டத்தின் நிலப்பிரதேசத்தை வரைபடமாக்கல் – கௌரவ எஸ்.சிறீதரன்**

காணிகளை வரைபடமாக்கும் பணிகளின்போது சாந்தபுரம் கிராமம் முல்லைத்தீவு நிருவாகப் பிரதேசத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதனால் சாந்தபுரம் மக்கள் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 04 கி.மீ. தூரத்திலுள்ள கிளிநொச்சி நகருக்குப் பதிலாக 40 கி.மீ. தூரத்திலுள்ள முல்லைத்தீவுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளதனால் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பில் சாந்தபுரம் கிராமத்தை கிளிநொச்சியுடன் இணைக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

கிளிநொச்சி நகரத்தின் முருகண்டி புகையிரத நிலையத்திற்கும் ஏ9 வீதிக்கும் இடையே உள்ள சிறிய பிரதேசத்தையும், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை தொடர்புபடுத்தும் 6 கி.மீ. நீளமான கரையோரப் பிரதேசத்தையும் கிளிநொச்சி நிருவாக பிரதேசத்துடன் இணைக்குமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இது காணி அமைச்சுக்கு உரித்தான விடயமல்ல எனவும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவிடம் கோரிக்கை சமர்ப்பிக்குமாறும் கௌரவ தவிசாளர் குழுவுக்கு அறிவித்தார்.

## 2.5 கௌரவ எஸ்.எம்.எம்.முஸ்ஸாரப் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.5.1 ஒலுவில் பிரதேசத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகளை விடுவித்துக் கொள்ளல்

விளையாட்டு மைதானமொன்றுக்காக காணிகளை விடுவித்து உரிமப்பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி காணிகளை விடுவித்துக்கொடுக்க துரித நடவடிக்கை மேற்கொள்வதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

### 2.5.2 பொத்துவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல்.

மேற்படி பிரதேசத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளை தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

ஒரு கூட்டத்தை (காணிக் கச்சேரி) நடாத்தி பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.6 கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.6.1 புத்தளம் மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்களில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளில் வசிக்கும் மக்களுக்கு காணி உரித்தைப் பெற்றுக்கொடுத்தல்.

மேற்படி காணிகளின் உரித்தை வசிக்கும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இந்த மக்களுக்கு மன்னார் பிரதேசத்தில் காணி உரித்து இருப்பின் மேலும் காணி உரித்தைப் பெற்றுக்கொடுப்பது உகந்ததல்ல என கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் தெரிவித்தார்.

நில அளவை நடவடிக்கைகளுக்குத் தேவையான அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்வதனால் இந்தப் பணிகளை துரிதமாக நிறைவேற்றுவதாக கௌரவ தவிசாளர் மற்றும் மேலதிக நிலஅளவையாளர் நாயகம் (மத்திய) குழுவுக்கு அறிவித்தனர்.

இந்த விடயத்தின் பொருட்டு பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு தவிசாளருக்கு சுற்றறிக்கையொன்றை வெளியிடுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.6.2 பன்சலைகள் வழிபாட்டுத்தளங்களின் காணிகளுக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

மேற்படி காணிகளுக்கு உறுதிகள் இல்லையென்பதால் உறுதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், விஹாரைக் குழு மற்றும் விஹாராதிபதியின் பெயருக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் மற்றும் மேலதிக நிலஅளவையாளர் நாயகம் (மத்திய) குழுவுக்கு அறிவித்தனர்.

‘விஹாராதிபதியின்’ பெயருக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2.7 கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.7.1 காணிகள் இல்லாத மக்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

அரச காணிகள் பெருமளவில் உள்ளதனால் காணிகளை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

காணிக் கச்சேரி கூட்டமொன்றை நடாத்தி மேற்படி சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.7.2 ‘பிம்சவிய’ உரித்துச் சான்றிதழ்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்

வீடுகளை நிர்மாணிக்க உரிமப்பத்திரம் வழங்கும் போது பிம்சவிய உறுதியை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் குழு அங்கீகரிப்பதில்லை என கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

பிம்சவிய உரித்துச் சான்றிதழுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

### 2.7.3 அலவல பிரதேசத்தில் அரச காணியிலிருந்து மக்கள் பயணிப்பதற்கான வீதியைப் பெற்றுக்கொடுத்தல்

பிரதேச செயலாளருக்கு உரித்தான இந்தக் காணி ஊடாக வீதியொன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்யுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2.8 கௌரவ திருமதி. மஞ்சுலா திசாநாயக அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.8.1 பிம்சவிய அளவை நடவடிக்கைகளின் போது வீதி குறிப்பிடப்படாமை

தொடம்கஸ்லந்த ரீதிகம பிரதேசத்தில் பிம்சவிய அளவை நடவடிக்கைகளின் போது வீதி சரியாக குறிப்பிடப்படாமை காரணமாக காணி உரிமையாளர்கள் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக கௌரவ திருமதி. மஞ்சுலா திசாநாயக அவர்கள் குழுவுக்குத் தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தின் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுத் தவிசாளரின் தலையீட்டுடன் பிம்சவிய அளவை நடவடிக்கைகளின் போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.8.2 கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளுக்கு உறுதி வழங்குவதிலுள்ள தாமதம்.

மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வராவல கொலனி என்றழைக்கப்படுகின்ற காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளுக்கு இதுவரை உறுதிகள் வழங்கப்படவில்லை என கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி மக்களுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

## 2.9 கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்திஅவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.9.1 பிம்சவிய உரித்துச் சான்றிதழ்களை பெற்றுக்கொடுப்பதன் தாமதம்

வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவின் பிம்சவிய நிலஅளவை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் உறுதிகள் வழங்கப்படவில்லையென கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

தேவையான தகவல்களை வழங்கும் பட்சத்தில் ஆராய்ந்துபார்த்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

### 2.9.2 கொடக்கவெல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளை மக்களுக்குப் பகிர்ந்தளித்தல்

மேற்படி காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

கிராமங்களை விஸ்தரிப்பதன் கீழ் பகிர்ந்தளிக்க முடியும் என்பதனால் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2.10 கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.10.1 கண்டி மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகத்திற்கு ஒரு வாகனத்தைப் பெற்றுக்கொள்ளல்.

வாகனமொன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

மாவட்ட அலுவலகங்களுக்கு வாகனம் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப யாதாயினுமொரு முறையியலுக்கு அமைய வாகனங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல் அவர்களும் கோரிக்கை விடுத்தார்.

### 2.10.2 காணி அளவை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல்

நடமாடும் சேவைகளைப் பயன்படுத்தியேனும் காணி அளவை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

தத்துவமளிக்கப்பட்ட நிலஅளவையாளர்களைப் பயன்படுத்தி நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக காணி அளவை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த முன்னோடிக் கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளதென மேலதிக நிலஅளவையாளர் நாயகம் (மத்திய) குழுவுக்கு அறிவித்தார்.

**2.11 நாத்தான்டிய நகரத்தில் அமைந்துள்ள கண்ணாடிக் கைத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப் பகுதியை அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளல் – கௌரவ அசோக்க பிரியந்த**

இக்காணியை துண்டாடாது முழுக் காணியையும் அபிவிருத்தித் திட்டமொன்றில் உள்ளடக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

**2.12. கௌரவ குமாரசிறி ரத்நாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**2.12.1 ஜயபூமி மற்றும் சுவர்ணபூமி உறுதிகளின் ஆகக் குறைந்த பிரிவிடல் எல்லைக்கு அமைய புதிய உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.**

மேற்படி காணிகளின் ஆகக் குறைந்த பிரிவிடல் எல்லைகள் மாற்றமடைந்துள்ளதனால் பழைய உறுதிகளை இரத்துச் செய்து புதிய உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

புதிதாக உறுதிகளை வழங்கும்போது சிக்கல் நிலை எழுந்துள்ளதனால் அது தொடர்பாக நிலஅளவையாளர் திணைக்களத்துடன் கலந்துரையாடி உறுதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாக காணி ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

**2.12.2 தத்துவமளிக்கப்பட்ட நிலஅளவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் அளவைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்**

தத்துவமளிக்கப்பட்ட நிலஅளவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் நில அளவை நடவடிக்கைகள் பிரதேச செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதால் அவற்றுக்கு அங்கீகாரம் வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

அரச காணிகளை அளவிடும்போது அவை திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவதாகவும், தனியார் காணிகைள அளவிடும் போது கண்காணிப்பதில்லை எனவும் மேலதிக நிலஅளவையாளர் நாயகம் (மத்திய) குழுவுக்கு அறிவித்தார்.

தத்துவமளிக்கப்பட்ட நிலஅளவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் நிலஅளவைகளில் சிக்கலான நிலைமை இல்லை எனின் அங்கீகரிப்பதாக காணி ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

**2.12.3 மொனரகெலேவத்த இறப்பர் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதான காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணியை சட்ட விரோதமாக கையகப்படுத்தல்**

இக்காணிக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தல் மற்றும் கையகப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதனால் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள செயற்படுவதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குழுவுக்கு அறிவித்தார்.

## 2.13 கௌரவ செல்வராசா கஜேந்திரன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.13.1 காணிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் உறுதிகள் வழங்கப்படாமை

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி, இராமநாதபுரம், உருத்திரபுரம், அக்கராயன், ஸ்கந்தபுரம் மற்றும் கிளிநொச்சியை சூழவுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி காணிகளுக்கு இதுவரை உறுதிகள் வழங்கப்படவில்லையென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

என்பதால் அக்காணிகளை அவர்களது பிள்ளைகளுக்கு சாட்ட முடியாமலுள்ளது. எனவே, மேற்படி காணிகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

### 2.13.2 பளை பிரதேசத்திலுள்ள காணிகளை வேறு பிரதேச மக்களுக்கு வழங்குதல்

பளை பிரதேசத்திலுள்ள, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகள் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்படுவதாக கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

அரச காணிகள் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளை மாவட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவுக்கு அறிவித்தார்.

### 2.13.3 முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்கு பிரதேசத்திலுள்ள 2200 ஏக்கர்களுக்கு உறுதி வழங்குதல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பிரதேசத்திலுள்ள 2200 ஏக்கர்களுக்கு உறுதிகள் வழங்கப்படவில்லை எனவும், காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

காணிக் கச்சேரியை நடாத்தி காணிச் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குவதாக கௌரவ தவிசாளர் குழுவுக்கு அறிவித்தார்.

## 2.14 கௌரவ மாயாதுன்ன சிந்தக்க அமல் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

### 2.14.1 கற்பிட்டி பிரதேச மக்களுக்கு உகந்த காணிகளைப் பெற்றுக்கொடுத்தல்

பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ள உகந்த காணிகள் இருப்பின் அறியத்தருமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.14.2 அளிப்புப் பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கென யாதாயினுமொரு முறையியலைப் பின்பற்றல்

இது தொடர்பில் யாதாயினுமொரு முறையியலைப் பின்பற்றுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதனால் தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர் குழுவுக்கு அறிவித்தார்.

## 2.15 ருவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் உள்ளூராட்சி வீதிகள் மற்றும் குடியிருப்பு வீதிகளின் சிக்கல்கள் – கௌரவ சுதத் மஞ்சுல

எல்லைகள் நிர்ணயிக்கப்படாமை இச்சிக்கலுக்கான காரணம் என்பதனால் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த சிக்கலைத் தீர்த்துவைக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

பணியாட்டொகுதி சிக்கல் காரணமாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது தாமதமடைவதாக உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி பிரதேசத்தில் பிம்சவிய அலுவலகத்தை ஆரம்பிப்பது பற்றி ஆய்வு செய்யுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**2.16 திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் காணிகளுக்கு உறுதி வழங்கப்படாமை – கௌரவ தவராஜா கலை அரசன்**

இப்பிரதேசத்தில் காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படவில்லை என கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

**2.17 கௌரவ காதர் மஸ்தான் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**2.17.1 முசலி பிரதேச செயலாளர் பிரிவில் பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படாமை**

தேவையான பெயர்ப் பட்டியலை பெற்றுத்தருமாறு கௌரவ தவிசாளர் அறிவித்ததுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனையும் வழங்கினார்.

**2.17.2 காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகளில் வசிக்கும் மக்களுக்கு உறுதிகளை வழங்குதல்**

பெரியகாமம், சிலாவத்துறை, தலைமன்னார், பேசாலையில் அமைந்துள்ள காணிகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

காணிக் கச்சேரிக் கூட்டங்களை நடாத்தி இந்தச் சிக்கல்களைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுப்பதாக கௌரவ தவிசாளர் குழுவுக்கு அறிவித்தார்.

மேற்படி பிரதேசத்திற்குச் சென்று ஆராய்ந்துபார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

**2.18 ஒக்கம்பிட்டிய குடியிருப்பில் உள்ள குடியிருப்பு அலுவலரின் உத்தியோகபூர்வ இல்லத்தை பயனுள்ள நடவடிக்கைக்காக பயன்படுத்துதல் – கௌரவ ஜகத் புஷ்பகுமார**

சேதமடைந்துள்ள இந்த இல்லத்தை பயனுள்ள நடவடிக்கைக்குப் பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

பிம்சவிய அலுவலகமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

3. குழு பி.ப. 3.45 இற்கு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

**அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு இரண்டாவது கூட்டம் – 2021 ஏப்பிறல் 07**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ ஜனக பண்டார தென்னகோன் (தவிசாளர்)
கௌரவ ரொசான் ரணசிங்க (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ நஸீர் அஹமட்
கௌரவ சுதத் மஞ்சுல

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள்**

கௌரவ டி.பீ.ஹேரத்
கௌரவ றோஹண திஸாநாயக்க
கௌரவ செல்வராசா கஜேந்திரன்
கௌரவ சிவஞானம் சிறீதரன்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு
கௌரவ உதயகாந்த குணதிலக்க
கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்
கௌரவ எச். நந்தசேன
கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்
கௌரவ அலி சப்ரி ரஹீம்
கௌரவ குமாரசிறி ரத்னாயக்க
கௌரவ அஜித் ராஜபக்ஷ
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ எம். ராமேஷ்வரன்
கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்
கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
கௌரவ மதுர விதானகே
கௌரவ டீ. வீரசிங்க
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ
கௌரவ சமன்பிரிய ஹேரத்
கௌரவ யதாமினீ குணவர்தன

**01. வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்**

அறிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, பாராளுமன்றத்தினால் குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட கீழ்வரும் வருடாந்த அறிக்கைக்கு இணக்கம் தெரிவித்த அதேவேளை அது தொடர்பிலான குழுவின் அறிக்கையை குழுவின் தவிசாளர் கௌரவ ஜனக பண்டார தென்னகோன் அவர்களினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும் தீர்மானித்தது.

2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

**02. 2020.11.23 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் குறிப்புக்களிலிருந்து எழும் விடயங்கள்**

**2.1 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் – கௌரவ மதுர விதானகே அவர்கள்**

உள்ளூராட்சி மன்றங்களில் நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரப்பட்டது. நிர்வாக சேவை அலுவலர்கள், கணக்காளர்கள் மற்றும் பொறியியல் அலுவலர்களது நியமனங்களை விரைவாக பெற்றுக்கொடுக்க முடியுமெனவும் அடுத்த வருடத்திற்குரிய

நியமனங்களுக்காகவும் பரீட்சைகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.

**2.2 புதிதாக உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுதலும் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களை நகர சபைகளாக தரமுயர்த்துதலும் - கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்கள்**

அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் அவசியமான பிரதேசங்களைத் தீர்மானித்து பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு மாகாண தலைமைச் செயலாளரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.

**2.3 வட மாகாணத்தில் புதிதாக நான்கு பிரதேச சபைகளைத் தாபித்தல் - கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள்**

உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்ப்புகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக சிறு தாமதம் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.
புதிதாக உள்ளூராட்சி மன்றங்களைத் தாபிப்பதற்கு மேலதிக நிதி ஏற்பாடுகள் தேவைப்படுவதால் தற்போதுள்ள தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இவ்விடயம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென அமைச்சின் செயலாளரினால் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

**03. கௌரவ உறுப்பினர்களின் முன்மொழிவுகள்**

**கெக்கனதுர, சில்வடேல்வத்த, "சத்துரி" எனும் விலாசத்தில் வதியும் திருமதி. டப்.பி.ரீ. அபேகுணவர்தனவினால் தமது காணிக்கு வடிகான் ஒன்றினை இணைத்திருப்பதன் மூலம் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் முன்வைத்த வேண்டுகோள். (கௌரவ புத்திக பத்திறண அவர்கள் – முன்மொழிவு இலக்கம் 28)**

இவ்விடயம் தொடர்பிலான அமைச்சின் அறிக்கை கௌரவ உறுப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

**04. ஏனைய விடயங்கள்**

**4.1 கௌரவ அஜித் ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்**

**4.1.1 தென் மாகாண சபையின் ஊழியர்களை நிரந்தரமாக்குதல்**

தென் மாகாண சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினுள் இணைத்துக்கொள்ளப்பட்ட சுமார் ஆயிரம் ஊழியர்களுக்கு நிதி அமைச்சின் எதிர்ப்பின் காரணமாக பிரச்சினை எழுந்துள்ளதாக கௌரவ உறுப்பினரால் அறிவிக்கப்பட்டது.
இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் காலப்பகுதியில் நடவடிக்கை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.

**4.2 கௌரவ குமாரசிறி ரத்னாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.**

**4.2.1 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பிரதேச சபை செயலாளர்களாக நியமனம் வழங்குவது தொடர்பாக.**

மொனராகலை மாவட்டத்தில் ஒன்பது பிரதேச சபைகளில் செயலாளர்களாக பதில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அப்பதவியில் நிரந்தரமாக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**4.2.2 மொனராகலை பிரதேச சபைக்கு தீயணைப்பு வாகனமொன்றினை பெற்றுத்தருமாறு முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்.**

மொனராகலை பிரதேச சபையின் தீயணைப்பு அலகிற்கு தீயணைப்பு வாகனமொன்றினையும் ஏனைய வசதிகளையும் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**4.2.3 மொனராகலை மற்றும் கதிர்காமம் உள்ளூராட்சி மன்றங்களை நகர சபைகளாக மாற்றுதல்.**

மொனராகலை மற்றும் கதிர்காமம் ஆகிய உள்ளூராட்சி மன்றங்களை நகர சபைகளாக தரமுயர்த்துவதற்கான முன்மொழிவு கௌரவ உறுப்பினரால் முன்வைக்கப்பட்டது.

தற்போதைய நிலைமை மற்றும் நிதிப்பிரச்சினைகள் காரணமாக இவ்விடயம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளரினால் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

**4.3 கௌரவ குணதிலக ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.**

**4.3.1 பூஜாபிட்டிய பிரதேச சபையின் சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளமை.**

கண்டி மாவட்டத்தின் பூஜாபிட்டிய பிரதேச சபையின் சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இணைத்துக்கொள்ளும் தரப்பினருள் இருந்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

**4.3.2. அக்குறணை பிரதேச சபையை நகர சபையாக மாற்றுதல்**

அக்குறணை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்துமாறு கௌரவ உறுப்பினரால் முன்மொழியப்பட்டது.

**4.3.3 ஹாரிஸ்பத்துவ தொகுதியை மீண்டும் எல்லை நிர்ணயத்திற்கு உட்படுத்துமாறு முன்வைக்கப்படும் வேண்டுகோள் .**

மூன்று பிரதேச சபைகளைக் கொண்ட ஹாரிஸ்பத்துவ தொகுதிக்குரிய பிரதேசத்தை மீள எல்லை நிர்ணயம் செய்யுமாறும் பல அங்கத்துவ தொகுதியாக பெயரிடுமாறு அல்லது மூன்று வட்டாரங்களாக பிரிக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**4.4 கௌரவ மதுர விதானகே அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.**

**4.4.1. உள்ளூராட்சி மன்றங்களின் முன்னேற்ற மீளாய்வு.**

உள்ளூராட்சி மன்றங்களின் முன்னேற்றத்தினை மாதாந்தம் மீளாய்வு செய்வதற்கும் அந்நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கும் அமைச்சினை அடிப்படையாகக் கொண்ட வழிமுறையொன்றினை தயாரிக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைவாக உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான மேற்பார்வையானது மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயமாகவுள்ள அதேவேளை, மேற்படி நிறுவனங்களின் மேற்பார்வைக்கு வழிமுறையொன்றினைத் தயாரிப்பதற்கு மாகாண சபைகளுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் சுட்டிக்காட்டது.

### 4.4.2. உள்ளூராட்சி மன்றங்களுக்கென இணையவழி முறைமையொன்றினை அறிமுகஞ் செய்தல். (Online Platform)

உள்ளூராட்சி மன்றங்களுக்கென இணையவழி முறைமையொன்றினை அறிமுகம் செய்வதன் மூலமாக வீதவரி அறவிடப்படுதல் மற்றும் வியாபாரங்களுக்கு அனுமதியளித்தல் போன்ற பணிகளை இலகுவாக மேற்கொள்ள முடியுமெனவும் இதற்கென இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### 4.4.3 ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே தலைநகரின் நிலப்பிரதேசத்தினை முறையாக எல்லை நிர்ணயம் செய்தல்.

1985 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயை நாட்டின் தலைநகரமாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபையை அடையாளப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நகர எல்லைகளுக்கிடையில் தெளிவான வேறுபாடு காணப்படுவதாக கௌரவ உறுப்பினரால் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதேவேளை பாராளுமன்றக் கட்டிடத் தொகுதிக்குரிய கட்டிடங்கள் நகர சபைகள் பலவற்றின் அதிகார எல்லைகளுக்குள் உள்ளடங்குகின்றன என்ற விடயமும் கௌரவ உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

## 4.5 கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

### 4.5.1. அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு தீயணைப்பு அலகொன்றினை பெற்றுக் கொள்ளல்.

மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு தீயணைப்பு அலகொன்றினைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டது.

## 4.6 கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

### 4.6.1. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் புதிதாக உள்ளூராட்சி மன்றங்களைத் தாபித்தல்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் உட்பட பல்வேறான பிரதேசங்களில் பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளைப் பிரிக்கும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென கௌரவ உறுப்பினரால் அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு நகர சபைகள் இல்லையென்பதுடன் கிளிநொச்சிக்கென பிரதேச சபையொன்றுகூட இல்லையெனவும் கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கண்டாவளை, ஒட்டுசுட்டான் மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேசங்களுக்கும் பிரதேச சபைகள் இல்லையெனவும் மேற்படி பிரதேசங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையின் முன்னேற்றம் தொடர்பிலும் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

## 4.7 கௌரவ றோஹண திஸாநாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

### 4.7.1 மாத்தளை மாநகர சபையின் ஊழியர் பிரச்சினை.

மாத்தளை மாநகர சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 516 என்பதுடன் தற்போது 406 ஊழியர்கள் மூலமாக சேவைகள் வழங்கப்படுவதாகவும் இதற்கு மேலதிகமாக 258 ஊழியர்களைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 4.7.2 பிரதேச சபைகளினால் வீதிகள் பராமரிக்கப்படாமை.

பிரதேச சபைகளினால் பின்தங்கிய கிராமங்களுக்கான வீதிகள் பராமரிக்கப்படாமையின் காரணமாக வீதிகள் ஒடுக்கமாகியுள்ளதால் மேற்படி வீதிகளை திருத்தியமைக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

#### 4.7.3 நாடு தழுவிய ரீதியிலான மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக.

அமைச்சரவை சுற்றுநிருபமொன்றினூடாக சகல உள்ளூராட்சி மன்றங்களையும் இணைத்துக்கொண்டு நாடு முழுவதும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டமொன்றினை செயற்படுத்துவதனூடாக ஒரு நாளில் பல இலட்சம் மரங்களை நட முடியுமென கௌரவ உறுப்பினரால் முன்மொழியப்பட்டது.

#### 4.7.4 உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் இயந்திரசாதனங்களின் பற்றாக்குறை

உள்ளூராட்சி மன்றங்களினால் வீதிகள் அமைக்கப்படுதல், திருத்தப்படுதல் மற்றும் பராமரிக்கப்படுதல் ஆகியவற்றினை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதற்கானதொரு காரணமாக அமைவது அந்நிறுவனங்களில் நிலவும் இயந்திரசாதனங்களின் பற்றாக்குறையே என கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

#### 4.7.5 உள்ளூராட்சி மன்றங்களின் பண்புத்தரம்

உள்ளூராட்சி மன்றங்களின் பண்புத்தரம் குறைந்துள்ளதனால் அதனை மேம்படுத்த இணைத்துக்கொள்ளும் அலுவலர்களுக்கு விசேட பயிற்சியினை வழங்க வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

### 4.8 கௌரவ நஸீர் அஹமட் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

#### 4.8.1 கிழக்கு மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள்.

மாகாண விசேட அபிவிருத்தி மானிய நிதியத்தின் (PSDG Fund) கீழ் கிழக்கு மாகாண சபைக்கென 230 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வொதுக்கீட்டு நிதித்தொகையின் அளவினை அதிகரித்துத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 4.8.2 கிழக்கு மாகாண சபையில் அமய அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களை உள்ளீர்த்தல்.

2015 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைக்கு அமய அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சுமார் 900 ஊழியர்கள் இதுவரையில் நிரந்தரமாக்கப்படாதுள்ள காரணத்தினால் அவர்களை ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளீர்ப்பதற்கான சாத்தியம் தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

#### 4.8.3 உள்ளூராட்சி மன்றக் கட்டிடங்களைத் திருத்துதல் தொடர்பாக.

கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களுள் 30 உள்ளூராட்சி மன்றங்களின் கட்டிடங்கள் திருத்தப்பட்டுள்ளதால் எஞ்சிய 15 உள்ளூராட்சி மன்றங்களின் கட்டிடங்களையும் திருத்தித் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 4.8.4 சடலங்களை அடக்கம் செய்வதற்கு அவசியமான JCB இயந்திரமொன்றினைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக.

கோவிட் 19 வைரஸ் காரணமாக மரணமடைகின்ற நபர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஓட்டமாவடி பிரதேசத்திற்குரிய மேற்படி

பிரதேச சபைக்கு JCB இயந்திரமொன்றினைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

### 4.8.5 ஏறாவூர் நகர சபைக்கு அவசியமான வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக.

ஏறாவூர் நகர சபைக்கென உழவு இயந்திரமொன்றையும் பெக்கோ இயந்திரமொன்றையும் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

## 4.9 2019 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளை நிலைப்படுத்தல் தொடர்பாக.

2019 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள் பல வருடங்களாக வேலை வாய்ப்பற்றிருந்த பட்டதாரிகள் என்ற காரணத்தினால் ஆகக் குறைந்தது அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் இல்லையென்ற போதிலும் நியமனத்தினை அவர்கள் வாழும் மாவட்டத்திற்குள் வழங்குமாறு கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்களினால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

பொலன்னறுவை மாவட்டத்தில் நிலவும் பட்டதாரி வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் கௌரவ அமரகீர்த்தி அதுகோரள அவர்களினால் வினவப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்தின் பதவிய பிரசேத்தில் வசிக்கும் பட்டதாரிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கௌரவ எச்.நந்தசேன அவர்களினால் வினவப்பட்டது.

குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சார்ந்த அதிகளவான பட்டதாரிகளுக்கு வெளி மாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள காரணத்தினால் அவர்கள் வதியும் விலாசத்தினை ஆராய்ந்து அண்மித்தவொரு இடத்தினை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ டீ.பி. ஹேரத் அவர்களினால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் அம்மாவட்டத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப் அவர்களினால் வினவப்பட்டது. அதேவேளை மேற்படி பட்டதாரிகளை நிலைப்படுத்துகின்ற போது யாதேனும் அநீதி இடம்பெற்றால் அதனால் அரசாங்கமே அசௌகரியத்திற்கு ஆளாகும் என்பதையும் கௌரவ உறுப்பினர் மேலும் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளை நிலைப்படுத்துகின்றபோது அவர்கள் வசிக்கும் மாவட்டத்திற்குள் மேற்படி நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகவும் வெற்றிடங்கள் நிலவுகின்ற இடங்களில் மாத்திரம் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் செயலாளரினால் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

அதேவேளை, வழங்கப்பட்டுள்ள 14,500 நியமனங்களுள் சுமார் 10,000 பேர் பெண்கள் எனவும் மாகாண சபைகளில் பணியாற்றுவதற்கு கோருகின்ற தரப்பினருக்கு தாம் வசிக்கின்ற பிரதேசத்தில் நியமனத்தினை பெற்றுக் கொடுப்பதற்கான இயலுமை அதிகமாக காணப்படுவதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## 4.10 கௌரவ சுதத் மஞ்சுல அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

### 4.10.1 உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வீதிகள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலின் சட்டத்தன்மை.

உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வீதிகளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்துகின்றபோது அளவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் எல்லை

வரைபடம் இல்லாத காரணத்தினால் அந்த வர்த்தமானி அறிவித்தல்களின் சட்டத்தன்மையை நீதிமன்றில் நிரூபிப்பதில் பிரச்சினைகள் தோன்றுவதாக கௌரவ உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.
இதற்கான பிரதான காரணமாக அமைவது வீதிகளை அளவீடு செய்கின்ற போது நில அளவைத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய அளவீட்டுக் கட்டணத்தை செலுத்துவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகள் உள்ளூராட்சி மன்றங்களிடம் இல்லையென்பதே என கௌரவ உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

வீதிகள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டுமென மாத்திரமே ஏற்புடைய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் அமைக்கும் துணைநிலைச் சட்டங்கள் மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய விதம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சின் சட்ட அதிகாரியினால் குழுவிற்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

கேகாலை தொகுதியின் வீதிகளை பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக அளவீடு செய்து தரமுடியுமாவென கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பில் வேண்டுகோள் ஒன்றினை சமர்ப்பித்தால் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக அளவீடு செய்து தரமுடியுமென கௌரவ தவிசாளரினால் அறிவிக்கப்பட்டது.

### 4.10.2 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான பொதுமக்களது அதிருப்தி

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கேயுரிய விசேட சேவை மற்றும் உள்ளூராட்சி மன்ற சேவையை மீள நிறுவுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 4.10.3 உள்ளூராட்சி மன்றங்களினால் தொழில்முயற்சிகள் மீது ஏற்படுத்தப்படுகின்ற அழுத்தங்கள்

இளம் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சு என்பன ஒன்றிணைந்து அப்பிரதேசங்களில் நிலவும் வியாபார வாய்ப்புகளை அடையாளங்கண்டு அவற்றை இளம் தொழில்முயற்சியாளர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

### 4.10.4 அமிதிரிகல பிரதேசத்திற்கு பல்நோக்கு கட்டிடமொன்றினைப் பெற்றுக்கொள்ளல்.

ருவன்வெல்ல தேர்தல் தொகுதியின் அமிதிரிகல நகரிற்கு நூலக வசதிகளைக் கொண்ட பல்நோக்கு கட்டிடமொன்றுக்காக காணியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளமையினால் அதனை இவ்வருட நிதிஒதுக்கீடுகளின் கீழ் நிர்மாணித்துத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 4.10.5 கலபிட்டமட தனியார் சந்தையை பிரதேச சபைக்குக் கையகப்படுத்தல்.

கலபிட்டமட பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் சந்தையை பிரதேச சபைக்குக் கையகப்படுத்துவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தால் அதற்கு அவசியமான நிதி ஒத்துழைப்பினை பெற்றுத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 4.10.6 மாகாண தலைமைச் செயலாளர்களை வரவழைத்தல்

குழுக் கூட்டங்களுக்கு மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களை வரவழைக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் மற்றும் மாகாண தலைமைச் செயலாளர்களை வரவழைக்க குழு தீர்மானிக்குமாயின் அது தொடர்பிலான வேண்டுகோள் ஒன்றினை ஆளுநர்களுக்கு அனுப்பி வைக்க முடியுமென கௌரவ தவிசாளரினால் அறிவிக்கப்பட்டது.

### 4.11 கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.11.1 குளியாப்பிட்டிய நகர சபையை மாநகர சபையாக மாற்றுதல்.

குளியாப்பிட்டிய நகர சபையை மாநகர சபையாக மாற்றுவதற்கான யோசனையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் அது தொடர்பிலான தற்போதைய நிலைமை தொடர்பிலும் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.
குளியாப்பிட்டிய நகர சபையை மாநகர சபையாக மாற்றுவதற்கான யோசனை தொடர்பிலான மாவட்டக் குழுவின் பரிந்துரை கிடைக்கப்பெறவில்லையென இராஜாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் பிரபாத் அபேவர்தன அவர்களினால் அறிவிக்கப்பட்டது.

### 4.12 கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.12.1 பிரதேச சபைக்கு அவசியமான வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

அக்குரஸ்ஸ தொகுதியின் அக்குரஸ்ஸ, மாலிம்பட மற்றும் அத்துரலிய ஆகிய பிரதேச சபைகளுக்கு ஜேசிபீ (JCB) வாகனங்கள், மோட்டர் ரோவர், உழவு இயந்திரங்கள் மற்றும் தீயணைப்பு வாகனம் ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சினால் உள்ளூராட்சி மன்றங்களின் சகல வாகனத் தேவைப்பாடுகள் தொடர்பிலான பட்டியலொன்று போக்குவரத்து அமைச்சருக்கு பெற்றுக்கொடுப்பதற்காக தாயரிக்கப்படுவதாகவும் வெகு விரைவில் மேற்படி தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

#### 4.12.2. உள்ளூராட்சி மன்றங்களில் தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை வழங்குவதற்காக தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை நிலவுவதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இப் பிரச்சினையானது சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பொதுவானதாக காணப்படுவதனால் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 4.13. கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்

#### 4.13.1 உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளல்.

எட்டியந்தோட்டை தொகுதியிலுள்ள இரண்டு உள்ளூராட்சி மன்றங்களும் குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற காரணத்தினால் மேற்படி உள்ளூராட்சி மன்றங்களின்

வருமானத்தினை அதிகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை ஏற்படுத்தித் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 4.13.2 வாகன தேவைப்பாடுகள் தொடர்பாக

எட்டியந்தோட்டை தொகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஜேசிபீ (JCB) வாகனங்கள் மற்றும் பவுசர் வாகனங்களைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 4.14 கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

#### 4.14.1 மட்டக்களப்பு நகர சபைக்கு புதிய நகர ஆணையாளர் ஒருவரை நியமித்துத் தருமாறு முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்.

மட்டக்களப்பு நகர சபையின் நகர ஆணையாளர் மற்றும் முதல்வர் ஆகியோருக்கிடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருப்பதனால் நகர சபையின் நடவடிக்கைகளை ஒத்துழைப்புடன் நடாத்திச் செல்வதற்காக புதிய நகர ஆணையாளர் ஒருவரை நியமித்துத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கௌரவ ஆளுநருடன் கலந்துரையாடி இவ்விடயம் தொடர்பில் தீர்மானமொன்றினை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 4.15 கௌரவ செல்வராசா கஜேந்திரன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.

#### 4.15.1 வீதி விளக்குகளைப் பொருத்துவதற்காக மின்சார சபைக்கு கட்டணம் செலுத்த வேண்டியேற்பட்டுள்ளமை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி விளக்கொன்றினை (மின்குமிழ் ஒன்று) பொருத்துவதற்காக பிரதேச சபையினால் ரூ. 1500 தொடக்கம் ரூ. 2000 வரையிலான பணத்தொகையினை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டியுள்ளதெனவும் இந்த விடயம் தொடர்பில் கௌரவ நெடுஞ்சாலைகள் அமைச்சருடனும் கலந்துரையாடிய போதிலும் இதுவரையில் தீர்வொன்று கிடைக்கப்பெறவில்லையெனவும் கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலே தெரிவிக்கப்பட்ட வகையிலான கொடுப்பனவொன்று செலுத்த வேண்டியதில்லையென்ற போதிலும் வீதி விளக்கொன்றினைப் பொருத்துவதற்காக மின்சார சபையின் அனுமதியைப் பெற வேண்டுமெனவும், எவ்வாறெனினும் இந்த விடயம் தொடர்பில் மேலதிகமாக ஆராய்வதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

#### 4.15.2 யாழ்ப்பாண மாநகர சபை அதிகார எல்லைக்குள் வடிகாலமைப்புத் திட்டமொன்றினைத் தயாரித்தல்.

யாழ்ப்பாண மாநகர சபை அதிகார எல்லைக்குள் மழைவீழ்ச்சி மற்றும் நிலவமைப்பு ஆகியவற்றினை கவனத்திற் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புடன் வடிகாலமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராத காரணத்தினால் வடிகாலமைப்பு பற்றிய பிரதான திட்டமொன்றினை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்தித் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### 4.15.3 தென்மராட்சி பிரதேச சபையினைப் பிரித்து ஒதுக்குதல்

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குரிய தென்மராட்சி பிரதேச சபையினை இரண்டு பகுதிகளாகப் பிரித்தொதுக்க வேண்டுமென சாவகச்சேரி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அதன் முன்னேற்றம் தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

மாவட்டச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பிலான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் அதற்கான பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

**5.** குழு மு.ப. 11.55 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

**பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**இரண்டாவது கூட்டம் – 2021 ஏப்ரல் மாதம் 08**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ச (தவிசாளர்)
கௌரவ சமல் ராஜபக்ஷ (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா
கௌரவ டிரான் அலஸ்
கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள்**

கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ துமிந்த திசாநாயக்க
கௌரவ தயாசிறி ஜயசேகர
கௌரவ அருந்திக பெர்ணாந்து
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ கனக ஹேரத்
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்
கௌரவ சிறிபால கமலத்
கௌரவ டி.வி. சானக
கௌரவ டி.பீ.ஹேரத்
கௌரவ ஷஷீந்திர ராஜபக்ஷ
கௌரவ ஜோன் செனவிரத்ன
கௌரவ டிலான் பெரேரா
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ பைஸால் காசிம்
கௌரவ சாந்த பண்டார
கௌரவ கே. காதர் மஸ்தான்
கௌரவ கோவிந்தன் கருணாகரம்
கௌரவ எஸ். நோகராதலிங்கம்
கௌரவ செல்வராசா கஜேந்திரன்
கௌரவ மொஹமட் முஸம்மில்
கௌரவ சிவஞானம் சிறீதரன்
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ இஷாக் ரஹுமான்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ சம்பத் அதுகோரல
கௌரவ நஸீர் அஹமட்
கௌரவ திஸகுட்டி ஆரச்சி
கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன
கௌரவ அகில எல்லாவல
கௌரவ உதயன கிரிந்திகொட
கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ
கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு
கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ மிலான் ஜயதிலக்க
கௌரவ குலசிங்கம் திலீபன்
கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்
கௌரவ சாமர சம்பத் தசனாயக
கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த
கௌரவ எச். நந்தசேன
கௌரவ கிங்ஸ் நெல்சன்
கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி
கௌரவ நலின் பிரனாந்து
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்
கௌரவ வசந்த யாப்பாபண்டார
கௌரவ அலி சப்ரி ரஹீம்
கௌரவ அஜித் ராஜபக்ஷ
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்
கௌரவ காமினி வலேபொட
கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான
கௌரவ மதுர விதானகே
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ
கௌரவ சமன்பிரிய ஹேரத்
கௌரவ தவராஜா கலை அரசன்
கௌரவ யதாமிணீ குணவர்தன
கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக
கௌரவ(சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க
கௌரவ மர்ஜான் பளீல்
கௌரவ (திருமதி) டயனா கமகே

**1. கூட்டக் குறிப்புகளை நிறைவேற்றல்**

2020.12.01 ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் கூட்டக் குறிப்புகள் நிறைவேற்றப்பட்டன.

**2. வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்**

பாராளுமன்றத்தினால் குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட பின்வரும் ஆண்டறிக்கைகள் ஆராயப்பட்ட பின்னர் அந்த ஆண்டறிக்கைகளுக்கு குழு இணங்கியதுடன் அது பற்றிய குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தீர்மானித்தது.

**2.1** 2018 ஆண்டுக்கான தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கை
**2.2** 2016 ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகார சபையின் ஆண்டறிக்கை
**2.3** 2017 ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகார சபையின் ஆண்டறிக்கை
**2.4** 2018 ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகார சபையின் ஆண்டறிக்கை
**2.5** 2015 ஆண்டுக்கான சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்
**2.6** 2016 ஆண்டுக்கான சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்
**2.7** 2017 ஆண்டுக்கான சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்

## 3. 2020.12.01 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் கூட்டக் குறிப்புகளிலிருந்து எழும் விடயங்கள்

### 3.1 இராணுவ முகாம்களுக்கென மன்னார் மாவட்டத்தில் காணிகளைக் கையகப்படுத்தல் – கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் (2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.10.1)

கௌரவ உறுப்பினர் குறிப்பிடும் பிரதேசத்தில் இலங்கை இராணுவத்திற்கு உரித்தான 786 ஏக்கர் நிலப் பரப்பில் பல்வேறு அத்தியாவசிய இராணுவக் கட்டிடங்கள் அமைந்துள்ளன எனவும், புதிய நிர்மாணிப்புகள் அந்த நிலப் பரப்பில் இல்லை எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இந்த முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்களைச் சூழவுள்ள பகுதிகளில் குறுகிய காலப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் கையகப்படுத்தல்கள் அதிகரிப்பதன் காரணமாக பிரதேசத்தில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பில் பிரதேச மக்களுடன் கலந்துரையாடுவதற்கு ஒரு குழுவை அனுப்பி வைக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சின் குழுவொன்று இதற்கு முன்னர் அப்பிரதேசத்தை பரிசோதித்துள்ள போதிலும் கௌரவ உறுப்பினரின் கோரிக்கைக்கு அமைய அடுத்த வாரம் இதற்காக இராணுவத்தைச் சேர்ந்த குழுவொன்றை அனுப்பிவைக்க முடியுமென இராணுவத் தளபதி தெரிவித்தார்.

### 3.2 கிளிநொச்சி நகரில் நூலகமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியை விடுவித்தல் – கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்கள் (2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.11)

பிரச்சினைக்குரிய இக் காணியில் இராணுவப் படையணியொன்று நிலைகொண்டுள்ளதெனவும் பல சந்தர்ப்பங்களில் மக்களின் தேவைகளுக்கு காணிப்பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

நூலகமொன்றை நிர்மாணிப்பதற்காக விடுவிக்கப்பட்ட காணியில் இராணுவத்தினர் நூலகக் கட்டிடமொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ள போதிலும் கரைச்சி பிரதேச சபை அதனை பல்வேறு வியாபார நடவடிக்கைகளுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுத்துவிட்டு மேற்கொண்டும் இராணுவத்தினர் பயன்படுத்துகின்ற காணிப்பகுதியிலிருந்து மீண்டும் நூலகமொன்றுக்காக கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் அறிவித்தார்.

கிளிநொச்சி பொது நூலகம் மற்றும் பாடசாலை என்பன அமைந்திருந்த கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமாகவிருந்த காணி 2009 இன் பின்னர் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும், பாடசாலைக்கு உரித்தான 3 ஏக்கரில் 112 பர்சஸ் காணிப்பகுதி மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் நூலகத்திற்கென காணி விடுவிக்கப்படவில்லை எனவும் கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தினரால் நூலகத்திற்கென கட்டிடமொன்று நிர்மாணித்துக் கொடுக்கப்படவில்லை என்றும் அமைச்சின் செயலாளர் குறிப்பிடுவதைப் போன்று அத்தகைய கட்டிடம் கரைச்சி பிரதேச சபையினால் வியாபார நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படவில்லை என்றும் கௌரவ உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது நூலகம் கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான பால் விற்பனை நிலையமொன்றில் இயங்கிவருவதாக கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்கள் மேலும் தெரிவித்தார். கிளிநொச்சி பொது நூலகத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைத்துள்ளதனால் மேற்படி காணியையும் பாடசாலைக்குச் சொந்தமான காணியையும் விடுவிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு முன்னர் சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு அமைய இராணுவ முகாம் அமைந்துள்ள இக்காணியிலிருந்து காணிப்பகுதிகள் இடைக்கிடை

விடுவிக்கப்பட்டுள்ளதெனவும் கிளிநொச்சி மாவட்டத்தின் தேவைகளுக்கு அமைய இராணுவ முகாம் தாபிக்கப்பட்டுள்ளதெனவும் இராணுவத் தளபதி அறிவித்தார்.

அதிக செலவினை ஏற்று நிர்மாணிக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களில் தாபிப்பது மிகவும் கடினமான பணியாக உள்ளதனால் வேறொரு இடத்தில் நூலகத்தை நிர்மாணித்துக் கொடுக்க முடியுமென கௌரவ தவிசாளர் அறிவித்தார். மேலும் இராணுவ முகாம் தாபிக்கப்பட்டிருப்பது தற்போது நிலவும் அவசியத்தன்மையின் அடிப்படையில் என்பதனால் முகாம்கள் அமைந்துள்ள காணிகளுக்காக கோரிக்கை விடுக்க வேண்டாமெனவும் கௌரவ தவிசாளர் மேலும் அறிவித்தார்.

**3.3 பொலிஸ் நிலையங்களுக்கு கட்டிடங்களை நிர்மாணிக்கும்போது கட்டிடக்கலை தொடர்பில் கவனம் செலுத்துதல் – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் (2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.12.2)**

பொலிஸ் நிலையங்களுக்கு கட்டிடங்களை நிர்மாணிக்கையில் கட்டிடக் கலை வடிவமைப்பின்போது மேற்படி சூழலில் உள்ள ஏனைய கட்டிடங்களுக்கு உகந்தவாறு நிர்மாணிப்புகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**3.4 ஹபராதுவயில் அமைந்துள்ள காணியிலிருந்து ஒரு பகுதியை நகர கரையோர பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்காக விடுவித்தல் – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**
**(2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.12.3)**

ஹபராதுவ பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் பொலிஸாரால் பயன்படுத்தப்படுகின்ற பகுதியைத் தவிர்த்து எஞ்சிய காணியை நகர கரையோர பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்கு விடுவிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**3.5 உனவட்டுனவுக்கு சுற்றுலா பொலிஸ் நிலையமொன்றை பெற்றுக்கொடுத்தல் – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**
**(2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.12.5)**

உனவட்டுன பிரதேசத்திற்கு சுற்றுலா பொலிஸ் நிலையமொன்றைத் தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**3.6 ஹபுகலவை மையமாகக் கொண்டு பொலிஸ் நிலையமொன்றைத் தாபித்தல் – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**
**(2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.12.6)**

கூடுதல் சனத்தொகையைக் கொண்ட ஹபுகல பிரதேசத்தை மையமாகக் கொண்டு பொலிஸ் நிலையமொன்றைத் தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

புதிதாக 194 பொலிஸ் நிலையங்களைத் தாபிக்கும் கருத்திட்டத்தின் கீழ் ஹபுகலவுக்கும் பொலிஸ் நிலையமொன்று தாபிக்கப்படவுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

**3.7 பூஸ்ஸ குதிரைப் பந்தய மைதானம் – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் (2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.12.7)**

நீதி அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பூஸ்ஸ குதிரைப் பந்தய மைதானத்தை காலி ரிச்மன்ட் கல்லூரி அல்லது காலி திரு இருதய மகளிர் கல்லூரிக்குப் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**3.8 காலி கேட்போர் கூடத்தை நிர்மாணித்தல் – கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் (2020.12.01 ஆம் திகதிய கூட்டக் குறிப்பின் விடய இலக்கம் 4.12.8)**

காலி கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்படும் "Mix Development கருத்திட்டம்" தொடர்பான விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பது தொடர்பில் கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் வினவினார்.

இக்கருத்திட்டம் தொடர்பிலான பெறுகை நடவடிக்கைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினாலும், நிர்மாணப் பணிகள் காலி மாவட்டச் செயலாளரினாலும் மேற்கொள்ளப்படுவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் அறிவித்தார்.

**4. கௌரவ உறுப்பினர்களின் முன்மொழிவுகள்**

**4.1 கஹதுாவ, திப்பொட்டுவாவ, ஊரகஹவெல முகவரியில் வசிக்கும் திரு. கே.பி.சீ. சுரங்கவுக்கு உரித்தான அங்கவீனமுற்ற படை வீரர்களுக்காக வழங்கப்படும் அங்கவீனமுற்றோருக்கான ஓய்வூதியத்தினைப் பெற்றுத் தருமாறு கோரல் (கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்- முன்மொழிவு இலக்கம் 3)**

திரு. சுரங்க கடமையில் ஈடுபட்டிருந்தபோது உடல் ரீதியான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நீண்டகாலமாக அறிவித்தலின்றி கடமைக்குச் சமூகமளிக்காமை காரணமாக இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆரம்ப விசாரணை நடாத்தப்படுவதாகவும், குறித்த அறிக்கைகள் இராணுவத் தளபதியின் முடிவுடன் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அமைச்சின் செயலாளர் அறிவித்தார். இவர் தொடர்பில் குறித்த விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு அவ் அறிக்கையில் கையொப்பமிடுவதற்காக வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதும் சமூகமளிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இவர் அதில் கையொப்பமிட்ட பின்னர் உரிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

**4.2 நியாயமற்ற காரணமொன்றின் அடிப்படையில் படைத்துறைப் பணி ஆணை பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் காலி, வஞ்சாவல, மீகோட, உஸ்வத்த, இலக்கம் 247/1 இல் வசிக்கும் திரு. ஜே.கே. இமதுவ விதானகே அவர்கள் சமர்ப்பித்த மேன்முறையீடு (கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் - முன்மொழிவு இலக்கம் 4)**

மேற்படி அலுவலர் சேவையாற்றும்போது மேற்கொண்ட ஒழுக்கத்திற்கு முரணான செயற்பாடுகளின் காரணமாக மேன்மைதங்கிய சனாதிபதியின் அங்கீகாரத்தின் பேரில் 2009.09.30 ஆம் திகதி இராணுவத்தின் நிரந்தர படையணியின் பணி ஆணை பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் தற்போதுள்ள கொள்கைகளுக்கு அமைய மீண்டும் சேவைக்கு அமர்த்த முடியாது என்றும் அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**4.3 அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கு 60 வயது வரை சம்பளம் பெற்றுக் கொள்வது தொடர்பில் மாத்தறை, வெவஹமந்துாவ, பொக்குணஹேன, 'சம்பத்' எனும் முகவரியில் வதியும் திரு. பீ.எச்.டப். சில்வா அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கை (கௌரவ புத்திக பத்திறண அவர்கள் - முன்மொழிவு இலக்கம் 123)**

**4.4 பயங்கரவாத தாக்குதல் அல்லாத, அங்கவீனமுற்ற (நிரந்தர அங்கவீனம்) படைவீரர்களுக்கு நிரந்தர கொடுப்பனவு வழங்கப்படுதல் சம்பந்தமாக வினவுதல் தொடர்பில் எம்பிலிபிட்டிய, கிரலவெல்கட்டுவ, தெவிநுவர அரிசி ஆலை வீதி, இரண்டாம் குறுக்குத் தெரு, இல. 25 இல் வதியும் திரு. ஆர்.டி. விமலசேன அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கை**

**(கௌரவ புத்திக பத்திறண அவர்கள் - முன்மொழிவு இலக்கம் 128)**

**4.5 உயிரிழந்த படைவீரரின் பிள்ளைக்காக சம்பளத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தெனியாய, கொலவெனிகம, உடராங்கலவில முகவரியில் வதியும் திருமதி. எதிரிசிங்க லெய்சினா அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கை (கௌரவ புத்திக பத்திரண அவர்கள் - முன்மொழிவு இலக்கம் 150)**

கௌரவ புத்திக்க பத்திறண அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கான பதில் அறிக்கைகள் கௌரவ உறுப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

## 5. வேறு விடயங்கள்

### 5.1 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 5.1.1 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு வழங்கப்படும்போது உரிய முறையியலைப் பின்பற்றுதல்

பொலிஸ் நிலையங்களின் நிலையப் பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு வழங்கப்படும்போது சிரேஷ்ட அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதனால் பதவி உயர்வு வழங்குவதை முறையாக மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

பதவி உயர்வு வழங்கும் போது கடந்த காலத்தில் சரியான முறையியல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என பொலிஸ் மா அதிபர் அறிவித்தார். தற்போது நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு உரிய பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்குத் தேவையான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மீண்டும் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு தகுந்த அலுவலர்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸ் மாஅதிபர் மேலும் அறிவித்தார்.

பதவி உயர்வு வழங்கும் போது அலுவலர்களின் சேவை முதுமை மற்றும் செயலாற்றுகை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என இராஜாங்க அமைச்சர் கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்கள் அறிவித்தார்.

#### 5.1.2 பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

போதைவஸ்து வியாபாரம் தொடர்பில் சுற்றிவலைப்புகளை மேற்கொள்ளும் ஒருசில சந்தர்ப்பங்களில் பொலிஸ் திணைக்களத்தினால் முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை என கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

இதற்கான காரணம் தற்போது ஒரு பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதேசம் பாரியளவானதாக உள்ளமை என்பதால் பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்து மேலதிக பொலிஸ் நிலையங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் என கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

#### 5.1.3 போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்

போதைவஸ்துக்கு அடிமையாகியுள்ள சிறுவர்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும்போது அவர்களை சிறைகளில் தடுத்துவைத்திருக்காது தனியான புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்கு அனுப்புவது உகந்தது என கௌரவ உறுப்பினர் பிரேரித்தார்.

காலி மாவட்டத்திற்கு இவ்வாறான புனர்வாழ்வு நிலையமொன்றைத் தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

அரச நிறுவனங்களுடன் இணைந்து போதைவஸ்து சுற்றிவலைப்பு நடவடிக்கைகள் மற்றும் போதைவஸ்துப் பயன்பாட்டை தடுக்கும் நோக்கத்துடன் பல்வேறு

நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திரு. லக்நாத் வெலகெதர அறிவித்தார்.

போதைவஸ்துக்கள் பற்றிய தேசிய கொள்கை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் அறிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் சுமார் 1000 கைதிகளை தடுத்துவைக்கக்கூடிய புனர்வாழ்வளிப்பு நிலையமொன்றைத் தாபிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் அறிவித்தார்.

#### 5.1.4 நிதிக் குற்றச் செயல்களை விசாரணை செய்வதற்கான பிரிவொன்றைத் தாபித்தல்

யாதாயினும் நிதிக் குற்றச் செயல்கள் தொடர்பில் முதலீட்டாளர்கள் மற்றும் வியாபாரிகள் சமர்ப்பிக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு நீண்டகாலம் எடுப்பதனால் இதற்காக குற்றச் செயல் விசாரணைப் பிரிவினுள்ளேயேனும் விசேட பிரிவொன்றைத் தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

### 5.2 போதைவஸ்தை நாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல் – கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்கள்

தெற்கு கடற்கரையோரப்பகுதி ஊடாக போதைவஸ்துக்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவது பரவலாக இடம்பெறுகின்ற மாது கங்கை கழிமுகம் மற்றும் வெலிகம பொல்அத்துமோதர கழிமுகம் ஆகிய இடங்களில் கடற் படையின் சோதனைச் சாவடிகள் இரண்டை தாபிக்க கௌரவ உறுப்பினர் பிரேரித்தார்.

உளவுப் பிரிவுகளின் தகவல்களுக்கு அமைய இப்பிரதேசத்தில் நடமாடும் பொலிஸ் சோதனைச் சாவடிகள் இயங்கிவருவதாகவும் தகுந்த இடமொன்றை இனங்கண்டு நிரந்தர சோதனைச் சாவடியொன்றைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கடற்படைத் தளபதி அறிவித்தார்.

### 5.3 கௌரவ மாயாதுன்ன சிந்தக்க அமல் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 5.3.1 போதைவஸ்து கடத்தலைக் கட்டுப்படுத்தல்

இந்தியாவிலிருந்து பாரியளவில் கற்பிட்டி தீவுகள் ஊடாக இடம்பெறுகின்ற போதைவஸ்துக் கடத்தலைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

#### 5.3.2 தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லும் போது இடம்பெற்ற விபத்து

தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லும்போது இடம்பெற்ற விபத்து காரணமாக ஒரு பெண் கடுமையாக காயமடைந்தமை தொடர்பில் கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் தலையிட்டு மேற்படி பெண்ணுக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை மேற்கொண்டதாக இராணுவத் தளபதி அறிவித்தார்.

#### 5.3.3 பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் இரகசியத்தன்மையைப் பேணுதல்

பாடசாலை மாணவர்களும் அடிமையாகியுள்ள போதைவஸ்து கடத்தல் தொடர்பில் பொலிசுக்கு முறைப்பாடு செய்யும் போது பொலிசார் மூலமாகவே உரிய தரப்பினர்களுக்கு அது பற்றிய தகவல்கள் கிடைப்பதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

பொலிசார் மூலம் இவ்வாறு தகவல்கள் கசிவது தொட்பில் விசாரணை செய்வதற்கு விசேட பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய ஓரளவுக்கு இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் அறிவித்தார்.

இவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்போது இரகசியத்தன்மையைப் பேணுவதற்காக ஏதேனும் ஓர் இடத்திற்கு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறையியல் ஒன்றை ஏற்படுத்துவதற்குள்ள சாத்தியம் தொடர்பில் கௌரவ தவிசாளர் வினவினார்.
இதற்காக தொலைபேசி இலக்கமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய பெரும்பாலும் தகவல்களின் இரகசியத்தன்மை பேணப்படுவதாகவும் பொலிஸ் மாஅதிபர் அறிவித்தார்.

யாதாயினுமொரு விடயம் தொடர்பில் கௌரவ உறுப்பினர்கள் யாராயினுமொரு தரப்பினருக்கு முறைப்பாடு செய்யும் போது குறிப்பிட்ட தரப்பினரினால் அது தொடர்பில் முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்கள் அறிவித்தார். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர் அறிவித்தார்.

### 5.4 உயிரிழந்த படைவீரர்களின் தங்கிவாழ்வோருக்கு நிவாரணம் வழங்குதல்- கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக உயிரிழந்த படைவீரர்களின் தங்கிவாழ்வோருக்கு ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட கூற்று மக்களை சரியாகச் சென்றடையாமை காரணமாக சிக்கலான நிலைமை எழுந்திருப்பதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

மேற்படி தங்கிவாழ்வோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் இது தொடர்பில் உரிய தரப்பினர்களை அழைத்து விழிப்புணர்வூட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

### 5.5 சிறியளவிலான மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுகின்ற மக்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தல் – கௌரவ அகில எல்லாவல அவர்கள்

பாரம்பரியமாக ஏப்ரல் மாதத்தை அண்மித்ததாக மக்களுக்கு மாணிக்கக்கல் அகழ்வதற்கு பொலிஸ் உள்ளிட்ட சகல அதிகாரசபைகளினாலும் அங்கீகாரம் வழங்கப்படுகின்ற போதிலும் இரத்தினபுரி சமன் தேவாலயத்திற்கு அருகே பாரம்பரியமாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட சகலரும் தற்போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் இவ்வாறு செயற்படுவதன் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கல் அகழ்வு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பொது மக்கள் அசௌகரியத்திற்கு ஆளாவதாக கௌரவ காமினி வலேபொட அவர்கள் அறிவித்தார். மேலும் அவ்வாறான நடவடிக்கைகளின் காரணமாக அரசாங்கமும் அபகீர்த்திக்கு உள்ளாவதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

இதன்போது இக்கைத்தொழிலுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஆட்களுக்கு தடை ஏற்படாதவாறு செயற்பட வேண்டும் என கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து அவர்கள் அறிவித்தார்.

களனி கங்கைக்கு அருகே சிறியளவில் மாணிக்கக்கல் அகழ்வுக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களும் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக அசௌகரியத்திற்கு ஆளாகியிருப்பதாக கௌரவ மிலான் ஜயதிலக்க அவர்களும் அறிவித்தார்.

சிறியளவில் அன்றி பாரியளவில் சடட்விரோத மாணிக்கக்கல் அகழ்வு மற்றும் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்துமாறு ஆலோசனை

வழங்கியிருப்பதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார். பொலிஸ் நிலையங்களுக்கு சரியாக அறிவுரை வழங்காமை காரணமாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதனால் அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக பொலிஸ் மாஅதிபர் அறிவித்தார்.

**5.6 மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தின் பொறுப்பிலுள்ள பாடசாலையை விடுவித்தல் – கௌரவ கோவிந்தன் கருணாகரம் அவர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் சித்தாண்டி இராணுவ முகாமுக்கென மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை இராணுவத்தினரால் பல வருடங்களுக்கு முன்னர் கையகப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக இப்பாடசாலை வோறொரு இடத்தில் நடாத்திச் செல்லப்படுவதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார். மழைக் காலத்தில் அவ்விடத்தில் வெள்ளம் ஏற்படுவதனால் குறித்த பாடசாலையின் மாணவர்களுக்காக இப்பாடசாலையை விடுவித்துத் தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இங்கு அமைந்துள்ள இராணுவ முகாமை தாபிப்பதற்காக இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் 25ஏக்கர் காணி புன்னக்குடா பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இராணுவ முகாமை தாபிப்பதற்காக கௌரவ கோவிந்தம் கருணாகரம் அவர்களினால் பிரேரிக்கப்பட்டுள்ள புன்னக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள காணியை அண்மித்த பிரதேசம் ஒரு சுற்றுலா வலயமாகக் காணப்படுவதனால் இக்காணி இதற்கு பொருத்தமற்றதென கௌரவ நஸீர் அஹமட் அவர்கள் தெரிவித்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளர் இராணுவத் தளபதிக்கு ஆலோசனை வழங்கினார்.

**5.7 கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**5.7.1 பன்னல - கந்தானகெதர நகருக்கான பொலிஸ் நிலையத்தை அமைத்தல்**

குருநாகல் மாவட்டத்தில் பன்னல - கந்தானகெதர நகரில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச்சாவடிக்குப் பதிலாக அங்கு பொலிஸ் நிலையமொன்றை அமைக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

புதிதாக 194 பொலிஸ் நிலையங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் இது தொடர்பில் கவனம் செலுத்த முடியுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார். காணப்படுகின்ற பொலிஸ் நிலையப் பிரிவுகள் அளவில் பெரிதாகக் காணப்படுமெனில், புதிய பொலிஸ் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக பொலிஸ்மா அதிபருடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

புதிய பொலிஸ் நிலையங்கள் தேவைப்படும்போது அதற்கான முன்மொழிவுகளை பொலிஸ்மா அதிபருக்கு முன்வைக்குமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களினால் கௌரவ உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**5.7.2 பொலிஸ் நிலையங்களில் காணப்படுகின்ற இளம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை**

குருநாகல் பன்னலை பொலிஸ் நிலையத்தில் இளம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுதனால் இது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

இந்த வருடம் 10,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படவுள்ளமையினால், அதன்போது இது குறித்து கவனம் செலுத்த முடியுமென பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

**5.8 காடழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் செயற்படுவதற்கானதொரு விசேட பிரிவினைத் தாபித்தல் - கௌரவ வசந்த யாப்பா பண்டார**

தற்போது பாரியளவில் காடழிப்பு இடம்பெறுவதாக குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதனால் இது தொடர்பில் செயற்படுவதற்காக ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்ததாக துரித ஊடுருவும் படையணி போன்றதொரு விசேட பிரிவினை தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறு காடழிப்பினை மேற்கொள்ளும் சகலருக்கும் எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

**5.9 கௌரவ பைஸால் காசிம் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**5.9.1 அம்பாறை - நிந்தவூர் பிரதேச சபைக்கு உரித்தான காணியை விடுவித்தல்**

இராணுவ முகாமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள அம்பாறை நிந்தவூர் பிரதேச சபைக்குச் சொந்தமாகவிருந்த காணியை விடுவித்துத் தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

**5.9.2 அம்பாறை மாவட்டத்தினுள் போதைவஸ்து கடத்தல் பரவலாக இடம்பெறுதல்.**

அம்பாறை மாவட்டத்தில் போதைவஸ்து கடத்தல் பரவலாக இடம்பெறுவதனால் அது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார். மேலும், அம்பாறை நெல் சந்தைப்படுத்தல் சபையின் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினருக்கான உணவு வழங்கலினை இப்பிரதேசத்தில் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்கள் மேற்கொள்வதனால், இது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறும் போதைவஸ்து கடத்தலில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான தகவல்களை எழுத்து மூலமாக முன்வைக்குமாறும் அதற்கமைய இது குறித்து கவனம் செலுத்த முடியுமெனவும் கௌரவ தவிசாளர் கௌரவ உறுப்பினர் பைஸால் காசிம் அவர்களுக்குத் தெரிவித்தார்.

**5.10 கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்**

**5.10.1 இஸ்லாம் சமய நூல்களைத் தடைசெய்தல்**

உயிர்த்த ஞாயிறு தினம் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் சில இஸ்லாம் சமய நூல்களைத் தடை செய்யுமாறு வழங்கியுள்ள விதப்புரைகள் தொடர்பில் எந்தவித ஆட்சேபனையும் இல்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

ஆயினும், சுற்றுலாப் பயணிகளினால் இஸ்லாம் மதம் சார்ந்ததாக இந்நாட்டுக்கு எடுத்துவரப்படும் சகல புத்தகங்களையும் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவதன் பேரில் மாத்திரம் விடுவிக்குமாறு தெரிவிக்கப்படும் சுற்றறிக்கையொன்று இலங்கை சுங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளமையினால், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து சமயப் புத்தகங்களை எடுத்து வரும் முஸ்லீம் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

குறிப்பிட்டதொரு தீவிரவாத சமயப் புத்தகம் அடையாளம் காணப்படுமிடத்து மாத்திரம் அதனை தடை செய்வது தொடர்பிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதற்கு மேலதிகமாக பாடசாலை சமயப் பாடப் புத்தகங்களில் தீவிரவாத விடயங்கள் உள்ளடங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.
இந்நாட்டுக்கு எடுத்துவரப்படும் இஸ்லாம் சமயப் புத்தகங்கள் அனைத்தின் மீதும் தடை விதிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன், குறிப்பிட்டதொரு சமயப் புத்தகம் தொடர்பில் அதே மதத்தைச்சார்ந்த புலமையாளர் குழுவினால் ஆராயப்படுவதால், இதன்போது இஸ்லாம் மதத்துக்கு மாத்திரம் எந்தவொரு அநீதியும் ஏற்படமாட்டாதென அவர் மேலும் தெரிவித்தார்.

### 5.10.2 மன்னார் - புத்தளம் வீதி சேதமடைதல்

மன்னார் - புத்தளம் வீதியின் சில இடங்கள் ஏற்கனவே சிதைவடைந்த நிலையில் காணப்படுவதனால் இது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 5.10.3 மன்னார் கடற்பரப்பின் ஊடாக போதைவஸ்துக்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதைக் கட்டுப்படுத்துதல்

இந்நாட்டுக்குள் அதிகளவிலான போதைவஸ்துக்கள் மன்னார் கடற்பரப்பின் ஊடாக கொண்டுவரப்படுவதனால், முள்ளிக்குளம் முதல் தலைமன்னார் வரையில் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸாரை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தி இந்நிலைமையினைக் கட்டுப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

## 5. கௌரவ (திருமதி) டயனா கமகே அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 5.11.1 தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு மக்களை ஏற்றிச்செல்லும் பஸ்வண்டிகளை அபாயகரமாக ஓட்டிச் செல்லுதல்

தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு மக்களை ஏற்றிச்செல்லும் பஸ்வண்டிகளின் சாரதிகள் அபாயகரமாக பஸ்வண்டிகளை ஓட்டிச் செல்வதன் காரணமாக மிக அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார். மேலும், இந்த பஸ்வண்டிகள் "இலங்கை இராணுவம்" எனப் பெயரிடப்பட்டு ஒட்டிச் செல்லப்படுவதனால் இராணுவத்தினருக்கு இது களங்கத்தை ஏற்படுத்துவதாகவும் கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் குறிப்பிட்ட விடயம் மீது கவனம் செலுத்துவதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

### 5.11.2 போதைவஸ்துக்கள் தொடர்பிலான சுற்றிவளைப்புகளை மேற்கொள்கையில் பொலிஸார் அநீதியான முறையில் குற்றமற்றவர்களையும் கைதுசெய்தல்.

சில சமயங்களில் போதைவஸ்துக்கள் தொடர்பிலான சுற்றிவளைப்புகளை மேற்கொள்கையில் பொலிஸார் அநீதியான முறையில் சில குற்றமற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கைது செய்வதனால், இது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

## 5.12 பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக காணிகளைப் பெற்றுக்கொள்ளல் – கௌரவ அருந்திக்க பர்னாந்து

பெருந்தோட்டத்துறையினை மேலும் விருத்தி செய்வதற்கு காணிகள் தேவைப்படுவதாகவும், இதற்காக தற்போது பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் வசம் காணப்படும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய காணிகளின்

பரப்பளவு தொடர்பில் பெருந்தோட்ட அமைச்சினை அறிவுறுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர், கௌரவ அருந்திக்க பர்னாந்து தெரிவித்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்த முடியுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 5.13 காணிகளை விடுவித்தல் - கௌரவ செல்வராசா கஜேந்திரன்

பருத்தித்துறை தபால் நிலையத்துக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் காணியில் நான்கு ஏக்கர்களை இராணுவம் கைப்பற்றியுள்ளமையினால் எஞ்சியுள்ள இரண்டு ஏக்கர் காணியானது கட்டிடமொன்றை அமைப்பதற்குப் போதுமானதாக இல்லையென்பதால் குறிப்பிட்ட காணியை முழுமையாக விடுவித்துத் தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் காணியை இராணுவம் கைப்பற்றிக்கொண்டுள்ளமையினால் இக்காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

1987இற்கு முன்னர் பருத்தித்துறை இராணுவ முகாமில் தபால் நிலையமொன்று இயங்கியதா என்பது குறித்து கவனம் செலுத்த முடியுமென இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும், மிரிசுவில் முகாமை அங்கிருந்து அகற்ற முடியாதெனவும், அது தனியார் காணியெனில் உரிமையினை உறுதிப்படுத்தியதன் பின்னர் அதற்கான நஷ்ட ஈட்டை வழங்க முடியுமெனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

## 5.14 பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுதல் - கௌரவ மிலான் ஜயதிலக்க அவர்கள்

பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுவதன் காரணமாக, முறைப்பாடுகளை முன்வைக்கையில் அவை தொடர்பில் செயற்படுவதற்கான இயலுமை இல்லையென குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களினால் அறிவிக்கப்படுவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

தற்போது அநாவசியமாக பிரமுகர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை குறிப்பிட்ட இடங்களிலிருந்து அகற்றி பொலிஸ் நிலையங்களில் இணைக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 5.15 கௌரவ தயாசிறி ஜயசேக்கர அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 5.15.1 சுய உருவாக்கத்திற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

கண்டி - அம்பிட்டிய பிரதேசத்தில் விலங்குகளைப் பயமுறுத்துவதற்காக நபரொருவரினால் உருவாக்கப்பட்டுள்ள, சிறந்த கேள்வியைக் கொண்டதொரு ஆக்கம் அதன் வடிவம் காரணமாக பாதுகாப்பு அமைச்சினால் தடைசெய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர், கௌரவ தயாசிறி ஜயசேக்கர தெரிவித்தார்.

இதனை முறையாக அறிமுகப்படுத்துவதற்காக இந்த விடயம் பாதுகாப்புச் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளமையினால், இது தொடர்பில் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ இராஜாங்க அமைச்சர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 5.15.2 கொழும்பு மாவட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு காணப்படும் குறைந்த வசதிகள்

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் காணப்படும் குறைந்த வசதிகள் மற்றும் அதிகூடிய செலவு காரணமாக அவர்கள் கொழும்பு மாவட்டத்தில் தங்கியிருப்பதற்கு விரும்புவதில்லையென கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இந்த உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்டதொரு கொடுப்பனவினை வழங்குவதன் மூலம் இவர்களை கொழும்பு மாவட்டத்தில் தங்க வைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கௌரவ இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு மாவட்டத்தினுள் பணியாற்றுவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் விருப்பம் தெரிவிக்காமையினால், சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொழும்பு மாவட்டத்தில் நீண்ட காலமாக சேவையில் ஈடுபடுகின்றார்கள் எனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

### 5.16 யாழ்ப்பாண மாநகர முதல்வரின் நடத்தை - கௌரவ மதுர விதானகே

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் எல்.ரீ.ரீ.ஈ.பொலிஸ் உத்தியோகத்தர்கள் என அழைக்கப்பட்ட நபர்கள் பயன்படுத்திய சீருடைகளுக்கு ஒப்பான ஆடைகளைத் தரித்த 5 நபர்களை யாழ்ப்பாண நகரை அண்மித்ததாக கடமையில் ஈடுபடுத்தியது தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக கௌரவ உறுப்பினர் வினவினார்.

இது தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 5.17 விவசாயிகளுக்கு துப்பாக்கிகளை வழங்குதல் - கௌரவ சமன்பிரிய ஹேரத்

தற்போது பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்களில் 25%மான சேதம் விலங்குகளினால் ஏற்படுவதனால், விவசாயிகளுக்கு துப்பாக்கிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

இதன்போது விவசாய அமைப்புகளுக்கு குறிப்பிட்ட ஒரு தொகை துப்பாக்கிகளை வழங்குவது உகந்ததென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தகுந்த ஒரு முறையியலை தயார் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

### 6. குழுவானது பி.ப.3.30 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

## கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
## மூன்றாவது கூட்டம்- 2021 ஆகஸ்ட் 05ஆம் திகதி

**சமூகமளித்த அங்கத்தவ உறுப்பினர்கள்-**

கௌரவ டக்ளஸ் தேவானந்தா ( தவிசாளர்)
கௌரவ கஞ்சன விஜேசேகர (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ திலிப் வெதஆரச்சி
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

**சமூகமளித்த அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ சங்கிம வீரக்கொடி
கௌரவ ஜீ.ஜீ.பொன்னம்பலம்

கௌரவ செல்வராஜா கஜேந்திரன்
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ அமரகீர்த்தி அதுகோரள
கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ சாணக்கியா ராஜபக்கிரான் இராசமாணிக்கம்
கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

**1. வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்**

பாராளுமன்றத்தினால் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகள் தொடர்பில் குழுவினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் அது பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அறிக்கை, குழுவின் தவிசாளர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

1.1 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை
1.2 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் வருடாந்த அறிக்கை
1.3 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

**2. 2021.03.26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டக் குறிப்புகளால் எழும் விடயங்கள்**

**2.1 மின்னேரியா கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியை விளைத்திறனுடன் பயன்படுத்தல் - கௌரவ அமரகீர்த்தி அதுகோரள அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்**

மின்னேரியா கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகளை அரச மற்றும் தனியார் கூட்டு வர்த்தகமாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக கௌரவ உறுப்பினர் பிரதிநித்துவப்படுத்தும் பிரதேசங்களைச் சேர்ந்த, இத்துறையில் அக்கரை செலுத்தி வருபவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியுமெனவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

**2.2 ஸ்கூபா (Scuba) முறையில் மீன்பிடிப்பதற்கான தடையை நீக்குதல்-கௌரவ கே. காதர் மஸ்தான் அவர்கள்**

குறித்த விடயம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கமைய மு.ப.6.00 மணி முதல் பி.ப. 6.00 மணிவரை இத் தடை உத்தரவு வலுவிலுள்ளதாக பிரதிப் பணிப்பாளர், கடற்படை இயக்கம் குழுவில் தெரிவித்தார்.

இத் தடை உத்தரவினை இரவு வேளையில் மட்டும் நீக்குவது தொடர்பில் கடற்படை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் வாணிப துறைமுகங்கள் மற்றும் கடற்படைத் துறைமுகங்களை அண்டிய பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இரவு வேளையில் ஸ்கூபா முறையில் மீன் பிடிப்பதற்கு அனுமதியளித்தல் பொருத்தமானதெனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

பாதுகாப்பு மட்டுமின்றி முக்கியமாக சமுத்திர வளங்கள் சேதமடைவதையும் கவனத்திற்கொண்டு கடற்றொழில் மற்றும் நீரகவள திணைக்களத்தினால் இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குழுவில் குறிப்பிட்டார்.

## 2.3 இரனதீவுக்கு செல்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல் - கௌரவ செல்வராஜா கஜேந்திரன் அவர்கள்

மேற்குறித்த வலயத்தில் மீன்பிடித் துறைமுகச் சேவைகள் முறையாக செயற்படுவதில்லையெனவும் மக்கள் வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் மீன்பிடிப் படகுகளைப் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதில்லையெனவும் பிரதிப் பணிப்பாளர், கடற்படை இயக்கம் குழுவில் தெரிவித்தார். இச் செயற்பாடுகள் கடற்றொழில் அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்படுமாயின் கடற்றொழில் அமைச்சுக்கு அதிகாரம் வழங்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கடலில் மீனவர்கள் போக்குவரத்தில் ஈடுபடும்போது அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கடற்படை பொறுப்பு கூற வேண்டியிருப்பதாலும் அது தொடர்பில் கடற்படை தொடர்ந்து பொறிமுறைகளை பின்பற்றி வருவதாலும் இரனதீவுக்கு செல்வதற்கு அங்கீகாரம் வழங்கும் செயற்பாடு கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது பொருத்தமானதென அவர் குறிப்பிட்டார்.

## 2.4 அம்பாறை-திருக்கோவில் கடற்கரை பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்படல்- கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்கள்

குறித்த பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வதற்கான அமைதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தனிப்பட்ட தரப்பினரால் கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களத்துக்கு விண்ணப்பித்துள்ளதாக அத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். இவ் விண்ணப்பம் வழங்கும் நடைமுறையின்போது பொது மக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும் அதன் ஊடாக எழும் பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கப்பட்ட பின் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

பொது மக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்டதொரு குழு தெரிவுசெய்யப்படல் பற்றியும் விடயம் தொடர்பான அடிப்படை கருத்திட்ட யோசனை பற்றிய அறிக்கை, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஆகியவற்றில் காணப்படும் முரண்பாடுகள் தொடர்பில் மீள கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 2.5 மட்டக்களப்பு மாவட்டத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கட்டிடங்களை விளைத்திறனுடையதாக பயன்படுத்தல் - கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்கள்

### 2.5.1 கலாவங்கேணி பிரதேசத்தில் உள்ள கட்டிடங்களை மீள பயன்படுத்தக்கூடியதாக புனரமைத்தல்

கலாவங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் அக் கட்டிடம் புனரமைக்கப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

### 2.5.2 கலாவங்கேணி பிரதேசத்தில் சேதமடைந்த நிலையிலுள்ள பாலத்தை புனரமைத்தல்

குறிப்பிட்ட பிரதேசத்தில் வேறு பாலங்கள் இல்லாததால் இலகு வாகனங்கள் பயணம் செய்யக் கூடிய வகையில் பாலமொன்றை நிர்மாணிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றிய அறிக்கையொன்றை அடுத்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு முன்வைப்பதாக கடற்றொழில் மற்றும் நீரகவளமூல திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## 3. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்

### 3.1 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் (பிரேரணை இல.63)

பொழுதுபோக்காக நீந்தி ஈட்டியினால் தாக்கி மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு , உனவட்டுன, கனஹேன, காலி என்ற இடத்தைச் சேர்ந்த மீனவர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை

கடல் வளங்கள் அழிவதால் மேற்குறிப்பிட்ட முறையில் மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதால் அது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டபின் பவளப் பாறைகளும் அரிதான கடல் மீன் வகைகளும் குறைவாகவுள்ள பிரதேசங்களை அடையாளம் கண்டு குறித்த நோக்கத்திற்காக அப்பிரதேசத்தை ஒதுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றிய திட்டப் பிரேரணையொன்றை முன்வைக்குமாறு கௌரவ உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கிய கௌரவ தவிசாளர் அவர்கள் அதற்கமைய ஆய்வுகளை முன்னடுப்பதாகக் குறிப்பிட்டார்.

### 3.2 கௌரவ சாந்த பண்டார அவர்கள் - (பிரேரணை இல.87)

குருணாகல்,கல்கமுவ, உஸ்கல, சியபலான்கமுவ கடற்றொழில் சங்கத்திற்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கல் தொடர்பிலான கௌரவ உறுப்பினரின் கோரிக்கை

குறித்த பிரேரணைக்கான பதில் அறிக்கையை கௌரவ உறுப்பினருக்கு அனுப்பிவைப்பதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

### 3.3 கௌரவ புத்திக பதிறண அவர்கள் (பிரேர.இல.161)

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் இழந்த வேலைக்கான நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் அஹங்கம,நிதிகம, துர்க்கி இல்லம், 165 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு ஏ.எல்.உபரத்ன என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை

குறித்த பிரேரணைக்கான பதில் அறிக்கையை கௌரவ உறுப்பினருக்கு அனுப்பிவைப்பதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

### 3.4 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் (பிரேர. இல.256)

பலப்பிட்டிய பிரதேசத்திலுள்ள கல்பொக்க, வத்துரகம, மங்கட, ஹரஸ்பொல ஆகிய மீன்பிடிக் துறைமுகங்களில் அமைந்துள்ள கற்பாறைக் தடைகளை நீக்குதல் தொடர்பில் பலபிட்டிய பிரதேச சபைத் தலைவர் திரு. சமன் த சில்வா என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை

கடற்கரைப் பாதுகாப்புக் திணைக்களத்தினால் குறித்த கற்பாறையை நீக்குதல் தொடர்பிலான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை வளங்கள் முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பரிந்துரைகள் கடற்றொழில் மற்றும் நீரகவள திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். அதன் பின் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கற்பாறையை சிதைக்கும் பணிகளை கடற்படைக்கு பொறுப்பளிக்குமாறும் அறிவித்தார்.

### 3.5 கௌரவ சாந்த பண்டார அவர்கள் (பிரேர. இல.347 )

குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மஹவ, மெட்டியாவ, நிக்கவெலயாய "எக்கமுத்து" மீன்பிடிச் சங்கத்திற்கு மீன்பிடி உபகரணங்களையும் மீன் குஞ்சுகளையும் வழங்கல் தொடர்பான கௌரவ உறுப்பினரின் பிரேரணை

குறித்த பிரேரணைக்கான பதில் அறிக்கையை கௌரவ உறுப்பினருக்கு அனுப்பிவைப்பதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

### 3.6 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் (பிரேர. இல.378)

இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் சிவில் பொறியியலாளராக பணிபுரிந்தபோது வேலை நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் முதலாம் ஒழுங்கை, எல்ஸ்மோர், இங்கிரிய என்ற முகவரியைச் சேர்ந்த திரு. டப.எம்.விக்கிரமசூரிய என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை

சம்பந்தப்பட்டவருக்கு பதவிசார்ந்த தகைமைகள் இல்லையென நன்நடத்தைக் காலப் பகுதியில் கண்டறியப்பட்டதால் ஒழுக்காற்று நடபடி முறையின்றியே இவரை பதவி நீக்கம் செய்வதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவர் குறிப்பிட்டார்.

## 4. வேறு விடயங்கள்

### 4.1 கௌரவ அமரகீர்த்தி அதுகோரள அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 4.1.1 பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த வனசீவராசிகள் வலய பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள்

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள அதிகமான குளங்கள் வனசீவராசிகள் வலயத்தினுள் அமைந்திருப்பதால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் பல தொழில்சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக கௌரவ உறுப்பினர் எடுத்துக்கூறினார்.

ஆகவே அது தொடர்பில் தளர்வான கொள்கைகளைப் பின்பற்றுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.
மேற்குறித்த விடயம் பற்றி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தருடன் கலந்தாலோசிப்பதற்காக சம்பந்தப்பட்ட விபரங்களை பெற்றுத்தருமாறு, இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

கடற்றொழிலில் ஈடுபடும்போது சட்ட விரோதமான முறையில் செயற்படுபவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் சுற்றிவலைப்பு பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

#### 4.1.2 ஜனரன்ஜன குளத்தில் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள்

மெதிரிகிரிய தொகுதியில் அமைந்துள்ள ஜனரன்ஜன குளத்தில் திருகோணமலை மற்றும் பொலநறுவை என்ற இரு மாவட்டங்களையும் சேர்ந்த மீன்வர்கள் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருவதுடன் பொலநிறுவை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அநீதி இழைக்கப்பட்டுவருவதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

திருகோணமலை மற்றும் பொலநறுவை என்ற இரு மாவட்டங்களையும் சேர்ந்த மீனவர்களுக்கு தடையின்றி மீன்பிடித் தொழில் ஈடுபடக்கூடிய வகையில் திட்டமொன்றை அமைக்க முடியுமென இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

## 4.2 கௌரவ கஞ்சன விஜேசேகர அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.2.1 காலியில் குளிரூட்டல் நிலையமொன்றை அமைத்தல்

காலியில் குளிரூட்டல் நிலையமொன்றை அமைத்தல் தொடர்பிலான கருத்திட்ட யோசனைகளை முன்வைக்குமாறு முதலீட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

### 4.2.2 சிலாபம் முகத்துவாரத்தில் தொடர்ந்து மணல் படிதல்

சிலாபம் முகத்துவாரத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைந்திருப்பதாகவும் அங்கு தொடர்ந்து மணல் படிவதால் மீன்பிடிப் படகுகளுக்கு அங்கு பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அது தொடர்பில் தற்காலிக அல்லது நிரந்தர தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமெனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

### 4.2.3 புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த தொடுவாவ பிரதேசத்தில் உள்ள சில தற்காலிக மீனவர் இல்லங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்படல்

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த தொடுவாவ பிரதேசத்தில் அமைந்துள்ள சில தற்காலிக மீனவர் இல்லங்கள கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ இராஜாங்க அமைச்சர் குழுவில் வினவினார்.

குறிப்பிட்ட கடலரிப்பினைத் தவிர்ப்பது தொடர்பிலான ஆய்வுகளை நடாத்திவருவதாகவும் தீர்மானங்கள் விரைவில் முன்னெடுக்கப்படுமெனவும் கடற்கரை பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

## 4.3 வெலிகம பிரதேசத்தில் நெத்தலி மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருக்கும் மீன்வர்களின் பிரச்சினைகள் - கௌரவ திலிப் வெதஆரச்சி அவர்கள்

வெலிகம பிரதேசத்தில் நெத்தலி மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருக்கும் மீன்வர்களுக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட மீன்பிடி வலை பாவனை தடை செய்யப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் எடுத்துக்கூறினார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த நெத்தலி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீன்வர்கள் பாவித்துவரும் மீன்பிடி வலைகள், இலங்கை கடற்றொழில் ஒழுங்குவிதிகளுக்கு முரணானவையெனவும் எனவே ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாவித்துவரும் மீன்பிடி வலைகளை அவர்களுக்கு வழங்குவது தொடர்பில் அவர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளார்களெனவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட விடயம் பற்றி தேசிய நீரகவள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினால் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும்வரை சுருக்கிவலை, செவுள் வலை, பெரியவலை ஆகியவற்றைக் கொண்டு அப்பிரதேசத்தில் நெத்தலி மீன் பிடித்தலில் ஈடுபடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அப் பிரதேசத்தில் பாரிய மீன்பிடி வலை தொடர்பான துறைமுகமொன்று இல்லாத காரணத்தால் பெரிய வலைகளை வழங்க முடியாதெனவும் அதற்கு பதிலாக வேறு வலைகளை வழங்க முடியுமெனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

## 4.4 கௌரவ சாணக்கியா ராஹபக்திரன் இராசமாணிக்கம் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.4.1 கடற்றொழில் அமைச்சுக்குச் சொந்தமான கட்டிடங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி பாலத்துக்கு இடது புறத்தில் அமைந்துள்ள இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கட்டிடத்தை ஹோட்டல் பாடசாலைக்கு வழங்குமாறு சுற்றுலா அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனை தொடர்ந்தும் கடற்றொழில் அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறிப்பிட்ட கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்து இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு இல்லையெனவும் அதனை அனுபவிக்கும் உரிமை மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவர் (பதில் கடமை) குழுவில் தெரிவித்தார். சுற்றுலா அமைச்சினால் மாவட்ட செயலாளருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கை, காணி உரித்து உறுதிப்படுத்தப்படாத நிலையில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையினால் நிராகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### 4.4.2 மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் விற்பனை நிலையமொன்றை ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.
தற்போது நாடளாவிய ரீதியில் 25 மீன் வர்த்தக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பிலும் வர்த்தக நிலையமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவர் குறிப்பிட்டார்.

மீன் வர்த்தக நிலையத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தை தெரிவுசெய்யுமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டட பொருட்கள் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கட்டிடம் அதற்குப் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ இராஜாங்க அமைச்சர், கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 4.4.3 அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆழ்கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மீன்வர்களிடமிருந்து மீன் களவாடப்படல்

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆழ் கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களின் மீன் களவாடப்பட்டுவதாக சம்பந்தப்பட்ட தகவல்களை முன்வைத்த கௌரவ உறுப்பினர் அவர்கள், அது பற்றி பலமுறை முறையீடு செய்யப்பட்டுள்ளபோதிலும் சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டில்லையெனவும் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் பற்றி கடற்படைத் தளபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரக வளமூல திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இம் மாத இறுதிக்குகள் குறித்த பிரச்சினைக்கு தீர்வளிப்பதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

#### 4.4.4 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடல்

புதிய மீன்பிடித் துறைமுகங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடும்போது நீண்டகாலமாக மீன்பிடித் துறைமுகங்களாக இயங்கியவருகின்றபோதிலும் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத இடங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

### 4.5 கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 4.5.1 பேரே வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மக்களுக்கான மீன் பிடித் தளமொன்றை அமைத்தல்

கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பேரே வாவிப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டதால் அங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் தங்கள் மீன்பிடித் தளத்தினை இழந்து, பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட மக்களுக்கு மீன்பிடித் தளமொன்றை அமைப்பதற்கு உகந்த இடத்தை தெரிவு செய்து அறிவிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அதுவரை பதிலளிக்கப்படவில்லையெனவும் அக் கோரிக்கையை மீண்டும் அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறும் இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

#### 4.5.2 கொரலவெல்ல மீன்பிடித் துறைமுகல் கடலரிப்பிற்கு உள்ளாதல்

கொரலவெல்லவில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் இரண்டும் கடலறிப்பிற்கு உள்ளாகி சேதமடைந்த நிலையில் இருப்பதால் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மேற்குறிப்பிட்ட நிலை பொதுவான நிகழ்வெனவும் மீன்பிடித் துறைமுகங்கள் யாவற்றையும் நில்அளவை செய்து சேதமடைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதாகவும் அல்லது மாற்று யோசனைகளை பின்பற்றவுள்ளதாகவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

வலுவிலுள்ள மீன்பிடித்துறைமுக சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருவதற்கு எதிர்ப்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

### 4.6 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 4.6.1 காலி நகரத்தில் கடற்றொழில் சார்ந்த வர்த்தக நிலைங்கள் முறையாக அமைக்கப்படாமை

காலி அதிவேக நெடுஞ்சாலையின் வெளியேறும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன் வர்த்தக நிலையங்கள் முறையாக அமைக்கப்படாத காரணத்தால் அப்பிரதேசத்தின் கவர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சின் தலையீட்டுடன் அங்கு வர்த்தக நிலையங்களை முறையாக அமைத்து அவற்றை மீனவர்களுக்கு வழங்குமாறும் அவ் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் கட்டணம் அறவிட முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.
குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

### 4.6.2 காலி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்

காலி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

குறித்த விடயம் தொடர்பில் செயற்படும் கருத்திட்டத்தின் சாத்தியநிலை பற்றிய ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் சுற்றாடல் பாதிப்பு (Environment Impact Assessment-EIA) பற்றிய மதிப்பீடும் சமூக பாதிப்புகள் (Social Impact Assessment-SIA)பற்றிய மதிப்பீடும் நடைபெற்றுவருவதாகவும் இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபன பிரதிப் பொது முகாமையாளர்(பொறியியல்) குழுவில் தெரிவித்தார்.

### 4.6.3 அலங்கார மீன்கள் இறக்குமதியும் மீள் ஏற்றுமதியும்

அலங்கார மீன்கள் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுவது தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.அது பற்றிய நடபடிமுறைகளை பின்பற்றுவதன் ஊடாக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் அமைப்பொன்று அவற்றை மீள் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர், இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையிடம் கேட்டுக்கொண்டார்.

அலங்கார மீன்வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகளுக்கு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

## 4.7 பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் மேம்பாடு- கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் அவர்கள்

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் மேம்பாடு பற்றியும் வட மாகாண மீன்பிடிக் கைத்தொழில் பற்றியும் கௌரவ உறுப்பினர் குழுவில் கேள்வி எழுப்பினார்.

குறித்த விடயம் பற்றி ஆசிய அபிவிருத்தி வங்கி, கொரிய எக்சீம் வங்கி ஆகியவற்றுடன் கலந்தாலோசித்துவருவதாகவும் அவற்றுள் முதலில் நிதி உதவிகளை வழங்க முன்வரும் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.
வட மாகாணத்தில் பல்தின கடற்றொழில் அலுவல்கள் செயற்படுவதில்லையெனவும் மீனவர்களுக்கு அது பற்றிய அறிவு மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் பெற்றுக்கொடுத்து பயிற்சியளிக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

சலுகை அடிப்படையில் பல்தின மீன்பிடிப் படகுகளை வழங்குவது பற்றிய யோசனை கௌரவ தவிசாளர் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் குழுவில் எடுத்துக்கூறினார்.

பல்தின மீன்பிடிப் படகுகளுக்கான பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் பணிகளை ஓசன் பல்கலைக்கழகத்தின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## 4.8 கௌரவ ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

### 4.8.1 இந்திய மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடும் நோக்கத்துடன் இலங்கை வடகடல் பிரதேசத்திற்குள் பலவந்தமாக பிரவேசித்தல்

இந்திய மீனவர்கள் கடந்த ஜூலை 22 ஆம் திகதி இலங்கை வடகடல் பிரதேசத்திற்குள் பலவந்தமாக பிரவேசித்து எமது மீன்வர்களின் மீன்பிடி உபகரணங்களைச் சேதப்படுத்தியுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் எடுத்துரைத்தார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து சேதத்திற்கான இழப்பீடுகளை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார். இரு நாடுகளுக்கிடையே இணக்கப்பாட்டுக்கு வரும்வரை கடற்படையின் உதவியுடன் இந்திய மீன்வர்களின் வருகை கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இந்திய மீன்வர்கள் எமது வடகடல் எல்லைக்குள் பலவந்தமாக பிரவேசிப்பதற்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வளிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அவ்வாறு வந்த இந்திய மீன்வர்கள் பல சந்தர்ப்பங்களில் எமது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

மேற்குறித்த சம்பவம் தொடர்பில் நட்டஈடுகளை வழங்குவது பற்றி இந்திய தரப்பினருடன் கலந்தாலோசிக்கப்பட்டபோது, நட்டஈடுகளை வழங்குவதற்கு பதிலாக மாற்று வழியில் சலுகைகளை வழங்குவதாக இந்திய தரப்பினர் குறிப்பிட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் எடுத்துரைத்தார்.

### 4.8.2 கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் வட மாகாண மீனவர்களின் பிரச்சினைகள்

கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் வட மாகாண மீனவர்கள் அது தொடர்பிலான பல வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அகஸ்ட் 10ஆம் திகதி பனரீன் பிரதேசத்தில் கூட்டமொன்று நடைபெறவுள்ளதாகவும் குறித்த விடயம் பற்றி கலந்தாலோசிப்பதற்கு அங்கு சமூகமளிக்குமாறும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 4.8.3 முல்லைத்தீவு நகரத்திற்கு அருகில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருப்பதால் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினை

முல்லைத்தீவு வரை செல்லும் நெடுஞ்சாலையின் இடது பக்கத்தில் இராணுவ முகாம் அமைந்திருப்பதன் காரணமாக மீனவர்களுக்கு களப்புப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்படுவதில்லையென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு, இலங்கை கடற்படையின் பிரதிப் பணிப்பாளர், கடற்படை இயக்கம், கெப்டன் திரு. ஜீ.எச்.ஜீ.எஸ். உதயங்கன விற்கு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 4.9 திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் காணாமற் போதல் உட்பட்ட வேறு விடயங்கள் -கௌரவ செல்வராஜா கஜேந்திரன் அவர்கள்

### 4.9.1 திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் காணாமற்போதல்

கடந்த மே 23 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் காணாமல் போயுள்ளதாகவும் இவ் விடயம் பற்றி தான் கௌரவ தவிசாளருக்கும்

கௌரவ இராஜாங்க அமைச்சருக்கும் அறிவித்துள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயத்தின் தற்போதைய நிலை பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

மேற்குறித்த சம்பவம் பற்றி வலய நாடுகளுடன் கலந்தாலோசித்துவருவதாகவும் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லையெனவும் மேலும் விசாரணைகளை முன்னெடுத்துவருவதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 4.9.2 யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மயிலிட்டி துறைமுகத்தை மீண்டும் கடற்றொழில் அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல்

மேற்குறித்த விடயம் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.
குறித்த விடயத்தின் சட்ட ரீதியான நிலை மற்றும் வரையறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் முன்வைக்கப்பட்ட யோசனையை செயல்வலுப்படுத்தல் தொடர்பில் கலந்தாலோசித்து தீர்மானிப்பதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 4.9.3 வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடற்றொழிலில் ஈடுபடுதல்

தென் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் மயிலிட்டி பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுவருவதால் இப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

### 4.9.4 வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்

வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு வசதிகளை வழங்குவதுடன் அம் மாகாணங்களைச் சேர்ந்த பருத்தித்துறை, குருநகர் மற்றும் பேசாலை மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மேற்குறித்த மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதுடன் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் கடன் அடிப்படையில் மீன்பிடி உபகரணங்களை அவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதால் பல பிரச்சினைகளுக்கு தீர்வளிக்க முடியுமெனவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

பெருந்தொகையான மக்கள் வாழ்ந்துவரும் பிரதேசத்தில் ஒரு பகுதியினருக்கு பயிற்சிகளை வழங்கல், ஆழ் கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் தொடர்பில் நிகழக்கூடிய குறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 4.10 கேகாலை மாவட்டத்தில் நிலவிவரும் கடற்றொழில் சார்ந்த பிரச்சினைகள்- கௌரவ சுதத் மஞ்சுல அவர்கள்

### 4.10.1 கேகாலை மாவட்டத்தில் நிலவிவரும் நன்னீர் மீன்பிடித் தொழில்சார்ந்த பிரச்சினைகள்

2017 ஆம் ஆண்டு கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த ருவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நன்னீர் குளங்களில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டபோதிலும் அச் செயல் தோல்விகண்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் பற்றி ஆராயப்பட்ட பின் தற்போது அக் குளங்களில் இருக்கும் மீனினங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்தல்

பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

இப் பொறிமுறையுடன் தொடர்புடைய குளங்கள் பற்றிய விபரங்களை எழுத்துமூலம் முன்வைக்குமாறும் அது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

### 4.10.2 கேகாலை மாவட்ட அலங்கார மீன் வளர்ப்புத் திட்டம்

ருவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த அலங்கார மீன்வளர்ப்பு திட்டங்கள் குறிப்பட்டதொரு காலப்பகுதியில் அலங்கார மீன்களை விற்பனை செய்வது தொடர்பில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக கௌரவ உறுப்பினர் எடுத்துக் கூறினார்.

அரசின் தலையீட்டுடன் அவற்றை கொள்வனவு செய்யும் பொறிமுறையொன்றைச் செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 4.10.3 கேகாலை மாவட்டத்தில் கடல் மீன்களுக்கான விலை அதிகரித்தல்

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த உப நகரங்களில் மீன் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்குமாறும் ருவன்வெல்ல நகரத்தில் மொத்த மீன் விற்பனை நிலையமொன்றைத் தாபிக்குமாறும் அது தொடர்பில் ஒத்துழைக்க முடியுமெனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

நாட்டில் கடல் சாராத பிரதேசங்களில் அதிகமான மீன் விற்பனை நிலையங்களை தாபிப்பதற்கு கடற்றொழில் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளதாகவும் அது தொடர்பில் ஒத்துழைக்குமாறும் இராஜாங்க அமைச்சர் கௌரவ கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

**5.** குழு பி.ப.4.00 மணிக்கு,2021.09.09 திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

**கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**மூன்றாவது கூட்டம் – 2021 செப்தெம்பர் 10**

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

கௌரவ தினேஷ் குணவர்தன (தவிசாளர்)
கௌரவ சுசில் பிரேமஜயந்த (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ விஜித பேருகொட (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ (டாக்டர்) (திருமதி) சீத்தா அரம்பேபொல(இராஜாங்க அமைச்சர்)
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ அனுப பஸ்குவல்
கௌரவ யதாமினீ குணவர்தன
கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினிஅமரசூரிய

**சமூகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ டக்ளஸ் தேவானந்தா
கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன
கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ கெவிந்து குமாரதுங்க

**1. ஆண்டறிக்கைகளை ஆராய்தல்**

பாராளுமன்றத்தினால் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் ஆண்டறிக்கைகள் ஆராயப்பட்டதையடுத்து மேற்படி ஆண்டறிக்கைகளுக்கு குழு இணக்கம் தெரிவித்ததுடன் அது பற்றிய குழுவின் அறிக்கை, குழுவின் தவிசாளர் கௌரவ தினேஷ் குணவர்த்தன அவர்களினால் 2021 செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

1.1 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கை

1.2 2019 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிக் கற்கை நிறுவகத்தின் ஆண்டறிக்கை

1.3 2019 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூகவியல் பட்டப் பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை

1.4 2019 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை

1.5 2019 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக் கூற்றுக்கள்

1.6 2019 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

1.7 2019 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்

1.8 2019 ஆம் ஆண்டுக்கான கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகத்தின் ஆண்டறிக்கை

1.9 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்

1.10 2019 ஆம் ஆண்டுக்கான களனி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்

1.11 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை

1.12 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை

குறித்த காலப்பகுதியில் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்காதுள்ள கல்வி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை எதிர்காலத்தில் தாமதமின்றி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2. 2021.03.10 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தின் கூட்டக் குறிப்புக்களிலிருந்து எழும் விடயங்கள்**

**2.1 இலங்கையில் சட்டத்தை பாடமொன்றாக பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்த்தல் (2021.03.10 ஆம் திகதி நடைபெற்ற குழுவின் விடய இலக்கம் 03)**

மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு தமது தலைமையில் துணைக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் தெரிவித்தார். மேற்படி துணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட அரச சட்டத்தரணிகள் சங்கத்தின் அலுவலர்கள், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அலுவலர்கள், தேசிய கல்வி நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் வேறு அரச அலுவலர்களை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவினால் விடயங்களை ஆராய்வதற்கான பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதெனவும், நாட்டில் நிலவும் சீரற்ற சுகாதார நிலைமை காரணமாக மேற்படி குழுவின் அறிக்கை தாமதமடைந்துள்ளதெனவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் மேலும் தெரித்தார்.

கௌரவ சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் துணைக்குழுவின் இவ் ஆய்வுக்காக மேற்கொள்ள எதிர்பார்க்கும் பிரவேசம் தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

சட்டத்தை தனியானதொரு பாடமாக அன்றி தரம் 6 முதல் 11 வரை கற்பிக்கப்படும் பிரசைகள் கல்வி பாடத்தின் ஒரு பகுதியாக பாடசாலை பாடத்திட்டத்தில் உட்புகுத்த எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் மேலும் தெரிவித்தார்.

மேலுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களின் கடமைகள் மற்றும் பிரசைகளின் உரிமைகள் தொடர்பிலான விடயங்களையும், சட்டம் மற்றும் சமூகத்திற்கு இடையிலான தொடர்பு பற்றிய விடயங்களையும் பாடசாலை பாடவிதானத்தில் சேர்க்குமாறு கௌரவ (கலாநிதி) ஹரினி அமரசூரிய அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

## 2.2 ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்தவதற்கான போட்டிப் பரீட்சைகளை நடாத்தல் – கௌரவ திருமதி. கோகிலா குணவர்த்தன (2021.03.10 ஆம் திகதி நடைபெற்ற குழுவின் விடய இலக்கம் 11.2)

பட்டதாரிகளை ஆசிரியர் பயிலுனர்களாக ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பில் காணப்படுகின்ற அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையின் மூலம் தற்காலிக ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் 03 வருட தகுதிகாண் காலத்தின் பின்பு பரீட்சையொன்றை நடாத்தி சேவையில் நிரந்தரமாக்குவதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. பீ.கே.எஸ். சுபோதினீ தெரிவித்தார். மேலும், வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கு வெளிநாட்டு மொழிகளில் பட்டத்தை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாகவும் வட கிழக்குப் பாடசாலைகளின் ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிவித்தார்.

இந்நாட்டு ஆசிரிய மாணவர் விகிதம் தற்போது 17:1 ஆக உள்ளதென கௌரவ இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் சுட்டிக்காட்டினார். விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் ஆசிரியர்களை உரியவாறு பாடசாலைகளுக்கு நியமனம் செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினார்.

பட்டதாரி பயிலுனர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 60,000 ஆசிரியர்களில் 18000 ஆன ஆசிரியர்கள் தற்போது கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், 19 கல்விக் கல்லூரிகளை பல்கலைக் கழக மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு பிரேரிக்கப்பட்டள்ளதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அவர்கள் அறிவித்தார். ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பில் தேசியக் கொள்கையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் அறிவித்தார்.

ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பிலான தேசிய கொள்கையை தயார் செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது தொடர்பில் கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்ள தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

ஆசிரியர் ஆட்சேர்ப்புத் தொடர்பில் ஆராய்ந்து உரிய தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் பாடரீதியாகவும் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்புக்களை செய்ய வேண்டியது எவ்வாறு என்பது பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு தரவுக் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். சகல மாகாண ஆளுநர்களுக்கும் இது பற்றி விளக்கமளித்து ஆட்சேர்ப்புத் தொடர்பில் தீர்மானம்

மேற்கொண்டு அது சம்பந்தமாக கௌரவ உறுப்பினர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சின் செயலாளர் மேலும் அறிவித்தார்.

தற்போது பயிலுனர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 18000 ஆன பட்டதாரிகள் 3 வருட பயிற்சிக் காலத்தின் பின்னர் நடாத்தப்படும் பதவியில் நிரந்தரமாக்கும் பரீட்சையில் சித்திபெறாதபோது அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிக்கல் நிலைமைகள் தொடர்பில் யாதாயினும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக கௌரவ ஜயந்த சமரவீர அவர்கள் வினவினார்.

பாடசாலைத் தொழிலாளிகளாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கும் பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் பெறக்கூடிய முறையியலை தயார் செய்யுமாறு கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் பிரேரணையொன்றாக காணப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரத்தின் சிக்கலான நிலைமைகளை உள்ளடக்கி இது தொடர்பில் அமைச்சரவைக்கு புதிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிக்க வேண்டுமென அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பில் அமைச்சின் துணைக்குழுவொன்றை நியமனம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் 06 மாதங்களுக்குள் அது தொடர்பில் நிலவும் உள்ளக சிக்கல் நிலைமைகளை ஆராய்ந்து சிபாரிசுகளை வெளியிட எதிர்பார்ப்பதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

அதற்கமைய 02 வாரத்துக்குள் சகல தத்துவங்களையும் கொண்டதாக மேற்படி துணைக்குழுவை நியமனம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார். மேற்படி குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பில் தேசிய கொள்கையொன்றை தயார் செய்ய நடவடிக்கை எடுப்பதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

**2.3 யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சிக்கல் நிலைமையை ஆராய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடல் – கௌரவ செல்வராசா கஜேந்திரன் (2021.03.10 திகதி நடைபெற்ற குழுவின் விடய இலக்கம் 11.14.3)**

இது சம்பந்தமாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கௌரவ செல்வராசா கஜேந்திரன் அவர்களுக்கு பதில் அனுப்புமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**2.4 வடமத்திய மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக இலங்கை நிருவாக சேவையின் அலுவலர் ஒருவரை இணைப்புச் செய்தல் – கௌரவ எச்.நந்தசேன (2021.03.10 திகதி நடைபெற்ற குழுவின் விடய இலக்கம் 11.16)**

இது சம்பந்தமாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கௌரவ எச்.நந்தசேன அவர்களுக்கு பதில் அனுப்புமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**4. கௌரவ உறுப்பினர்களின் முன்மொழிவுகள்**

**3.1 கல்வி நடவடிக்கைகளின்போது அரசகரும மொழிமூலம் படிப்படியாக விலகிச் செல்வதுடன் ஆங்கில மொழிமூலம் அவ்விடத்தை அடைந்து வருவதனால் தாய் மொழியின் முன்னேற்றம் இல்லாது போதல் – கௌரவ வாசுதேவ நாணாயக்கார (பிரேரணை இல. 410)**

இந்தப் பிரேரணையை அடுத்துவரும் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்குமாறு கௌரவ வாசுதேவ நாணாயக்கார அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

3.2 **அரசாங்கப் பாடசாலைகளில் இஸ்லாம் பாடத்தை கற்பிப்பதற்கான மௌலவி ஆசிரியர்களின் வெற்றிடங்கள் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புதல் – கௌரவ ரஊப் ஹகீம் (பிரேரணை இல. 75)**

3.3 **பதுளை அல் – அதான் மஹா வித்தியாலயம் மற்றும் பண்டாரவளை சேர் ராஸிக் பரீத் மஹா வித்தியாலயங்களை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தல் – கௌரவ ரஊப் ஹகீம் (பிரேரணை இல. 76)**

3.4 **மே.மா.கொ. தெமட்டகொட கைரியா மகளிர் மஹா வித்தியாலம், தெமட்டகொட கொழும்பு 09 மற்றும் மே.மா.கொ. அல் ஹிக்மா வித்தியாலயம் கொழும்பு 12 ஆகியவற்றை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தல் – கௌரவ ரஊப் ஹகீம் (பிரேரணை இல. 77)**

3.5 **காலி தலாபிட்டிய தெ.மா.கா. முஸ்லிம் மகளிர் கல்லூரியை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தல் – கௌரவ ரஊப் ஹகீம் (பிரேரணை இல.78)**

3.6 **எமது நாட்டின் பாடசாலைகளில் விடயரீதியான ஆசிரியர்களின் தேவை எவ்வளவு என்பது – கௌரவ லசந்த அலகியவன்ன (பிரேரணை இல. 98)**

3.7 **வாத்துவ, தெல்துவ, கனேவத்த புராண விஹாரையில் ஆரம்பப் பிரிவெனாவை ஆரம்பித்தல் – கௌரவ ஜயந்த சமரவீர (பிரேரணை இல. 114)**

3.8 **மார. யடியன மஹா வித்தியாலயத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு கட்டமைப்பை பெற்றுக் கொள்ளல் – கௌரவ புத்திக பத்திறண (பிரேரணை இல. 115)**

3.9 **பாடசாலைகளின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், போதனாசிரியர்களுக்கு வேதனம் அல்லது வாழ்க்கைப் படி செலுத்தல் – கௌரவ உதயன கிரிந்திகொட (பிரேரணை இல. 116)**

3.10 **மாகாண சபை பாடசாலைகளின் நூலக உதவியாளர்கள் உட்பட கல்விசாரா வெற்றிடங்களை நிரப்புதல் – கௌரவ உதயன கிரிந்திகொட (பிரேரணை இல. 117)**

3.11 **சுகாதார ஆலோசனையின் பேரில் பரந்தரளவிலான ஆய்வின் பின்னர் பாடசாலைகளைத் திறத்தல் – கௌரவ உதயன கிரிந்திகொட (பிரேரணை இல. 118)**

இல. 6.2 முதல் 6.11 வரையான பிரேணைகள் தொடர்பிலான பதில்கள் மேற்படி கௌரவ உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

3.12 **2019 பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இடம்பெற்றுள்ள அநீதி மற்றும் அதற்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அடிப்படையாகக் கொள்ளப்படும் முறையியல் – கௌரவ உதயன கிரிந்திகொட (பிரேரணை இல. 119)**

2019 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளது எனவும் அவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமதுங்க தெரிவித்தார்.

கௌரவ உதயன கிரிந்திகொட அவர்களுக்கு இப்பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதென அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.13 கா/அம்பேகம மஹா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்துவது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கை - கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இலக்கம் 121)**

கா/அம்பேகம மஹா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.14 திரு கே.எச். லக்மால் இந்திக்க அவர்களின் மகள் 2021 ஆம் ஆண்டில் காலி சிறிதம்ம வித்தியாலயத்தின் முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கப்படாமை – கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இலக்கம் 122)**

இந்த விடயம் பற்றி கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**3.15 2019 ஆம் உயர் தர மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளி முறையியல் காரணமாக இடம்பெற்ற அநீதி – கௌரவ புத்திக பத்திறண (பிரேரணை இலக்கம் 127)**

அநீதிக்கு ஆளான பிள்ளை தற்போது றுகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அவர்கள் தெரிவித்தார்.
கௌரவ புத்திக பத்திறண அவர்களுக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.16 சகோதர அடிப்படையில் மாத்தறை ராகுல கல்லூரியின் முதலாம் தரத்திற்கு பிள்ளையை அனுமதிப்பது தொடர்பில் மாத்தறையைச் சேர்ந்த திருமதி. ஜே.கே. சுசீலா நில்மினி முன்வைத்துள்ள கோரிக்கை - – கௌரவ புத்திக பத்திறண (பிரேரணை இலக்கம் 142)**
கௌரவ புத்திக பத்திறண அவர்களுக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.17 மாத்தறை பம்புரன சாரிபுத்த இரண்டாம் நிலைப் பாடசாலைக்கு பொறியியல் தொழில்நுட்பவியலுக்கு ஆசிரியர் ஒருவரையும் மேற்படி பாடசாலைக்கு தொழில்நுட்பவியலுக்கான வகுப்பொன்றையும் பெற்றுக்கொடுத்தல் – கௌரவ புத்திக பத்திறண (பிரேரணை இலக்கம் 173)**

கௌரவ புத்திக பத்திறண அவர்களுக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.18 ஹபராதுவ பழைய அபயதான வித்தியாலயம் அமைந்துள்ள காணியை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு சாட்டுதல்– கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இல. 189)**

இந்த விடயம் தொடர்பில் கௌரவ சட்டமா அதிபரின் கருத்தை வினவி அதற்கமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**3.19 மாற/யட்டியன மஹா வித்தியாலயத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு கட்டமைப்பைப் பெற்றுக்கொள்ளல். – கௌரவ புத்திக பத்திறண (பிரேரணை இலக்கம் 192)**

கௌரவ உறுப்பினருக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.20 பட்டதாரிகள், அவர்கள் பட்டம் பெற்றுள்ள விடயத்திற்கு ஏற்புடையதாகாத பதவிகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளமை மற்றும் பல்வேறு பதவி உயர்வுகள், சம்பள அளவுத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதனால் எழுந்துள்ள முரன்பாடுகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏனைய விடயங்கள் – கௌரவ புத்திக பத்திறண (பிரேரணை இலக்கம் 195)**

கௌரவ உறுப்பினருக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.21 டபிள்யூ.எச். ககன ஹங்ச செனெத்மால் எனும் பிள்ளை 2019 ஆம் ஆண்டு கா/ ரிச்மன்ட் வித்தியாலயத்தின் 4 ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்படாமை – கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இல. 203)**

கௌரவ உறுப்பினருக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**3.22 எச்.பி.ஜீ. தேஜ ஶ்ரீ ஆஸிங்சனா எனும் பிள்ளை 2021 ஆண்டு கா/ சங்கமித்தா மகளிர் கல்லூரியின் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படாமை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை – கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இல. 204)**

இப்பிள்ளையின் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**3.23 என்.டபிள்யூ.ஜி. வொசதி சுகந்தரா எனும் பிள்ளை 2021 ஆம் ஆண்டு எந்தவொரு பாடசாலைக்கும் அனுமதிக்கப்படாமை - கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இல. 205)**

இப்பிள்ளையின் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**3.24 தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் திணைக்களத்தின் அமயத் தொழிலாளரி திரு டபிள்யூ.கே. சங்கதாசவுக்கு ஓய்வூதியம் கிடைக்காமை - கௌரவ சந்திம வீரக்கொடி (பிரேரணை இல. 206)**

திரு. டபிள்யூ.கே. சங்கதாச அரசியல் பழிவாங்கல் குழுவின் தீர்மானத்தின் பேரில் மீள்சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார் எனவும் மீள் சேவைக்கு அமர்த்திய போது வயது 45 ஐ தாண்டியிருந்ததன் காரணமாக அவருக்கு ஓய்வூதியம் வழங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் சுட்டிக்காட்டினார்.

திரு. சங்கதாசவுக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொடுப்பதற்குள்ள வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**3.25 போதலேகம மஹா வித்தியாலயத்திற்கு கேட்போர்கூட கட்டிடத்தை நிர்மாணித்தல் – கௌரவ ஜயந்த சமரவீர (பிரேரணை இல. 217)**

கௌரவ உறுப்பினருக்கு இந்தப் பிரேரணைக்கான பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

இதன்போது கொழும்பு மாவட்ட பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுவது தொடர்பில் கௌரவ யதாமினி குணவர்த்தன கருத்து வெளியிட்டார்.

**4. வேறு நடவடிக்கைகள்**

**4.1 ஆரம்ப வகுப்புளின் மாணவர்களது விளையாட்டு மற்றும் கலைத் திறமைகளை வளர்ப்பதற்கான ஆசிரியர்களை பெற்றுக்கொடுத்தல் – கௌரவ உபுல் மகேந்திர ராஜபக்ஷ**

ஆரம்ப வகுப்புகளின் மாணவர்களது விளையாட்டு மற்றும் இசை, நடனம், சித்திரம், பேச்சு போன்ற ஏனைய திறமைகளை வளர்ப்பதற்காக மேற்படி விடயங்களில் நிபுணத்துவம் பெற்றுள்ள ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.2 பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் – கௌரவ விஜித பேருகொட**

பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வர்த்தமானி அறிவித்தலை எக்காலப்பகுதியில் வெளியிட எதிர்பார்க்கப்படுகின்றது என்பது தொடர்பாக கௌரவ உறுப்பினர் வினவினார். ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல மாகாண அதிகாரிகளினதும் இணக்கப்பாடு எய்தப்பட்டுள்ளதா என்பது பற்றியும் வினவினார்.

சகல மாகாணங்களினதும் ஆசிரியர்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அதற்கமைய பாடரீதியாகவும் பாடசாலைகளில் நிலவும் தேவைகளுக்கு அமைவாகவும் ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பணிகள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடல்களை நடாத்தி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**4.3 மொரட்டுவை டி சொய்சா கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தல் மற்றும் வேறு விடயங்கள் – கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த**

**4.3.1 மொரட்டுவை டி சொய்சா கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தல்.**

மொரட்டுவை டி சொய்சா கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.3.2 போமிரிய தேசிய பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமனம் செய்தல்.**

போமிரிய தேசிய பாடசாலையின் நிரந்தர அதிபர் லீவு பெற்று வெளிநாடு சென்றுள்ளதனால் பதில் அதிபர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும், இவர் பாடசாலை நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதில் தடை ஏற்பட்டுள்ளது எனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

மேற்படி பாடசாலையின் பதில் அதிபருக்கு அப்பதவிக்குரிய சகல அதிகாரங்கள் சிறப்புரிமைகள் மற்றும் வசதிளையும் பெற்றுக் கொடுத்து கடமை நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்ளத் தேவையான பின்னணியை உருவாக்கிக் கொடுக்குமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**4.3.3 அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்குதல்.**

அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.4 கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ மாணவர்களை அனுமதித்தல் – கௌரவ (கலாநிதி) ஹரினி அமரசூரிய**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ மாணவர்கள் 100 பேரை இணைத்துக் கொள்ளும் முறையியல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

இது தொடர்பிலான விடயங்களை ஆராய்ந்து கௌரவ உறுப்பினருக்கு எழுத்து மூலம் விடய விளக்கங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

**4.5 கொவிட் நிலைமை காரணமாக வருமானம் வீழ்ச்சியடைந்துள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவது உட்பட வேறு விடயங்கள் – கௌரவ அனுப பஸ்குவல்**

**4.5.1 கொவிட் நிலைமை காரணமாக வருமானம் வீழ்ச்சியடைந்துள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடன் வசதி வழங்குதல்**

கொவிட் நிலைமை காரணமாக வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதனால் முதலாம் ஆண்டில் கடன் வசதி கோராத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள 12 பல்கலைக்கழகங்களின் 2, 3 ஆம் ஆண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக கடன் வசதிகளை கோருவதனால் அவர்களின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.5.2 பொறியியல் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கப்படும் ரூ. 15,000/= ஆன கொடுப்பனவை பல்கலைக்கழகங்களில் சேவையாற்றும் பொறியியலாளர்களுக்கும் பெற்றுக்கொடுத்தல்.**

இந்நாட்டில் பொறியியலாளர் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற ரூ. 15,000/= ஆன கொடுப்பனவை பல்கலைக்கழகங்களில் சேவையாற்றும் பொறியியலாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.5.3 பல்கலைக்கழகங்களில் சேவையாற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களின் பிரச்சினைகள்**

பல்கலைக்கழகங்களில் சேவையாற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கைமுறை காணப்படாமை போன்ற பல சிக்கல்கள் காணப்படுவதனால் மேற்படி சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.5.4 சமுத்திரப் பல்கலைக்கழகத்தை தேசிய பல்கலைக்கழகமொன்றாக மாற்றியமைத்தல்**

சமுத்திர பல்கலைக்கழகத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பொறுப்பேற்று தேசிய பல்கலைக்கழகமொன்றாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.5.5 பிரிவெனாக் கல்வியைப் பெறும் பிக்குமாரின் கோரிக்கைகள்**

பிரிவெனாக் கல்வி பெறும் பிக்குமாரின் கல்விக்கு ஆயுர்வேதம், ஜோதிடம், அமானுஷ்ய அறிவியல் போன்ற பாடங்களை கல்விப் பாடவிதானத்தில் உட்புகுத்துமாறு கோரிக்கை விடுப்பதனால் அது தொடர்பாக கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**4.6 பட்டேமுல்ல தேசிய பாடசாலைக்கு அதிபர் ஒருவரை கோரல் உட்பட மேலும் பல விடயங்கள் – கௌரவ சந்திரம வீரக்கொடி**

**4.6.1 பட்டேமுல்ல தேசிய பாடசாலைக்கு அதிபர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல்**

பட்டேமுல்ல தேசிய பாடசாலையின் நிருவாக நடவடிக்கைகள் தற்போது ஆசிரியர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுவதனால் அப்பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவரை இணைப்புச் செய்யுமாறு கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

**4.6.2 தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவகத்தை (என்.எஸ்.பி.எம். பல்கலைக்கழகம்) மீண்டும் திறந்துவைத்தல்**

சுமார் 30,000 மாணவர்கள் கல்வி பயிலும் என்.எஸ்.பி.எம். பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

**5.** குழு பி.ப. 12.30 இற்கு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---